ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழி

6, 7, 8, 9 பத்துக்கள்

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

திவ்யார்த்ததீபிகை யுரையுடன் கூடியது

ஸ்ரீஸ்வாமியின் அறுபத்தைந்தாவது

திருநக்ஷத்ரபூர்த்தி நினைவுமலராக

வெளியிடப்பட்டது

— மூன்றாம் பதிப்பு —

சென்னை, ரத்தினம் பிரஸ் பிராஞ்சில் அச்சிடப்பட்டது

கிடைக்குமிடம்:

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்

விலை 5—8—0

மன்மத௵ பங்குனி விசாகம்

30-3-56

14527

NATARAJA IYER MEMORIAL LIBRARY

THAN AVUR

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழி

[ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

—:O:—

ஐந்தாம்பத்து—முதல் திருமொழி—வண்டுணுநறுமலர்.

அவதாரிகை:—இவ்வாழ்வார் வாடினேன்வாடி யென்று தொடங்கி முதல் திருமொழியிலே, தமக்குத் திருமந்திரம் லபித்தபடியைப் பேசி, அந்தத் திருமந்திரத்தின் அர்த்தத்தையும் கூடவே ஆராய்ச்சி செய்தருளித் திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லை நிலமான திவ்யதேசங்களிலே சென்று எம்பெருமானை ஸேவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி, திருமந்திரத்தை வெளியிட்டருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான ஸ்ரீபதரிகாச்ரமத்தைத் தேடி வடக்கே எழுந்தருளினவளவில் 'திருப்பிரிதி' என்னும் திவ்யதேசம் நேர்பட, இரண்டாந் திருமொழியால் அதனை அனுபவித்து, அதன்பிறகு வதரியைவணங்கி, அதற்குப்பிறகு ஸ்ரீபதரிகாச்ரமத்தில் ஸந்நிதிகொண் டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைக் கைதொழுது, பிறகு ஸாளக்ராமம், நைமிசாரண்யம், சிங்கவேள்குன்றம், திருவேங்கடம் என்னும் திருப்பதிகளை யாத்திரையடைவே மங்களாசாஸநஞ் செய்து அவ்வளவோடு வடநாட்டுத் திருப்பதிகளின் அநுபவத்தைத் தலைக்கட்டி, அதன்பிறகு இரண்டாம்பத்தின் இரண்டாந் திருமொழி முதலாகத் தொண்டைநாட்டுத் திருப்பதிகள் சிலவற்றை யநுபவிக்கத்தொடங்கி, ஒன்பதாந் திருமொழியோடே அவ்வநுபவத்தைத் தலைக்கட்டி, அதன்பிறகு திருக்கோவலூர் திருவயிந்திரபுரமென்னும் நடுநாட்டுத் திருப்பதிகளிரண்டையும் இரண்டு திருமொழிகளாலநுபவித்து, அதன்மேல் மூன்றாம் பத்தின் இரண்டாந் திருமொழி முதலாகச் சோழநாட்டுத் திருப்பதிகளை யநுபவிக்கத்தொடங்கித் தில்லைத்திருச்சித்திரகூடம், காழிச்சீராமவிண்ணகரம், திருவாலி, திருநாங்கூர்ப் பதினொருதிருப்பதிகள், திருவிந்தளூர், திருவெள்ளியங்குடி, புள்ளம் பூதங்குடி, கூடலூர், திருவெள்ளறை, திருவரங்கம், திருப்பேர்நகர், நந்திபுரவிண்ணகரம் ஆகிய இத்திருப்பதிகள் வரையில் அநுபவித்துத் தலைக்கட்டினார் கீழ் ஐந்தாம் பத்து முடிய.

இனி, திருவிண்ணகர் என்னும் திருப்பதியை மூன்று திருமொழிகளால் மங்களாசாஸநஞ் செய்யத் திருவுள்ளம் பற்றி, அவற்றுள் முதல் திருமொழியாலே 'திருவிண்ணகரப்பனே! ஸம்ஸாரத்தில் எனக்குப் பிறந்திருக்கும் அருசி வாசாமகோசரம்; இனி இந்நிலத்தில் என்னை நீ வைத்திருக்கத் தகாது' என்று தமக்கு பகவத் விஷயத்திலுண்டான ருசியையும் ஸம்ஸார வாழ்ச்சியிலுண்டான அருசியையும் பரக்கவிண்ணப்பஞ் செய்கிறார். ... ... *

வண்டுணுநறுமலரிண்டைகொண்டு பண்டைநம்வினைகெடவென்று* அடிமேல்
தொண்டருமமரரும்பணியநின்று அங்கண்டமோடகலிடமளந்தவனே *
ஆண்டாயுன்னைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல்*
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே. 1

http://acharya.org

அமரரும்	தேவர்களும்	அளந்தவனே	(திருவடிகளால் வியாபித்து) அளந்துகொண்டவனே !
தொண்டரும்	(மற்றுமுள்ள) பக்தர்களும்	ஆண்டாய்	அடியேனை ஆண்டுகொண்ட பெருமானே !
நம் பண்டை வினை கெட என்று	'நமது முன்னைத் தீவினைக ளெல்லாம் தொலைய வேணும்' என்று மநோ ரதித்து,	விண்ணகர் மேயவனே	திருவிண்ணகரில் நித்ய வாஸம் செய்பவனே !
வண்டு உணும் நறு மலர் இண்டை கொண்டு	வண்டுகள் மதுவுண்ணப் பெற்ற மணம் மிக்க பூக் களினாலாகிய மாலைகளை ஏந்திக்கொண்டு	உன்னை காண்பது ஓர் அருள்	உன்னை நான் ஸேவிக்கும்படியான க்ருபையை
அடி மேல் பணிய நின்று	திருவடிகளிலே விழுந்து ஸேவிக்கும்படியாக நின்று	எனக்கு அருளுதி ஏல்	என் விஷயத்தில் செய்தருள்வாயாகில்
அங்கு	அப்போதே	மனை வாழ்க்கையை	(இனி) ஸம்ஸார வாழ்க்கையை
அகல் இடம்	பரந்த பூமியையும்	வேண்டேன்	விரும்பமாட்டேன்.
அண்டமொடு	அண்டங்களையும்		

* * *—இவ்வுலகமெல்லாம் பிறர் வசப்பட்டிருக்கையில் தன் திருவடிகளைப் பரப்பி இலச்சினைபட நடந்து அவற்றை ஆட்படுத்திக் கொண்டது போலவே அடியேனையும் ஆட்படுத்திக் கொள்ள வேணும்; உனது ஸ்வரூபரூபகுண விபூதிகளையெல்லாம் அடியேன் ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கும்படி அருள்புரிய வேணும்; இவ்வளவே அடியேன் வேண்டுவது; இப்பாழும் ஸம்ஸாரத்தில் அடியேனுக்கு இனி வாழ்வுவேண்டா; திருவிண்ணகரிலே வந்து நித்ய ஸந்நிதி பண்ணியிருப்பது ஸபலமாகும்படி இத்தனை யருள்செய்யவேணும் என்றாராயிற்று.

உலகளந்தபோது "பல தேவரேத்தப் படிகடந்தான்" என்கிறபடியே பல தேவர்கள் புஷ்பங்களைத் திருவடிகளிற் பணிமாறி வழிபாடுகள் செய்தமை முன்னடிகளிற் கூறப்பட்டது. 'வண்டுணும்' என்ற அடைமொழியினால் மதுவெள்ள மொழுகப்பெற்ற மலர்கள் என்றதாம். உணும்—உண்ணும்; தொகுத்தல். இண்டை—பூமாலை. அருளுதியேல்—அடியேன் பக்கல் அருள்செய்யத் திருவுள்ளமாகில், எனக்கு உன்னைக் காண்பதோரருள் (செய்யத்தக்கது); இவ்வருளையன்றி மனைவாழ்க்கையை வேண்டேன் என்று முரைப்ப.

இத்திருமொழி வஞ்சிவிருத்தத்தினாலமைந்தது. இறுதிப்பாட்டொழிந்த ஒவ்வொரு பாட்டிலும் "ஆண்டாய்...மேயவனே" என்ற அளவடியிரண்டும் தனிமகுடம். இவ்வுண்மையுணராமல் ஒவ்வொரு பாட்டும் இரண்டடியென்றும் 'ஆண்டாயுன்னை' இத்யாதியான இரண்டடிகள் சேர்ந்து நான்கடியாகின்றதென்றும் பலர் கருதுவது பொருந்ாது. அத்யாபகர்கள் நான்கடிகளை இரண்டடியாகக்கொண்டு இயல் சேவித்துவருவது முன்னோர் முறை. 1

அண்ணல்செய்தலைகடல்கடைந்து அதனுள்கண்ணுதல்நஞ்சுண்ணக்கண்டவனே*
விண்ணவரமுதுணவமுதில்வரும் பெண்ணமுதுண்டவெம்பெருமானே *
ஆண்டாயுன்னைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல்*
வேண்டேன்மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே. 2

அண்ணல் செய்து	'நானே ஸர்வஸ்வாமி' என்பதைக் காட்டிக்கொண்டு	அதனுள் நஞ்சு	அக்கடலினின்று தோன்றின காலகூட விஷத்தை
அலை கடல் கடைந்து	அலையெறிகின்ற கடலைக் கடைந்து	நுதல் கண்	நெற்றிக்கண்ணனான ருத்ரன்

http://acharya.org

தேவர்கள் புஷ்பங்களைத் திருவடிகளிற் பணிமாறி வழிபாடுகள் செய்தமை முன்னடிகளிற் கூறப்பட்டது. 'வண்டுணும்' என்ற அடைமொழியினால் மது வெள்ள மொழுகப்பெற்ற மலர்கள் என்றதாம். உணும்—உண்ணும்; தொகுத்தல். இண்டை—பூமாலை. அருளுதியேல்—அடியேன் பக்கல் அருள்செய்யத் திருவுள்ளமாகில், எனக்கு உன்னைக் காண்பதோர் (செய்யத்தக்கது); இவ்வருளையன்றி மனைவாழ்க்கையை வேண்டேன் என்று முறைப்பாடு.

இத்திருமொழி வஞ்சிவிருத்தத்தினை மைந்தது. இத்திருமொழிக்கு ஒவ்வொரு பாட்டிலும் "ஆண்டாய்...மேயவனே" என்ற அளவடியிரண்டும் தனிமருடம். இவ்வுண்மையுணராமல் ஒவ்வொரு பாட்டும் இரண்டடியென்றும் 'ஆண்டாயுன்னை' இத்யாதியான இரண்டடிகள் சேர்ந்து நான்கடியாகின்றதென்றும் பலர் கருதுவது பொருந்தாது. அத்யாபகர்கள் நான்கடிகளை இரண்டடியாகக்கொண்டு இயல் ஸேவித்துவருவது முன்னோர் முறை. .... (க)

அண்ணல்செய் தலைகடல் கடைந்து அதனுள்
கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே *
விண்ணவ ரமுதுண வமுதில் வரும்
பெண்ணமு துண்ட வெம்பெருமானே *
ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (உ)

அண்ணல் செய்து	'தானே ஸர்வேஸ்வரன்' என்பதைக் காட்டிக்கொண்டு
அலை கடல் கடைந்து	அலையெறிகின்ற கடலைக் கடைந்து
அதனுள் நஞ்சு	அக்கடலினின்று தோன்றின காலகூட விஷத்தை
நுதல் கண்	நெற்றிக்கண்ணனான ருத்ரன்
உண்ண	உட்கொள்ளும்படியாக
கண்டவனே	நியமித்தவனே!,
விண்ணவர்	தேவர்கள்
அமுது உண	அம்ருதபானம் பண்ணுதற்கு
அமுதில் வரும் பெண் அமுது	அந்த அம்ருதத்திலிருந்து ஸாரமாகக் கிளர்ந்து பிராட்டியாகிற அம்ருதத்தை
உண்ட	அநுபவிக்கப் பெற்ற
	எம்பெருமானே!—;
ஆண்டாய் *** வேண்டேன்—.	

* * *—தூர்வாஸமாமுனிவர் தாம் தேவேந்திரனுக்கு அன்புடன் அளித்திட்ட பூமாலையை அவன் அலக்ஷியஞ் செய்தது கண்டு 'இப்படி செல்வச்செருக்குற்ற உன்னுடைய செல்வமெல்லாம் கடலில் ஒளிந்து போகக்கடவன' என்று சபிக்கவே அப்படியே போய்விட, அசுரர் வந்து பொருது அமரரை வென்றிட்டனர்; பிறகு தேவர்களெல்லாரும் திரண்டு வந்து எம்பெருமானைச் சரணமடைய, திருமால் திருவருள்கூர்ந்து கடல்கடைந்து அமுதமளித்து வாழ்வித்தனன் என்பது ப்ரஸித்தம். கடல் கடைகையில் காலகூட விஷம் கடலினின்று தோன்றிற்றாக, அதனை ஆர்க்குக் கொடுப்பதென்று பார்க்கையில் அக்ரதாம்பூலம்

http://acharya.org

வேண்டிநிற்கும் சிவபிரானுக்கே கொடுப்பது தகுதியென்று துணிந்து அப்பிரானுக்கு உண்ணக்கொடுத்த வரலாறு முதலடியிற் கூறப்பட்டது.

அக்கடலில் புறவமுது, உள்ளமுது என இரண்டு அமுதமுண்டாயின; புறவமுதாகிய உப்புச்சாறு தேவர்கட்களிக்கப்பட்டது; "சீதக்கடல் உள்ளமுது" எனப்பட்ட பிராட்டியாகிய உள்ளமுது தன்னால் ஸ்வீகரிக்கப்பட்டது என ரஸோக்தியாக அருளிச்செய்வது இரண்டாமடி.

'ஆண்டாயுன்னைக்காண்பதோர்' என்ற தொடரை ஒன்பது பாட்டிலுஞ் சேர்த்து அநுஸந்திப்பது. பகவத்விஷய ப்ராவண்யத்திலும் விஷயாந்தர விரக்தியிலும் தமக்குள்ள உறுதியை ஒருகாலுக்கு ஒன்பதின்காலாக உரைக்கிறபடி.

அண்ணல் செய்து = தன்னுடைய ஸ்வாமித்வத்தைப் பிரகாசிப்பித்துக் கொண்டு என்றாவது, தன்னுடைய ஔதார்யத்தைக் காட்டிக்கொண்டு என்றாவது, பொருள் கொள்ளலாம். **அலைகடல்** = அலைகளையுடைய கடல் என்றால் ககரவொற்றுமிகும்; அலையெறிகின்ற கடல் என்க. சிவனுக்கு நெற்றியில் மூன்றாவது கண் உள்ளதனால் '**நுதற்கண்**' எனப்படுவான். .... (உ)

குழல்நிற வண்ண நின் கூறுகொண்ட
தழல்நிற வண்ணன் நண்ணார் நகரம்
விழ * நனிமலை சிலைவளைவுசெய்து, அங்
கழல்நிற வம்பது வானவனே *
ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (ங)

குழல் நிறம் வண்ண	திருக்குழலின் நிறம் போன்று நீலமான நிறத்தையுடையவனே!,
நின் கூறு கொண்ட	உனது திருமேனியிலே ஒரு பகுதியை இடமாக வுடையனும்
தழல் நிறம் வண்ணன்	நெருப்பின் நிறம்போன்ற நிறமுடையனுமான ருத்ரனால்
நண்ணார் நகரம் விழ	பகைவரான அசுரர்களின் முப்புரம் முடியும்படியாக
நனி மலை	மிகப் பெரிதான மேருமலை போன்ற
சிலை	வில்லை
வளைவு செய்து	வளைத்து
அங்கு	அதுதன்னிலே
அழல் நிறம் அம்பு அது ஆனவனே	நெருப்புப்போன்ற அம்பில் ஆவேசித்து நின்றவனே!
ஆண்டாய் * * * வேண்டேன் —.	

* * * — முற்காலத்தில் தாரகாஸுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று வானத்துப் பறந்துசெல்லுந் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களை யடைந்து மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த விடங்களிற் பறந்து சென்று பலவிடங்களின் மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கிவருகையில் அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர்

http://acharya.org

முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ரஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதி சேஷனை வில்நாணியாகவும் கொள்ள, வாயுவாகிய சிறகமைந்த அக்நியை முனையாக வுடைய அம்பின் ஸ்தானத்திலே விஷ்ணு நிற்க, இவ்வளவு அமைப்புடனே த்தஸர்நத்தனைச்சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பில் ன்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்ட ன்—என்பது சிவபிரான் திரிபுரமெரித்த வரலாறு. இந்த த்ரிபுர ஸம்ஹாரம் ய்தது சிவனேயாகிலும் இது நிறைவேறியதற்கு முக்கிய காரணம் திருமாலே யன்க. மஹாபாரதத்தில் கர்ணபருவத்தில் இருபத்தினன்கா மத்தியாயம் முதலாக நான்கு அத்யாயங்களில் இவ்வரலாறு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது; அங்கு "அக்நிம் ஸோமம் விஷ்ணுமவ்யயம் யஜ்ஞவாஹநம்| ஶரம் ஸங்கல்பயாமாஸ தேவ விஶ்வகர்மா மஹாமநா:" என்றும், "விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ:| தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம் ஸ விஷேஹே மஹேஶ்வர:." என்றுமுள்ள ச்லோகங்கள் காண்க. எம்பெருமான் சிவனுக்கு அந்தராத்மா வாக இருந்ததனாலும் அம்பாக அமைந்ததனாலும் இக்காரியம் எளிதாகக் கை கூடிற்றென்கை. திருவாய்மொழியில் "புரமொரு மூன்றெரித்து" (1—1—8.) என்று த்ரிபுரதஹநத்தை எம்பெருமானுடைய காரியமாகவே சொல்லிற்றும் இதுபற்றியே.

குழல்நிறவண்ண—கரிய திருமேனியுடையாய்! என்றபடி. நின்கூறு கொண்ட தழல்நிற வண்ணன்=எம்பெருமானுடைய ஸௌசீல்யகுணத்தைப் பற்றிப் பேசும்போது தாமஸ தெய்வமான ருத்ரனுக்கும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங்கொடுத்து ஆதரிக்குமவனென்று ஆழ்வார்கள் ஈடுபட் டருளிச்செய்வது வழக்கம்; திருவாய்மொழியில் "வலத்தனன் திரிபுரமெரித்த வன்" (1—3—9) என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "பஶ்யைகாதஶ மே ருத்ராந் தக்ஷிணம் பார்ஶ்வமாஶ்ரிதாந்=பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷி ணம் பார்ச்வமாச்ரிதாந்" என்ற மோக்ஷதர்ம வசநத்தை எடுத்துக் காட்டியிருப் பது இங்கே அநுஸந்தேயம். "தபஸா தோஷிதஸ்தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா| ஸ்வபார்ஶ்வே தக்ஷிணே ஶம்போர் நிவாஸ: பரிகல்பித:=தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா, ஸ்வபார்ச்வே தக்ஷிணே சம்போர் நிவாஸ: பரிகல்பித:." என்றொரு வசநமும் இருபத்தினலாயிரப்படியிற் காண்ப தாண்டு. [சிவன் பண்ணின தவத்தினால் திருவுள்ளமுவந்த திருமால் அவனுக் குத் தனது வலவருகிலே வாஸஸ்தாந மமைத்துக் கொடுத்தருளினன்—என்பது இதன் பொருள்.]

"ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளுந்தனியுடம்பன்" என்றும், "அக்கும் புலியினதளுமுடையா ரவரொருவர் பக்கம்நிற்க நின்ற பண்பர்" என்றும் ("நின்கூறுகொண்ட தழல்நிறவண்ணன்" என்று இவ்விடத்

http://acharya.org

னும்) இங்ஙனே ஆழ்வார்கள் அடிக்கடி அருளிச்செய்கிறார்களே, சிவன் முதலானோர் எப்போதும் எம்பெருமானுடைய திருமேனியைப்பற்றி யிருக்கிறார்களோ? என்றொரு சங்கை பிறக்கக்கூடும்; இந்த சங்கையும் இதற்குப் பரிஹாரமும் பூருவர்களின் வியாக்கியானங்களிலேயே உள்ளன: மேல் உதாஹரித்த திருவாய்மொழிப்பாசுரத்தின் வியாக்கியானங்களிலே—"ஸர்வகாலமும் இவர்கள் எம்பெருமானுடைய திருமேனியிலே யிருப்பார்களோ வென்னில்; ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுத்தருளும்; அது மஹாகுணமாகையாலே ஆழ்வார்கள் எப்போதும் மொக்க அருளிச்செய்துகொண்டு போருவர்கள்; ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாயிருக்க மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பார்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஒரோ கலஹங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து கலஹந்தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் 'இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார் பற்று' என்று பின்னும் ப்ராப்தி சொல்லிவைக்குமாபோலே." என்றருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

உன்னிடத்தில் உள்ளன்பு இல்லாத தாமஸர்களிடத்திலும் ஸௌசீல்யங் காட்டி அபிமானித்துக் காரியங்கள் செய்தருளுகிறாயே, பரமபக்தனான அடியேன் பால் திருவுள்ளமிரங்கி உன்னைக்காண்பதோரருள் அருளலாகாதோ? என்றவாறு. .... (௩)

நிலவொடு வெயில்நில விருசுடரும்
உலகமு முயிர்களு முண்டொருகால் *
கலைதரு குழவியி னுருவினையாய்
அலைகட லாலிலை வளர்ந்தவனே *
ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௪)

ஒரு கால்	(பிரளயகாலமாகிற) ஒரு ஸமயத்தில்,
நிலவொடு வெய்யில் நிலவு இரு சுடரும்	நிலாவோடும் வெய்யிலோடும் கூடி ஸஞ்சரிக்கிற சந்திரஸூரியர்களையும்
உலகமும்	உலகங்களையும்
உயிர்களும்	(அங்குள்ள) பிராணிகளையும்
உண்டு	திருவயிற்றிலே வைத்து நோக்கி
கலைதரு	மிகச்சிறியவடிவுகொண்ட
குழவியின் உருவினை ஆய்	குழந்தைரூபியாய்க் கொண்டு
அலை கடல்	அலையெறிகின்ற கடலினிடையே
ஆல் இலை வளர்ந்தவனே	ஆலந்தளிரில் கண்வளர்ந்தருளினவனே!

ஆண்டாய் * * * வேண்டேன்—.

* * *—திருவிண்ணகர்மேயவனே! ஸம்ஸார வாழ்க்கையில் வெறுப்புற்று உன்னைக் காண்பதில் காதல்கொண்டுள்ள எனக்கு அருள்புரிவது உனக்கு அரு

http://acharya.org

...மயோ? அரிய பெரிய காரியங்களையும் எளிதாகச் செய்தவனல்லையோ நீ; சந்த்ரிகையோடு கூடின சந்திரன், ஆதபத்தோடுகூடின ஆதித்யன் முதலான எல்லாத் தேசுப்பொருள்களையும் ப்ரளய வெள்ளங்கொள்ளாமே திருவயிற்றில் வைத்துக்காத்து ஒரு சிறு குழந்தையாய்க்கொண்டு அவ்வெள்ளத்தினிடையே தோன்றியதோர் ஆலமரத்தினிலையிலே துயில்கொண்டனையே; இவ்வரிய காரியம் உனக்கு எளிதானபோது எனக்கு அருள்செய்வதுதான் அரிதோ? என்றவாறு.

கலைதருகுழவி=' கலா ' என்னும் வடசொல் 'பதினாறில் ஒருபங்கு' என்று பொருள்படும் முகத்தால் மிகச்சிறுமையை உணர்த்திற்றாகும்: இளங்குழந்தை என்றபடி. இனி, உலகத்திலுள்ள குழந்தைகள் போலன்றியே அறிவுமிக்க குழந்தை என்னவுமாம்; அப்போது சாஸ்த்ரமென்னும் பொருளதான ' கலா ' சப்தம் இலக்கணையால் அறிவுக்கு வாசகமாகும். .... (ச)

பாரேழு கடலேழு மலையேழுமாய்ச்
சீர்கெழு மிவ்வுலகேழு மெல்லாம் *
ஆர்கெழு வயிற்றினி லடக்கிநின்று அங்கு
கோரேழுத்தோருருவானவனே *
ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (ரு)

பார் எழும்	ஏழுதீவுகளோடு கூடிய பூமிக்கும்	இ உலகு எழும் எல்லாம்	இவ்வுலகங்களேழையும்
கடல் எழும்	ஸப்தஸாகரங்களுக்கும்	ஆர் கெழு வயிற்றினில்	அழகுமிக்க திருவயிற்றிலே
மலை எழும்	ஸப்தகுலாசலங்களுக்கும்		
ஆய்	நிர்வாஹகனாயிருந்து கொண்டு	அடக்கி நின்று	அடக்கிவைத்திருந்தவனாய்
அங்கு	அப்படிப்பட்ட ப்ரளயம் வந்த காலத்து,	ஓர் எழுத்து ஓர் உரு ஆனவனே	அகாரத்திற்கு முக்கியமான பொருளாயிருப்பவனே!
சீர் கெழும்	அழகு மிக்க		

ஆண்டாய் * * * வேண்டேன்—.

* * *—எம்பெருமானுடைய அகடிதகடநா ஸாமர்த்தியத்தையே மீண்டு மருளிச்செய்கிறார்.

பாரேழு கடலேழு மலையேழுமாய்=" நாவலந்தீவே இறலித்தீவே, குசை யின்தீவே கிரவுஞ்சத்தீவே, சான்மலித்தீவே தெங்கின்தீவே, புட்காரத்தீவே யெனத்தீவேழே, ஏழ்பெருந்தீவிற்கு மேழ்பொழிலெனப்படும்" என்ற திவாகர நிகண்டின்படி ஏழுவகைப்பட்ட தீவுகளையுடைத்தான பூமி என்று பொருள்படப் ' பாரேழும் ' எனப்பட்டது.

கடலேழும்=" உவரோடு கரும்பு மது நெய் தயிர் பால் புனல், மாகட லேழென வகுத்தனர் புலவர் " என்னப்பட்ட ஸப்தஸாகரங்களும்,

http://acharya.org

மப ... ரலகா
யெனக், குலவரைபோழுங கூறும்மன்ப'' எ... ... ... தங்களும்:
ஆய் என்றது இவற்றுக்கெல்லாம் எம்பெருமானே நிர்வாஹக னென்கை. இவற்றின் ஸ்திதியெல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பாதீந மென்றபடி.

ஓரெழுத் தோருருவானவனே !—1. "அகரமுதலவெழுத் தெல்லாம்" என்கிறபடியே எல்லாவெழுத்துகட்கும் மூலமான யாதொரு அகாரமுண்டு, அதற்குப் பொருளானவனே! என்கை. அகாரமானது எழுத்துகட்கெல்லாம் மூல காரணமாயிருப்பதுபோலே உலகுகட்கெல்லாம் மூலகாரணமாயிருப்பவனே! என்பதும் விவக்ஷிதம். .... (௫)

கார்கெழு கடல்களும் மலைகளுமாய்
ஏர்கெழு முலகமுமாகி * முத
லார்களு மறிவரு நிலையினையாய்ச்
சீர்கெழு நான்மறை யானவனே *
ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௬)

கார் கெழு	மேகங்கள் மிகப்படிக் திருக்கப் பெற்ற	முதலார்களும்	ப்ரதாநரான பிரமன் முதலியோர்க்கும்
கடல்களும்	ஸமுத்ரங்களுக்கும்	அறிவு அரு நிலையினை ஆய்	அறியமுடியாத ஸ்வபாவத்தை யுடையவனும்
மலைகளும்	மலைகளுக்கும்		
ஆய்	தாரகனும்	சீர் கெழு நான் மறை ஆனவனே	சிறந்த நான்குவேதங்களுக்கும் ப்ரதிபாத்யனாயு மிருக்கும் பெருமானே !,
ஏர் கெழும்	ஒழுங்குபட்டிருக்கிற		
உலகமும் ஆகி	லோகங்களுக்கும் நிர்வாஹகனும்	ஆண்டாய் * * * வேண்டேன்—.	

* * *—மேகங்கள் நீர்கொண்டெழுவதற்காகப்படியும் கடல்களையும் மலைகளையும் ஸ்வஸங்கல்பத்தால் நிலைநிற்கச் செய்தருள்பவனே !, ஸகலசராசரங்களையும் சரீரமாகக் கொண்டுள்ளவனே !, பிரமன் சிவனிந்திரனென்று பெருமதிப்பாகச் சொல்லப்படுகின்ற தேவர்களாலும் 'இப்படிப்பட்டது, இவ்வளவுடையது' என்று அளவிட்டறியமுடியாத ஸ்வரூப ஸ்வபாவங்களையுடையவனே !, நான்கு வேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுபவனே ! நீ இப்படிப்பட்டவனா யிருக்கிறா யென்பதை நான் எட்டிநின்று கேட்டுப்போவதல்லாமல் உன்னுடைய அஸாதாரணாகாரத்தை நான் ஸாக்ஷாத்கரிக்கும்படி என்பக்கலிலே அருள்செய்வாயாகில் நானும் மெய்யே இந்த ஸம்ஸாரவாழ்க்கையை அருவருத்தேனாவேன் என்றவாறு.

நம்மைப்போலே ஜ்ஞானகமாணங்களை யுடையரான பிரமன் சிவன் முதலிய தேவர்களை 'முதலார்களும்' என்று சொல்லிற் கூறியது—அவர்களை முழுமுதற்

1. திருக்குறள்—1.

கடவுளாக நினைத்துப் போற்றும் பிறரது கொள்கையாலென்ப. இனி, "முதலாவார் மூவரே" என்ற பொய்கையார் ஸ்ரீஸூக்திகொண்டு மென்னலாம்.

நான்மறையானவனே !=நால்வேதங்களையும் பயந்தருளினவனே! என்னவுமாம். .... (சு)

உருக்குறு நறுநெய்கொண் டாரழலில்
இருக்குறு மந்தணர் சந்தியின்வாய் *
பெருக்கமோடமரர்க ளமர நல்கும்
இருக்கினி லின்னிசை யானவனே *
ஆண்டா யுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (எ)

இருக்கு உறும் அந்தணர்	வேதம்வல்லவரான பிராமணர்கள்
அமரர்கள்	தேவதைகளினால்
பெருக்கமொடு அமர	(தாங்கள்) செல்வம்பெருகி வாழும்படியாக
சந்தியின் வாய்	ஸந்தியாகாலந்தோறும்
உருக்குறு நறு நெய் கொண்டு	உருக்கின மணம்மிக்க நெய்யைக் கொண்டு
ஆர் அழலில்	ஆர்ந்த அக்கினியில்
நல்கும்	ஹோமம் பண்ணுவதற்கு உறுப்பான
இருக்கினில்	வேதத்திலுள்ள
இன் இசை ஆனவனே	பிரணவத்திற்குப் பிரதிபாத்யனானவனே !
ஆண்டாய் * * * வேண்டேன்—.	

* * *—வேதமோதியுணர்ந்த அந்தணர்கள் ஸந்த்யாகாலந்தோறும் உருக்கின நெய்யைக் கொண்டு அக்கினியில் ஹோமஞ்செய்வதற்கு மந்திரமாகிய யாதொரு வேதமுண்டு, அதன் உறுப்பாகிய பிரணவத்தினால் ப்ரதிபாத்யனா யுள்ளவனே !.

வேதத்தில் "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:" என்றும் "சித்ரயா யஜேத பசுகாம:" என்றும் "ஸோமாரௌத்ரம் சருந்நிர்வபேத் ப்ரஜாகாம:" என்றும் "வைச்வதேவம் ஸாங்க்ரஹணீம் நிர்வபேத் க்ராமகாம:" என்றும் ஒவ்வொரு பலனுக்கும் ஸாதகமாக யஜ்ஞங்கள் சொல்லப்பட்டுள்ளன; அவற்றை விதிப்படி அனுட்டிப்பவர்கள் அப்பலன்களைப் பெற்று மகிழ்கின்றனர்; இதுபற்றியே 'பெருக்கமோடு அமர நல்கும்' எனப்பட்டது. பெருக்கமாவது செல்வம்; செழிப்புமாம். 'அமரர்கள்' என்றது அமரர்களினால் என மூன்றும் வேற்றுமைப் பொருள்பட நின்றது. இந்திரன் வருணன் முதலிய தேவர்களினால் தாங்கள் செழிப்புற்று அமர்வதற்காக அவர்களை உத்தேசித்து ஹோமஞ்செய்கிறவென்றபடி.

இருக்கு='ருக்' என்ற வடசொல்விகாரம்; இச்சொல் வேதங்களுக்குப் பொதுப் பெயரும் ஒருவேதத்துக்குச் சிறப்புப்பெயருமாக வழங்கும். சந்தி—ஸந்த்யா.

http://acharya.org

இன்னிசையானவனே=‘இசை’ என்னுஞ் சொல் லக்ஷிதலக்ஷணையால் பிரணவத்தைச் சொல்லும்; எங்ஙனேயெனில், இசையாவது ஸ்வரம்; ஸ்வரமென்பது பிரணவத்திற்கும் வாசகம்; “யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:” என்றது காண்க. “ஓங்காரோ பகவாந் விஷ்ணு:” என்றதும் முணர்க. .... (௭)

> காதல்செய் திளையவர் கலவிதரும்
> வேதனை வினையது வெருவுதலாம் *
> ஆதலி னுனதடி யணுகுவன் நான்
> போதலர் நெடுமுடிப் புண்ணியனே *
> ஆண்டாயுனைக்காண்பதோர் அருளெனக் கருளுதியேல் *
> வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே. (௮)

போது அலர் நெடு முடி	உரியகாலங்களிலுண்டான புஷ்பங்களையணிந்த நீண்ட திரு வபிஷேகத்தையுடைய	கலவி அது	கலவிக்கு அடியாகவுள்ள
புண்ணியனே	பரிசுத்தனே!,	வினை	கருமமானது
இளையவர்	இளம்பெண்கள்	வெருவுதல் ஆம்	(எனக்கு) அச்சந்தருவதாக வுள்ளது;
காதல் செய்து	அன்பு செய்து	ஆதலில்	ஆகையினால்,
தரும்	கொடுக்கிற	உனது அடி நான் அணுகுவன்	(அந்தக் கருமம்தொலையும் படி) உனது திருவடி களை நான் வந்து பணிகின்றேன்;
வேதனை	துக்கரூபமான	ஆண்டாய் * * * வேண்டேன்—	

* * *—நான் செய்த தீவினைகளை நினைக்கப்புகுந்தால் எனக்கு உடல் நடுங்குகின்றது; அநர்த்தங்களிலே கொண்டு மூட்டும்படியான விஷயாந்தர போகங்களுக்குக் காரணமான தீவினைகள் பல்லாயிரம் நான்செய்துளேனாதலால் அத்தீவினைகளின் பலனாக இன்னமும் நாம் எவ்வளவு வேதனைகளை யநுபவிக்க நேருமோவென்று மிகவும் அஞ்சாநின்றேன்; திருவிண்ணகர்மேயவனே! உனது திருவடிகள் அஞ்சினார்க்குப் புகலிடமாதலாலும், நீ தானும் ஆச்ரிதரக்ஷணம் பண்ணக்கடவேனென்று விளையம் சூடியிருக்கிறாயாதலாலும் என் அச்சந்தீர உன் திருவடிகளை வந்து பணிந்தேன்; உன்னையொழிந்த விஷயங்களில் ருசியைப் போக்கின நீயே உன்னை நான் கண்ணாலேகாணலாம்படி என்மீது அருள்புரிவாயாகில் நன்று என்றாராயிற்று.

இளையவர் காதல்செய்து தருங்கலவி=புருஷனிடத்துள்ள ஸர்வஸ்வத்தையும் கொள்ளைகொள்வதற்காக மேலுக்கு அளவற்ற ஆசையைக் காட்டிப் பெண்கள் ஸம்ச்லேஷிப்பார்களே, அதைச் சொல்லுகிறது. அதுதான், கண்டார்க்குக் கவிழ்தலையிட்டுத் திரியவேண்டும்படியும் மேல் நரகமாகும்படியும் ஸ்வரூபஹானியை விளைக்கக்கடவதாகையாலே **வேதனை** என்கிறது. .... (௮)

சாதலும்பிறத்தலு மென்றிவற்றைக்
காதல்செய்யாதுன கழலடைந்தேன் *
ஓதல்செய்நான்மறையாகி உம்ப
ராதல்செய் மூவுருவானவனே! *
ஆண்டாய்! உனைக்காண்பதோர் அருளெனக்கருளுதியேல் *
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர்மேயவனே! (௯)

ஓதல் செய் — பாம்பரையாக ஓதப்பட்டு வருகிற
நால் மறை ஆகி — நான்கு வேதங்களுக்கும் நிர்வாஹகனாய்
உம்பர் ஆதல் செய் மூ உரு ஆனவனே — மேன்மையுடையவராகச் செய்யப்பட்டிருக்கின்ற பிரமன் சிவனிந்திரனுகிய மூவர்க்கு நியாமகனாயிருப்பவனே!
சாதலும் பிறத்தலும் என்ற இவற்றை — சாவும் பிறப்புமான ஸம்ஸாரத்தை
காதல் செய்யாது — விரும்பாமல்
உன கழல் அடைந்தேன் — உனது திருவடிகளை, அடைந்தேன்;
ஆண்டாய் * * * வேண்டேன்—.

* * *—1. "சாமாறுங் கெடுமாறும் தமருற்றார் தலைத்தலைப்பெய்து, ஏமாறிக்கிடந்தலற்று மிவை யென்னவுலகியற்கை" என்று ஞானிகள் வெறுக்கும் படியான இந்த ஸம்ஸாரஸ்வபாவத்தை என் சொல்வோம்!; மரணஸமயத்திலே படும் கஷ்டங்களையும் பின்பு நரகங்களிற் படுங்கஷ்டங்களையும் மறுபடியும் கருக்குழியிலே வந்து புகுந்து படும் கஷ்டங்களையும் நினைத்து நினைத்து வெறுத்து 'இருள்தருமா ஞாலத்து ளினிப்பிறவி யான்வேண்டேன்' என்று இந்நிலத்திற் பிறவியைக் காறியுமிழ்ந்து, நித்ய விபூதிப்ராபகமான உன் திருவடிகளைப் பணிந்தேன்; அருள்புரியவேணும் திருவிண்ணகர் மேயவனே! என்கிறார்.

ஓதல்செய் நான்மறையாகி=2. "வாசோ வாசோவேஹாய வத வாசாத:" என்னுமாபோலே ஏட்டில் எழுதப்படுகையின்றியே பாம்பரயா அத்யயநம் பண்ணியே வருகின்ற நான்கு வேதங்களுக்கும் ப்ரவசந கர்த்தாவாயிருப்பவனென்கை.

உம்பராதல்செய் மூவுருவானவனே!=3. "ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்னும்படியாகச் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ள ப்ரஹ்ம ருத்ர இந்திரர்களைச் சரீரமாகக்கொண்டு அவர்களுக்கு அந்தராத்மாவாயிருந்து காரியங்கள் நடத்துமவனே! என்கை. .... (௯)

பூமரு பொழிலணி விண்ணகர்மேல் *
காமருசீர்க் கலிகன்றிசொன்ன *
பாமரு தமிழிவை பாடவல்லார் *
வாமன னடியிணை மருவுவரே. (௰)

---

1. திருவாய்மொழி 4-9-2. 2. தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணம்-காடகம்-3-9.
3. நாராயணுநுவாகம்.

http://acharya.org

பூமரு	(எப்போதும்) பூக்கள் பொருந்தியிருக்கப் பெற்ற
பொழில்	சோலைகளாலே
அணி	அலங்கரிக்கப்பட்ட
விண்ணகர் மேல்	திருவிண்ணகர்த் திருப்பதி விஷயமாக,
காமரு சீர் கலிகன்றி சொன்ன	விரும்பத்தக்க ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மியையுடையரான திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
பா மரு தமிழ் இவை	தமிழ்ப்பாசுரங்கள் நிறைந்த இத்திருப்பதிகத்தை
பாட வல்லார்	ஓதவல்லவர்கள்
வாமனன்	ஸர்வேச்வரனுடைய
அடி இணை	உபயபாதங்களை
மருவுவர்	பொருந்தப்பெறுவர்.

* * *—பூமாறாத பொழில்களால் சூழப்பட்டு நித்ய வஸந்தமாயுள்ள திருவிண்ணகர்த் திருப்பதி விஷயமாகத் திருமங்கையாழ்வாரருளிச்செய்த இத்திருமொழியை ஓதவல்லவர்கள், "வேண்டேன் மனைவாழ்க்கையை" என்று இவர் வேண்டாததைத் தவிர்ந்து "ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக்கருளுதியேல்"! என்று வேண்டின திருவருளைப்பெற்றுப் பொலிவர் என்று இத்திருமொழி கற்றார்க்குப் பலன்சொல்லித் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—வண்டு அண்ணல் குழல் கலைவாடு பார் கார் உருக்குறு காதல் சாதல் பூமரு பொறுத்தேன்.

முதல் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து—இரண்டாந்திருமொழி,

பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில்.

அவதாரிகை:—கீழ்த்திருமொழியில் "ஆண்டாயுன்னைக் காண்பதோரருளெனக்கருளுதியேல் வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே!" என்று ஒருகால் சொன்னாப்போலே ஒன்பதின்காற் சொல்லி ஸம்ஸாரவாழ்க்கையில் தமக்குண்டான வெறுப்பை விண்ணப்பஞ் செய்தாராழ்வார்; அப்படி விண்ணப்பஞ் செய்யச்செய்தேயும் எம்பெருமான் கடுக ஓடிவந்து அதனைத் தவிர்த்துத் தன்னைக் கொடுத்தருளிற்றிலன்; இன்னமும் இங்கே இவரைக் கொண்டு காரியங்கொள்ளத் திருவுள்ளம்பற்றி யிருப்பனாகையாலே அது செய்

திலன்; ஆழ்வாரோவென்னில், 'நாம் இப்படி துடிக்கச்செய்தேயும் இவன் அருள்புரிகின்றானில்லை; கீழ்க்கழிந்த காலமெல்லாம் நாம் விஷயாந்தரங்களிலே மண்டிக் கைகழிந்து போனதுபோல் இன்னமும் போய்விடுவோமென்று எம்பெருமான் நினைத்திருக்கிறான் போலும்; இப்போது நமக்கு மெய்யே ஆர்த்தி விளைந்ததை விண்ணப்பஞ் செய்தோமாகில் ஒருகால் திருவுள்ளமிரங்கக்கூடும்' என்றெண்ணி, அநாதிகாலம் தாம் ஸம்ஸாரத்திலே உழன்றபடியையும் பலயோனிகளிலும் பிறந்து வருந்தினபடியையும் அர்த்த காமங்களை விரும்பிப் போந்தபடியையும் இந்திரியங்களுக்கு வசப்பட்டொழிந்தபடியையும், இப்போது மேல்வரக்கடவதான நரகயாதனையை நினைந்து அஞ்சுகிறபடியையும் பரக்க விண்ணப்பஞ்செய்து 'இவை என்றால் கழித்துக்கொள்ளக் கூடியவையாயில்லை; என்னுடைய குற்றமொன்றையும் பாராதே நமக்கு இங்கொழிக்கவொழியாத படியான ஸம்பந்தத்தையே பார்த்து, பிராட்டியின் பரிக்ரஹமாயிருக்கிறேனென்பதையும் திருவுள்ளம்பற்றி அடியேனை ஸ்வீகரித்தருளவேணும் என்று திருவிண்ணகரப்பன் திருவடிகளிலே விழுந்து கதறுகிறதாயிருக்கிறது இத்திருமொழியும் மேல்திருமொழியும். .... *

பொறுத்தேன்புன்சொல்நெஞ்சில் பொருளின்பமென விரண்டும்
இறுத்தேன் * ஐம்புலன்கட் கடனாயின வாயிலொட்டி
அறுத்தேன் * ஆர்வச்செற்றமவை தன்னை மனத்தகற்றி
வெறுத்தேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே! (க)

புன் சொல் — (பிறர் சொல்லும்) அற்பமான வார்த்தைகளை
நெஞ்சில் — நெஞ்சிலே
பொறுத்தேன் — பொறுத்துக் கொண்டிருந்தேன்;
ஐம்புலன்கள் கடன் ஆயின — பஞ்சேந்திரியங்களுக்கும் கடமையாக ப்ராப்தமாயுள்ள
பொருள் இன்பம் என இரண்டும் — அர்த்தம், காமம் என்ற இரண்டையும்
இறுத்தேன் — அநுபவித்துத் தீர்த்தேன்;
ஆர்வம் செற்றம் — (வேண்டியவர்களிடத்தில்) ப்ரீதியென்ன, (வேண்டாதவர்களிடத்தில்) பகை யென்ன ஆகிய இவற்றை
வாயிலொட்டி — 'அவசியம் நிறைவேற்றி விடக்கடவேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி
அறுத்தேன் — நிறைவேற்றிவிட்டேன்;
அவை தன்னை — அந்த ராகத்வேஷங்களை
மனத்து அகற்றி — (இப்போது) நெஞ்சில் நின்றும் நீக்கினவனாய்க் கொண்டு
வெறுத்தேன் — அவற்றில் வெறுப்புற்றவனாகி,
திருவிண்ணகர் மேயவனே நின் அடைந்தேன் — திருவிண்ணகர்ப் பெருமானே! உன்னைச் சரணம் புகுந்தேன்.

* * *—புன்சொல் நெஞ்சில் பொறுந்தேன்=இதற்கு இரண்டு படியாகப் பொருளுரைக்கலாம்; ஆபாஸ பந்துக்கள் பேசும்படியான இழிவான சொற்களையெல்லாம் தாங்கிக்கொண்டிருந்தேன் என்னுதல்; ஸமஸ்த கல்யாண குணாநிதி

http://acharya.org

யாய்ச் செந்தாமரைக் கண்ணனாயிருக்கிற ஸர்வேச்வரனை ஸ்துதிக்கவேண்டிய பாசுரங்களைக்கொண்டு நீசர்களை 'பனியிரும் குழலாளன்' 'சுந்தரத்தோள் படைத்தான்' என்றிப்படி புகழ்ந்து கவிபாடிப்படி புன்மையான கவிகளை நெஞ்சிலே தரித்துக்கொண்டிருந்தேன் என்னுதல். முதற்சொன்ன பொருளின் கருத்து யாதெனில்;—விபீஷணாழ்வான் ராவணனுக்கு ஹிதமான வார்த்தைகள் சொல்லச்செய்தேயும் அவன் அவற்றை மதியாமல் "ஹாம்தாயிக்ஷு வஹாம் வஸநழ்—த்வாம் து திக் குலபாம்ஸநம்" [இக்குலத்திற்கு இழுக்கான நீ ஒழிந்து போ] என்று திரஸ்கரித்து வார்த்தை சொல்ல, அதனால் நெஞ்சு புண்பட்ட விபீஷணன் 'இனி நாம் இந்த ப்ராக்ருதரோடு இருக்கக்காது' என்று உடனே அவர்களை விட்டொழிந்து பெருமான் திருவடிகளிலே வந்து புகுந்தான்; அப்படியே நானும் ஆபாஸபந்துக்களின் நீசபாஷணங்கள் செவியில்விழும்போதே அவர்களை வெறுத்தொழிந்து படக்கென வந்து உன் திருவடிகளிலே விழ வேண்டியது ப்ராப்தமாயிருக்கும் அது செய்யாதே நெடுநாள்வரையில் அந்த ப்ராக்ருதர்களின் புன்சொற்களையெல்லாம் ஜுகுப்ஸையின்றி நெஞ்சிலே தாங்கிக் கொண்டிருந்தேனே! என்று பூர்வவ்ருத்தத்திற்கு அநுதாபப்படுகிறபடி.

ஐம்புலன்கட் கடனாயின பொருளின்பமென விரண்டு மிறுத்தேன்—தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று நால்வகைப்பட்ட புருஷார்த்தங்களில் தர்மத்தையும் மோக்ஷத்தையும் உபேக்ஷித்து அர்த்தகாமங்களை விரும்பி யொழிந்தேனென்கை. இவ்விரண்டும் பஞ்சேந்திரியங்களுக்குக் கடன்போலும்; கடன்பட்டால் அது எப்படி அவசியம் கொடுத்தே தீர்க்கக்கதோ அப்படி இந்திரியங்களுக்கு அவசியம் விளைவிக்கவேண்டியவை அர்த்த காமங்கள் என்க. இறுத்தேன்—கடனைக் கொடுத்தேதொலைப்பாரைப்போலே அர்த்தகாமங்களை இந்திரியங்களுக்குச் செலுத்தினேனென்கை.

ஆர்வச்செற்றம் வாயிலொட்டி யறுத்தேன்—அநுகூலரிடத்திலுண்டாகும் ப்ரேமம் ஆர்வமென்கிறது; பிரதிகூலர் பக்கலுண்டாகும் த்வேஷம் செற்றமென்கிறது; அர்த்தகாமங்களை ஸாதிக்க முயற்சி செய்யும்போது அவற்றுக்குச் சிலர் அநுகூலராகவும் சிலர் பிரதிகூலராகவும் ஏற்படுவர்; அநுகூலரிடத்து ஆர்வமும் பிரதிகூலரிடத்துச் செற்றமும் உண்டாவது இயல்பு; அவை உண்டானவாறே அநுகூலரை நோக்கி 'நான் என் உயிரையளித்தாகிலும் உமக்கு வேண்டிய நன்மைகளைச்செய்கிறேன்' என்றும், பிரதிகூலரை நோக்கி 'உன்னைக்கூண்டோடு கொலைசெய்து விடுகிறேன்' என்றும் பிரதிஜ்ஞைகள் செய்வதும் வழக்கம்; அப்படியே நானும் பிரதிஜ்ஞைசெய்து அதைக் காரியத்தாலும் தலைக்கட்டி விட்டேனென்கிறார். வாயில்—வாயினால், ஒட்டி—பிரதிஜ்ஞைசெய்து, அறுத்தேன்—செய்தும் முடித்தேன். ஆக இவ்வளவும் தமது முன்னைய நிலைமைகளைச் சொல்லி, மேல் இப்போதைய ஆபிமுக்யத்தை அருளிச்செய்கிறார் 'அவை தன்னை மனத்தகற்றி வெறுத்தேன் நின்னடைந்தேன்' என்று. 'அவை தன்னை' என்றது—முதலடியிற் சொன்ன பொருளின்பங்களை என்றுவது, மூன்றாமடியிற்

http://acharya.org

சொன்ன ஆர்வச்செற்றங்களை யென்றாவது கொள்ளலாம். அர்த்தகாமங்களில் நசையொழிந்து, (அல்லது, ராகத்வேஷங்களைத் தவிர்ந்து) நின்னடைந்தேன் என்றாராயிற்று. .... (௧)

மறந்தே னுன்னைமுன்னம் மறந்தமதியில்மனத்தால் *
இறந்தே னெத்தனையும் அதனாலிடும்பைக்குழியில் *
பிறந்தேயெய்த்தொழிந்தேன் பெருமான் ! திருமார்பா ! *
சிறந்தேன்நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே! (௨)

திருவிண்ணகர் மேயவனே !—;		அதனால்	ஆசையினாலே
உன்னை	(எப்போதும் ஸ்மரிக்கத் தகுந்தவனான) உன்னை	இடும்பை	துக்கங்களுக்கு ஆஸ்பதமான
முன்னம்	முதலிலே	குழியில்	கர்ப்பக்குழியில்
மறந்தேன்	மறந்தொழிந்தேன் ; (அதற்குமேலே)	பிறந்தே	இடைவிடாத ஜனன மரணங்களை யுடையனாய்க் கொண்டு
மறந்த மதி இல் மனத்தால்	இப்படி மறந்தோமே ! என்கிற அநுதாப வுணர்ச்சியுமில்லாத மனத்தையுடைமையினால்	எய்த்து ஒழிந்தேன்	அசர்த்தப்பட்டுப் போனேன் ;
		திரு மார்பா பெருமான்	பிராட்டியை மார்விலே யுடைய பெருமானே !
எத்தனையும்	மிகவும் [அசித்தைக் காட்டிலும்]	நின் அடிக்கே	உனது திருவடிகளுக்கே
இறந்தேன்	கீழ்நிலைக் கெட்டுப் போனேன் ;	சிறந்தேன்	(இப்போது) தகுந்தவனாக அமைந்தேன்.

* * *—முமுக்ஷுவுக்கு அர்த்த பஞ்சகஜ்ஞானம் முக்கியமானது ; எம்பெருமானை உணர்தல், தன்னையுணர்தல், உபாயத்தையுணர்தல். பேற்றையுணர்தல், பேற்றின் விரோதியையுணர்தல், ஆகிய இவை அர்த்த பஞ்சகஜ்ஞானமெனப்படும். இதில் முதலதான பரஸ்வரூபஜ்ஞானம் தமக்கு இல்லாமையை அருளிச்செய்கிறார் **மறந்தேனுன்னை முன்னம்** என்று. முதல் முதலாக உன்னையன்றோ நான் மறந்தொழிந்தே னென்கிறார். முன்னம் என்பதற்கு அநாதிகாலமாக என்றும் பொருள் கொள்ளலாம். கீழ்ப்பாட்டிற் சொன்னபடி பொருளின்பங்களை ஆதரித்ததுபோல ஒரு மூலையில் உன்னையும் நான் ஆதரித்திருக்கலாமே, அந்தோ ! அது செய்யப்பெற்றிலேன் !, உன்னை மறந்தே போனேன். ஒருகாலும் நெஞ்சிலும் நினைக்கக்கூடாதவற்றை [அர்த்தகாமங்களை] இடைவிடாது சிந்தித்தேன்; ஒரு நொடிப்பொழுதும் மறக்கவொண்ணாத உன்னை இறைப்பொழுதும் நினையாதொழிந்தேனந்தோ !. "ஏயேயோ நாராயணஸூதா—த்யேயோ நாராயணஸ் ஸதா'' என்று சாஸ்த்ரங்கள் முறையிடாநிற்க, பாவியேன் விபரீதனானேனென்கிறார். கீழ்க்கழிந்த காலங்களில் உன்னை நான் ஒருநாளும் **அறிந்திலேன்** ' என்றன்றோ இங்குச்சொல்லவேண்டும்; அப்படி சொல்லாமல் **மறந்தேன்** என்னலாமோ ? சிலகாலம் அறிந்திருந்து பின்னை அவ்வறிவு மாறினாலன்றோ

http://acharya.org

'மறந்தேன்' என்று ப்ரயோகிக்கலாம்; இதுவரையில் உன்னைப்பற்றின அறிவு ஒருகாலுமெனக்கு உண்டாயிருக்கவில்லையென்று சொல்லவேண்டுமிடத்து மறந்தேனென்னலாமோ? என்று ஒரு சிறிய சங்கை பிறக்கக்கூடும்; இதற்குப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்வது காண்மின்:—"உன்னை யென்கிற விடத்திலே ஸம்பந்தத்தை ஸ்மரித்தமாகையாலே, அந்த ஸம்பந்தம் ஸ்வாபாவிகமேயாகையாலே சிலநாள் ஸ்மரித்து மறந்தாப்போலே தோன்றிற்று." என்று.

இவ்விருள் தருமாஞாலத்தில் எம்பெருமானை மறப்பதென்பது ஸஹஜமே; இது வியப்பன்று; ஆயினும், 'இப்படி மறந்தொழிகின்றோமே!' என்கிற அநுதாப வுணர்ச்சியாகிலும் இடையிடையே தோன்றுமாயின் நன்றாகும்; அந்தோ! அவ்வநுதாபமு மில்லாமையாலே கெட்டேனென்கிறார் மறந்த மதியில் மனத்தா லிறந்தேன் என்று. இறந்தேன் என்றது சைதந்யம் கெட்டு அசேதநமேயாகப் பெற்றேனென்கை. "அஸந்நேவ ஸ பவதி। அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்" என்ற உபநிஷத்துக்காண்க. 'எத்தனையும் இறந்தேன்' என்கையாலே அசித்திற்காட்டிலும் கடைகெட்டவனானேன் என்பது பெறப்படும். அசித்துக்கு அடியோடு உணர்ச்சியில்லாமையாலே அது பகவத்விஷயத்தை நினையாதிருப்பது ஸஹஜம்; அறிவுக்கு நிலமான நான் அறிவின் காரியம் பெறாமையாலே அசித்திலும் கடைகெட்டேனென்கை.

அதனாலிடும்பைக்குழியில் பிறந்தே எய்த்தொழிந்தேன்=அநுதாபமு மில்லாமையால்தான் மேன்மேலும் துக்கங்களையே விளைக்கக்கடவதான ஸம்ஸாரத்திலேயே பிறப்பது மிறப்பதுமாய் அநர்த்தப்பட்டுப்போனேன். இதைக்கடாக்ஷித்தே ஆழ்வான் வரதராஜஸ்தவத்தில் "திரநமயயிவோ ஹதா வெஹவய" என்றருளிச்செய்தா னென்னலாம்.

எய்த்தொழிந்தேன் என்றதற்குப் பெரியவாச்சான்பிள்ளை மருமமறிந்து வெளியிட்ட ஆழ்பொருள் காண்மின்;—"[எய்த்தொழிந்தேன்] இன்னும் பிறக்கைக்கடியான கர்மவாஸனையுண்டேயாகிலும் பிறக்கைக்கு த்ரவ்யமில்லாதபடியானேன்;—கர்மவாஸனை கிடந்து பிறக்கவேண்டிற்றாகிலும் பிறக்கைக்கு க்ஷமனல்லேன்" என்று. பலபல யோனிகளிற் பிறந்து பிறந்து, நித்யமான ஆத்மவஸ்து வுங்கூட உருவழிந்து போயிற்றென்னும்படியாய்த்தேன், இனி கர்மவாஸனைகள் கிடந்தாலும் என்னால் ஜனிக்கமுடியாது என்றவாறு. இது ஸ்லோக்தி. திருமார்பா! நின்னடிக்கே சிறந்தேன்=இப்படி அஸக்தனான என்னை எப்படி அங்கீகரிப்பது! என்று விசாரிக்கவேண்டாமல் குற்றங்களையும் நற்றமாக உபபாதிக்கிற பெரிய பிராட்டியார் திருமார்பிலேயே இடைவிடாது இருந்துகொண்டு புருஷகாரம் செய்யும்போது இனி எனக்கு என்ன குறை? நான் உன் திருவடிகட்குத் தகுந்தவனே. .... (உ)

http://acharya.org

மானேய்நோக்கியர்தம் வயிற்றுக்குழியிலுழைக்கும் *
ஊனேயாக்கைதன்னை உதவாமையுணர்ந்துணர்ந்து *
வானே மாநிலமே வந்துவந்தென் மனத்திருந்த
தேனே * நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௯),

வானே மாநிலமே	நித்யவிபூதிக்கும் லீலாவிபூதிக்கும் நிர்வாஹகனே!,
உவந்து வந்து	(பரமபதத்தில் நின்றும்) உவப்போடே வந்து
என் மனத்து இருந்த தேனே	என்மனத்தில் நித்யவாஸம் பண்ணுகின்ற பரமபோக்யனே!
திருவிண்ணகர் மேயவனே!—;	
மான் எய் நோக்கியர் தம்	மானைப்போன்ற கண்ணழகையுடையரான ஸ்த்ரீகளினுடைய
வயிறு குழியில்	கர்ப்பக்குழியில் இருந்துகொண்டு
உழைக்கும்	கஷ்டப்படுமதாய்
ஊன் எய்	மாம்ஸாதிகள் நிறைந்துள்ள
ஆக்கை தன்னை	சரீரத்தினுடைய
உதவாமை உணர்ந்து உணர்ந்து	உபயோகமற்ற தன்மையை நன்றாக அறிந்து
நின் அடைந்தேன்	உன்னைவந்து பற்றினேன்.

* * *—இந்த உடல் எப்படிப்பட்டது? ஸ்த்ரீகளின் கர்ப்பப்பையிலே கிடந்து படாதபாடுகளும்பட்டு[1]. "நீண்டகுடலும்பும் செந்நீரும்சீயும் நரம்பும் சேறிதசையும் வேண்டா நாற்றம் மிகுமுடல்" என்கிறபடியே மாம்ஸாதிகள் மலிந்துகிடப்பது; இப்படிப்பட்ட உடற்பிறவி காசுக்காகாதென்று நன்குணர்ந்தேன்; அது தொலைவதற்காக உன் திருவடிகளிலே வந்து சேர்ந்தேன் திருவிண்ணகர்மேயவனே!.

ஸாதாரணமாக, 'மாதர்களுடைய வயிற்றுக்குழியிலுழைக்கும்' என்று சொல்லவேண்டுமிடத்து 'மானேய் நோக்கியர்தம்' என்று அவர்களுடைய கண்ணழகை வருணித்துப்பேசுவது அவசியமன்றே; கலவிக்கு உரிய மாதர்களைச் சொல்லுவதானாலன்றோ அப்படி வருணித்துப் பேசவேணும்; இங்கே வருணித்துப்பேசினதேன்? என்னில்; தங்களுடைய உருவமும் போகத்தையும் கெடச்செய்தே 'ஒருப்ரஜை உண்டாகவேணும்' என்று நோன்பு நோற்கிறார்களே!, ஒரு ஆத்மாவை ஸம்ஸாரியாக்கிக் கெடுப்பதற்கன்றோ அவர்கள் இப்படி நோன்பு நோற்பது!, தங்கள் கண்ணழகு முதலியவற்றால் காதலரைப் பிச்சேற்றிக் கொண்டு போருபோக்காமல் பல நோன்புகள் நோற்று ஒரு ஆத்மாவை இந்த இருள்தருமாஞாலத்தில் வரவழைத்து அநர்த்தப்படுத்துகிறார்களே! என்கிற கருத்துப்படவாம்.

இரண்டாமடியில், "ஊனேயாக்கை," "ஊனேராக்கை" என்பன பாடபேதங்கள். இப்படிப்பட்ட தேஹம் உபயோகமற்றதென்று நன்கறிந்து நின்னடைந்தேன்.

---

1. திருவரங்கக்கலம்பகம்.

http://acharya.org

வானே! என்பதனால் நித்யவிபூதிநாதத்வமும், மாநிலமே! என்பதனால் லீலாவிபூதிநாதத்வமும் ஆக உபயவிபூதிநாயகத்வம் சொல்லப்பட்டது.

'வந்துவந்து' என்றவிடத்து 'வந்து உவந்து' என்று பிரிப்பதேயன்றி, 'வந்து வந்து' என்று இரட்டைக்கிளவியாகவுங் கொள்வர். பலகாலும் வந்து என்றபடி. அதாவது—என்மனத்திலே புகுரவேணுமென்று நீ ஆசைகொண்டு வருவாய், நான் நெட்டித்தள்ளுவேன், மறுபடியும் வேறொரு ஸமயம்பார்த்து வருவாய்; அப்போதும் நான் ஏமாராதேயிருந்து நெட்டித்தள்ளுவேன்; இப்படி நீ பலகாலும் வந்து வந்து ஸ்வாதந்திர்யாலே என்மனத்தை இருப்பிடமாகக் கொண்டு விட்டாய் என்றவாறு. இதனால் எம்பெருமானுடைய அபிமான விசேஷம் விளங்கும். .... (௯)

பிரிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன் * நீபணித்தவருளென்னு மொள்வாளுருவி
யெறிந்தேன் * ஐம்புலன்களிடர்தீர வெறிந்துவந்து
செறிந்தேன் * நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே! (௪)

திரு விண்ணகர் மேயவனே!—;

பெற்ற மக்கள் — வயிற்றில்பிறந்த பிள்ளைகள்
பெண்டிர் — மனைவியர்
என்ற இவர் — இத்யாதிகளான பந்துக்கள்
பின் உதவாது அறிந்தேன் — {முடிவுகாலத்துக்குத் துணையாகமாட்டார்களென்பதைத் தெரிந்து கொண்டவனாய்
பிரிந்தேன் — {(அவர்களை) விட்டொழிந்தேன்;
நீ பணித்த அருள் என்னும் — {(முன்பு இருந்தேர்த் தட்டிலே) நீ அருளிச் செய்த சரமச்லோக மாகிற
ஒள் வாள் — ஒளிபொருந்திய கத்தியை
உருவி — உறையில் நின்றும் கழற்றி,
ஐம்புலன்கள் இடர் தீர — {சப்தாதிவிஷயங்களாலே உண்டாகிற துயர் தொலையும்படி
எறிந்தேன் — வீசினேன்;
வெறிந்து வந்து — {அகிஞ்சநனாய்க் கொண்டு வந்து
நின் அடிக்கே செறிந்தேன் — {உனது திருவடிகளுக்கே பொருந்தினேன்.

* * *—அறிவுடையார், மக்களென்றும் மனைவியரென்றும் சில பந்துக்களை ஆதரித்துப்போருவது எதுக்காகவென்னில், உடல் இளைத்தவாறே அருகில் இருந்துகொண்டு காரணமிருநாமாக எம்பெருமான் திருநாமங்களைச் செவியிலே ஓதுவர்களென்பதற்காக; அந்த பந்துக்கள் தாம் செய்வதென்னென்னில், ஸமயங்களிலே ஸர்வஸ்வத்தையுங் கொள்ளைகொண்டும் மரணஸமயத்திலும் விடாதே 1. "சோர்வினாற் பொருள்வைத்ததுண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து" என்கிறபடியே 'எந்த சந்து பொந்துகளில் என்ன பொருள் புதைத்து வைத்திருக்கிறாய், சொல்லு' என்று பிச்சிக்கொண்டிருப்பார்களேயன்றி, பகவந்

1. பெரியாழ்வார் திருமொழி 4—5—3.

நாமமாகிற அம்ருதத்தை லவலேசமும் செவியிலே ஊட்டமாட்டார்கள்; ஆகவே இந்த ஆபாஸ பந்துக்களெல்லாம் * துணையும் சார்வுமாகுவார்போல் அட்டைகள் போல் சுவைப்பவரேயன்றி நல்வழிக்குச் சிறிது முதவார்கள் என்பதை நன்கறிந்துகொண்டு அவர்களிடத்து நசையைவிட்டுத் தொலைத்தேனென்கிறார் முதலடியால்.

ஆபாஸ பந்துக்களைவிட்டு, ஆப்தபந்துவான நீ திருவாய்மலர்ந்தருளிய சரமச்லோகத்தைப் பற்றினேனென்கிறார் மேல். "𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯 𑌮𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌵𑍍𑌰𑌜। 𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃." என்கிற சரமச்லோகம் அர்ஜுநனை நோக்கி அருளிச்செய்ததாகிலும், அவனொருவனை வியாஜமாகக்கொண்டு ஸகல சேதநர்க்குமே உஜ்ஜீவநமாக அருளிச்செய்ததாகையாலும், கண்ணபிரானுடைய நிர்ஹேதுக க்ருபைதானே அந்த ஒரு ச்லோகமாகப் பரிபக்வமாயிற்று! என்னலாம்படி யிருக்கையாலும், 'நீ பணித்த அருள்' என்ற சொல்லாலே சரமச்லோகத்தைக் குறிப்பிடுகிறார். அருள் என்பதும் சரமச்லோகமென்பதும் பர்யாயம் போலும். அதில் சொன்ன அர்த்தத்தைக்கடைப்பிடித்து என்னுடைய துன்பங்களையெல்லாம் தொலைத்துக்கொண்டேன் என்கிறாரென்க. சரமச்லோகத்தினுள் "மாம் ஏகம்=என்னொருவனையே" என்றருளிச்செய்த வாக்கியத்தையே சிக்கனப்பிடித்துக்கொண்டபடி.

ஒள்வாளுருவியெறிந்தேன்=சரமச்லோகத்தைக் கத்தியாக உருவகப்படுத்திக் கூறினதற்கேற்ப மேலே ஐம்புலன்களிடர் என்றதை வினைத்தூறாகக்கொள்க. கத்தியினால் தூறுகளை அறுத்தொழிக்குமாபோலே சரமச்லோகார்த்த ஜ்ஞானத்தினால் வினைத்தூறுகளை வேரறுத்தேனென்கை. ஆசார்ய ஹ்ருதயம் இரண்டாம் பிரகரணத்தில் "ஒள்வாளுருவி வினைத்தூற்றை வேரறுவித்து" என்றதுங் காண்க.

"இடர்தீரவெறிந்துவந்து" என்றவிடத்து 'வெறிந்து வந்து' என்று மெடுக்கலாம், 'எறிந்து வந்து' என்றுமெடுக்கலாம். வெறிந்துவந்து—வெறுமையை உடையேனாய் வந்து; "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" இத்யாதிப்படியே அகிஞ்சநனாய் வந்து என்றபடி. 'எறிந்துவந்து' என்னில், 'ஒள்வாளுருவி யெறிந்தேன்' என்று முற்சொன்ன எறிதலை அநுவதித்ததாகும்; "வாடினேன் வாடி....கூடினேன் கூடி....ஓடினேனோடி....நாடினேன் நாடி" என்னுமாபோலே. .... (௪)

பாண்டேன் வண்டறையுங் குழலார்கள் பல்லாண்டிசைப்ப *
ஆண்டார்வையமெல்லா மரசாகி * முன்னாண்டவரே
மாண்டாரென்றுவந்தார் அந்தோ மனைவாழ்க்கைதன்னை
வேண்டேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௫)

http://acharya.org

பாண்	இசைப்பாட்டையுடையனவாய்
தேன்	தேனைப் பருகுகின்ற
வண்டு	வண்டுகள்
அறையும்	ரீங்காரம் செய்யப்பெற்ற
குழலார்கள்	கூந்தலையுடையரான மாதர்களால்
பல்லாண்டு இசைப்ப	மங்களாசாஸனம் பண்ணப் பெற்று
அரசு ஆகி	அரசர்களாயிருந்துகொண்டு
வையம் எல்லாம்	பூமண்டலம் முழுவதையும்
ஆண்டார்	ஆட்சிபுரிந்தார்கள்,
முன் ஆண்டவரே மாண்டார்	(இப்படி) முன்பு ஆண்டு வந்த அவர்களே மாண்டு போனார்கள்,
என்று வந்தார்	என்ற சொல்லுக்கு இலக்காய்க்கொண்டு வருகிறார்கள்;
அந்தோ	ஐயோ!;

திரு விண்ணகர் மேயவனே!—;

மனை வாழ்க்கை தன்னை வேண்டேன்	(இப்படி நிலையற்றதான) ஸம்ஸாரவாழ்க்கையை வெறுத்தவனாய்க் கொண்டு
நின் அடைந்தேன்	உன்னைப் பற்றினேன்.

* * *—திருவாய்மொழியில் "ஒரு நாயகமாயோட வுலகுடனாண்டவர், கருநாய் கவர்ந்தகாலர் சிதைகியபானையர், பெருநெடுங்காண இம்மையிலே பிச்சை தாங்கொள்வர்" என்றும், "அடிசேர்முடியினராகி அரசர்கள்தாந்தொழ, இடி சேர்முரசங்கள் முற்றத்தியம்ப விருந்தவர், பொடிசேர்துகளாய்ப்போவர்கள்" என்றும் "வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பரென்பதில்லை" என்று மருளிச்செய் தவைபோலே யிருக்கிறது இப்பாசுரம். பிராகிருதமான செல்வம் நிலைநிற்க மாட்டாதாகையாலும், கைங்கரியமாகிற அப்ராக்ருத செல்வமே நிலைநிற்பதாகை யாலும் இம்மைச்செல்வத்தை வெறுத்து மறுமைச்செல்வத்தை விரும்பி உன்னைப் பணிந்தேனென்கிறார்.

"கண்டார்வணங்கக் களியானைமீதே கடல்சூழுலகுக்கொரு காவலராய் விண்டோய் நெடு வெண்குடைநீழலின்கீழ் விரிநீருலகாண்டு" என்றாப்போலே நிலமுழுது மாளுமரசர்களைச்சுற்றி வண்டார் பூங்குழல்மாதர் பலரிருந்து 'இச் செல்வம் மாறாதே நிலைநிற்கவேணும்' என்று பல்லாண்டு பாடுவர்களாம், அதனைச்சொல்லுகிறது முதலடி.

அரசாகி வையமெல்லாம் ஆண்டார் முன்னாண்டவரே மாண்டாரென்று வந்தார்—இதுவரையில் நீர்க்குமிழிபோலேயிருந்து கழிந்த அரசர்கள் பல்லாயிரம் பேர்களுண்டு; ஆள்பவர் ஆண்டுகொண்டே யிருக்கின்றனரென்பதில்லை. இப்போது ஆள்பவர் முன்பு ஆண்டு மாண்டவருடைய கணக்கிலே பதிவுபெறு கின்றனரென்றவாறு. திருவாய்மொழியில் "சொன்னால் விரோதம்" (3–9–1.) என்னுந் திருவாய்மொழியின் ஈடுமுப்பத்தாறுயிரப்படி ப்ரவேசத்தில் இப்பாசுரத்தை உதாஹரித்துப் பரமரஸமாக அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் ஸேவிக்கத்தக்கன.

இவ்வுலகத்துப் போகங்கள் இப்படிப்பட்டனவாதலால் இவ்வுலகவாழ்வில் வெறுப்புற்று நித்யைச்வர்யம் பெறுவதாக நின்னடைந்தேனென்றாயிற்று.

http://acharya.org

கல்லா வைம்புலன்களவை கண்டவாறு செய்யகில்லேன் *
மல்லா மல்லமருள் மல்லர்மாள மல்லடர்த்த
மல்லா * மல்லலஞ்சீர் மதிள்நீரிலங்கையழித்த
வில்லா * நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (கூ)

கல்லா	கல்வி பயிலாத [—சாஸ்த்ர நெறியில் நிற்கமாட்டாத]	மல்லா	மல்தொழில்வல்லவனே!,
ஐம்புலன்கள் அவை	பஞ்சேந்திரியங்களாகிறவை	மல்லல் அம் சீர்	மிகவும் அழகிய செல்வத்தை யுடைத்தாய்
கண்ட ஆறு	செய்யநினைத்த விதமாக	மதிள்	மதிள்களால் சூழப்பட்டதாய்
செய்ய கில்லேன்	நான் செய்யமாட்டு கின்றிலேன்;	நீர்	சுற்றிலும் நீர்க்கோட்டையை யுடைத்தான
மல்லா	வலிமையுள்ள பெருமானே!,	இலங்கை	லங்காபுரியை
மல் அமருள்	மற்போரில்	அழித்த	நாசஞ்செய்த
மல்லர் மாள	(சாணூரன் முதலிய) மல்லர்கள் முடியும்படியாக	வில்லா	சார்ங்கத்தையுடையவனே!
மல் அடர்த்த	(அவர்களுடைய) வலியையழித்த		திருவிண்ணகர் மேயவனே!—; நின் அடைந்தேன்—.

* * *—"விவிக்தா தேஹஸம்பத்தி ஶ்ரீஸ்வாய நிவேசிதா:। வாஹ்யே-சைவ க்ருதா வ்யூஹ! ஹஸ்தவாதாதிஸம்யுதா: விநிக்ரா தேஹஸம்பந்தி ஶ்ரீஸ்வாய நிவேசிதாஸ்—பூர்வமேவ க்ருதா ப்ரத்யக்! ஹஸ்தபாதாதிஸம்யுதா." என்று செவி வாய் கண் மூக்கு முதலிய கரணங்கள் உன்னுடைய திருப்புகழ் களைக்கேட்பது மொழிவது முதலிய காரியங்களுக்காக ஏற்பட்டவை; அப்படிப் பட்ட அவை இவ்வழியில் நில்லாதே அவ்வழியிற் செல்லுகின்றனவே பாவியே னுக்கு; அவை இழுத்துக்கொண்டு போகிறவழியே நான் செல்லுகிறேனென்றால் இது என்னலாகுமோ? "பூணாரமார்பனைப் புள்ளூரும் பொன்மலையைக் காணாதார் கண்ணென்றும் கண்ணல்லகண்டாமே" என்றும் "தொண்டர்க்கினியானைக் கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே" என்றும் உறுதிகொண்டிருக்கிற நான் விஷயாந்தரங்களில் மண்டித்திரிகிற நெஞ்சை அநுஸரித்து நடக்கவுரியவனோ? என்கிறார் முதலடியால்.

மல்லர்மாள அடர்த்த வரலாறு:—கம்ஸன் தன்னைக் கொல்லப்பிறந்த தேவகீ புத்திரன் யசோதையினிடம் ஒளித்து வளர்தல் முதலிய வரலாறுகளை நாரத முனிவர் சொல்லக்கேட்டு அதிக கோபங்கொண்டு எவ்வகையினாலாவது கண்ண னைக்கொல்ல நிச்சயித்து வில்விழாவென்கிற வியாஜம்வைத்துக் கண்ணபிரானையும் பலராமனையும் அழைத்துவரும்படி நியமிக்கப்பட்ட அக்ரூரனுடைய பிரார்த்தனைக் கிணங்கக் கண்ணபிரான் நம்பி மூத்தபிரானுடன் புறப்பட்டு மதுரையிற் புகுந்து நடுவழியில் ஒரு துஷ்ட வண்ணானைக்கொன்று அவனிடமிருந்த சிறந்த ஆடைகளை யெடுத்துச் சாத்திக்கொண்டு ராஜவீதியில் வருகிறவளவிலே மாலாகாரரையும்

http://acharya.org

கூனியையும் அநுக்ரஹித்துப் பின்பு கம்ஸனரண்மனையை நோக்கிச்செல்லுகையில் அவ்வரண்மனை வாயில்வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை சீறிவர, அவ்யானையையும் யானைப்பாகனையும் உயிர்தொலைத்திட்டு உள்ளே கம்ஸஸபையிற் செல்லுகையில் அவர்களை யெதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்ஸனாலேவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்ரமாகப் பெரும்போர்செய்ய அவர்களையெல்லாம் அவ்யாதவவீரர் இருவரும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டனர் என்பதாம். கண்ணபிரான் பாண்டவதூதனாய்த் துரியோதனனிடஞ்சென்றபொழுது துரியோதனன் ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறையொன்றைத் தோண்டுவித்து அதில் அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளேயிருக்கவைத்து அப்படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற் பிளப்புக்களால் மேலேமூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸனமொன்றையமைத்து அவ்வாஸனத்தின்மீது தன்னை வீற்றிருக்கச்சொல்ல, அங்ஙனமே தான் அதன்மேலேறின மாத்திரத்திலே, மூங்கிற்பிளப்புக்கள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் பிலவறையில் செல்லுமளவில் மிகப்பெரிதாக விச்வரூபமெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங் கொண்டு எதிர்த்து அப்பிலவறையிலிருந்த மல்லர்களை மடிவித்த வரலாறும் அறியத்தக்கது. மற்போராவது ஆயுதங்களின் உதவியின்றியே தேஹவலிமையையேகொண்டு நடத்தும் யுத்தம்.

மல்லலஞ்சீர்மதிள் நீரிலங்கை—முதலிலே அநுமான் இலங்கையிற்புகுந்து அந்நகரின் சீர்மைகளைக்கண்டு வியந்து "யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:। ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸசக்ரஸ்யாபி ரக்ஷிதா॥ யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:—ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸசக்ரஸ்யாபி ரக்ஷிதா" [இந்த ராக்ஷஸ ராஜனிடத்தில் அதர்மம் ஒன்று மாத்திரம் இல்லாதிருந்தால் இந்திரலோகத்தையும் அடக்கி ஆளக்கூடியவனன்றோ இவன்] என்று சொன்னது இங்கு நினைக்கத்தக்கது. மல்லல்—மிகுதி, வலி, வளம். .... (௬)

வேறாயானிரந்தேன் வெகுளாது மனக்கொளெந்தாய் *
ஆறாவெந்நரகத்து அதடியேனை யிடக்கருதி *
கூறாவைவர்வந்துகுமைக்கக் குடிவிட்டவரை *
தேறாதுன்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (௭)

திருவிண்ணகர் மேயவனே!—;

எந்தாய்	ஸ்வாமிந்!,
யான்	அடியேன்
வேறு ஆ	விலக்ஷணமாக
இரந்தேன்	யாசிக்கின்றேன்;
வெகுளாது	சீற்றமின்றி
மனக்கொள்	திருவுள்ளம் பற்றவேணும்;
ஐவர்	பஞ்சேந்திரியங்கள்
அடியேனை	அடியேனை

http://acharya.org

ஆறு வெம் நரகத்து	ஓய்வில்லாதகொடிய ஸம்ஸாரநரகத்திலே	குடிவிட்டவரை	(நீ என்னை நல்வழிப் படுத்துகைக்காக ஸ்ருஷ்டிகாலத்தில் என்னிடத்தில்) குடியிருக்கச் செய்த அந்த இந்திரியங்களை
இட கருதி	தள்ளநினைத்து	தேறாது	நம்பாமல்
கூறு ஆ	என்னைத் தங்களுக்குப் பாகமாகக் கொண்டு		உன் அடைந்தேன்—.
வந்து	என்னைக் கிட்டி		
குமைக்க	ஹிம்ஸிக்க,		

* * *—**வேறு யானிரந்தேன்**—உலகத்தில் வேண்டுகோள் இரண்டுவகைப் படும்; வேண்டினவுடனே பெறவேண்டிய நிர்ப்பந்தமின்றிக் காலக்கிரமத்தில் பெறலாம்படியான பொருள்களைப்பற்றின வேண்டுகோள் ஒன்று; வேண்டின வுடனே கிடைத்தாலன்றி உயிர்தரிக்க முடியாமல் அப்போதே பெறவேண்டின பொருளைப்பற்றின வேண்டுகோள் மற்றொன்று. இவ்விரண்டுவகையான வேண்டு கோளில் இரண்டாவதுவகையான வேண்டுகோளை இப்போது அடியேன் செய் கின்றேனென்றவாறு. ‘வேறு’ என்பதன் கருத்து இது. பஞ்சேந்திரியங்க ளாகிற படுகொலைக்காரர்கையில் இனி நான் ஒரு நொடிப்பொழுதும் நலிவுபட முடியாதாதலால் இந்த க்ஷணத்திலே அடியேனை உனதருளால் வாங்கிவிடவேணு மென்று பிரார்த்திக்கின்றேனென்கை.

யான் இரந்தேன்—‘இரந்தேன்’ என்றாலே போதும்; ‘யான்’ என்னும் எழுவாய் தன்னடையே வந்துபுகும்; அப்படியிருக்கவும் “யானிரந்தேன் என்ற தற்கு ஒரு கருத்துண்டு; 1. “எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதிசூழ்ந்ததா லெனக்கேலம்மான் திரிவிக்கிரமனையே” என்னுமாபோலே என்னைத் திருத்திப் பணிகொள்வதற்காகப் படாதபாடுகள் நீ படுகிறாய் என்று பிரஸித்தமாயிருக்கின்றது; தன் ஸொத்துக்கு ஒரு கெடுதல் நேர்ந்தால் அதனைத்தீர்த்து மகிழ்தல் ஸ்வாமியின் கடமையாதலால் உன்னுடைய ஸொத்தாகிய அடியேனுடைய கெடுதியைத் தீர்ப்பது உனக்கே பணியாயிருந்தும் இது என்னுடைய காரியம்போலே நான் வேண்டும்படியாயிற்றே!, ‘அந்தோ! நம் காரியத்திற்கு இவன் வேண்டிக்கொள்ளுகிறானே!’ என்று திருவுள்ளம் பற்றியாகிலும் இரங்கலாகாதோ? என்றவாறு. “நீ இரக்க, மறுத்துத்திரிந்த நானன்றோ இப்போது இரக்கிறேன்” என்பர் பெரியவாச்சான் பிள்ளையும்.

எந்தாய்! வெகுளாது மனக்கோள்—நான் இப்போது வேண்டிக்கொள்வது தேவரீர் திருவுள்ளத்திற்கு மிக்க சீற்றமேயாகும்; ‘நெடுநாள் நாம் எதிர்பார்த் திருந்தபோதெல்லாம் நம்மை அலக்ஷியஞ் செய்தொழிந்த இவன் இப்போது எதுக்கு நிர்ப்பந்திக்கிறான்?’ என்று பாவியேன்மீது திருவுள்ளம் சீறக்கூடும்; அங்ஙனே யாகவொண்ணாது; எந்தையான முறைமையை நினைத்துச் சீறாமல் திருவுள்ளம் பற்றவேணுமென்கிறார். “[எந்தாய்!] என்றலழித்துக்கொள்ள வொண்ணாத ப்ராப்தியைக்கொண்டு பொறுக்கையொழிய, செய்த குற்றத்தைக்

http://acharya.org

கணக்கிட்டுக் கைவிடலாம்படியோ தேவரோடென்டான ப்ராப்தியிருப்பது" என்பர் பெரியவாச்சான் பிள்ளையும்.

தம்முடைய விவக்ஷிதத்தை விண்ணப்பஞ் செய்கிறார் ஆறுவெந்நரகத்தென்று தொடங்கி. இந்திரியங்களினுடைய எண்ணம் மிகவும் பொல்லாததாயிருக்கின்றது; 'தேவரீர்க்கு எல்லாவடிமைகளும் செய்யப் பெறவேணும்' என்று பாரித்திருக்கிற வென்னை அஹங்கார மமகாரங்களுக்குக் குடிமை செய்யும் ஸம்ஸாரத்திலே தள்ள நினைத்து நலிகின்றனவே இந்திரியங்கள்; இந்த நலிவு என்னாலே பொறுக்கப் போகிறதில்லை, இன்னமும் என்னென்ன தீங்குகள் செய்ய நினைத்திருக்கின்றனவோ தெரியவில்லை; அஞ்சினுருடைய அச்சமெல்லாம் தீருமாறு திருவிண்ணகரிலே நித்யஸந்நிதி பண்ணியிருக்கிற தேவரீரைச் சரணம் புகுகின்றேன், காத்தருளவேணுமென்கை.

அஃறிணையான ஐம்பொறிகளை ஐவர் என்று உயர்திணையாகச் சொன்னது இழிவினாலும் சிறப்பின் பிருதியாலுமென்க; திணைவழுவமைதி.

குடிவிட்டவரை="விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்—" விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்" என்கிறபடியே உன்னை வழிபடுவதற்குப்பாங்காக உன்னாலே இவ்வுடலில் குடியிருக்கச் செய்யப்பட்ட ப[illegible]சேந்திரியங்களென்கை. தேறுது=இவை உன்னுடைய உத்தேசத்தின்படி நட[illegible]வாமல் விபரீதமான மார்க்கத்திலே நடக்கத் துணிந்தமையால் இவற்றை நான் நம்பாமல், உன்னைவந்து பணிந்தேன். இதனால் இந்திரியங்களைத் தாம் வென்றமை வெளியிடப்பட்டதாகும். .... (எ)

தீவாய் வல்வினையார் உடனின்று சிறந்தவர்போல் *
மேவாவெந்நரகத்து இடவுற்று விரைந்துவந்தார் *
மூவா வானவர்தம்முதல்வா மதிகோள்விடுத்த
தேவா * நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (அ)

தீ வாய்	நெருப்பையுமிழ்கின்ற வாயையுடைய
வல்	கொடிய
வினையார்	பாவங்கள்
சிறந்தவர் போல்	பந்துக்கள் போன்று
உடன் நின்று	என்னோடு பிரியாமல் கலந்து நின்று
மேவா வெம் நரகத்து இட உற்று	பொருந்தாத கொடிய நரகத்திலே (என்னைத்) தள்ள முயன்று

விரைந்து வந்தார்	வெகுவேகமுடையனவாயிருக்கின்றன;
மூவா	கிழத்தனம் முதலிய விகாரங்களற்ற
வானவர் தம் முதல்வா	தேவாதிதேவனே!
மதி கோள் விடுத்த தேவா	சந்திரனுடைய க்ஷயரோகத்தைப் போக்கின தேவனே!
திரு விண்ணகர் மேயவனே!—;	
நின் அடைந்தேன்—.	

* * *— இப்பாசுரத்தில் இரண்டாமடியில் நெடுநாளாகவே ஒரு பாடப் பிழை நேர்ந்துள்ளது; "மேவா வெந்நரகத்து இடருற்று" என்றே பலரும் ஓதுவர்; பதிப்புக்களிற்பாடமும் இதுவேயாகக் காண்கிறது. இப்பாடம் பொருளற்றது; "இடவுற்று" என்பது 'இடருற்று' எனப் பிழைபட்டது. (அடியேனை) மேவா வெந்நரகத்துஇட [நரகத்திலே தள்ள] உற்று விரைந்து வந்தார் என்கை. கீழ்ப்பாட்டில் "அருவெந்நரகத்தடியேனை இடக்கருதி" என்றாப்போலே.

கீழ்ப்பாட்டில் ஐவர் [பஞ்சேந்திரியங்கள்] எழுவாய்; இப்பாட்டில் வல்வினையார் [பாபராசிகள்] எழுவாய். வல் என்ற அடைமொழி— அப்பாவங்கள் அவசியம் அநுபவித்தே தீரவேண்டுமவை என்பதைக்காட்டும். தீவாய் என்னும் அடைமொழி அவற்றின் கொடுமையைக்காட்டும். பலவகைத் துன்பங்களையுண்டு பண்ணுகின்றன வென்றபடி. சிறந்தவர் என்றது— உடன்பிறந்தோர் மக்கள் மனைவியர் முதலான உறவினரைச் சொன்னபடி. அவர்கள் ஒருகாலும் விட்டு நீங்காதவாறுபோல இக்கொடிய பாவங்களும் எப்போதும் விட்டுப் பிரியாமலிருந்து கொண்டு என்னை நரகத்திலே தள்ளப் பார்க்கின்றன வென்றாயிற்று.

மூவா வானவர்தம் முதல்வா!— மூவா— கிழத்தனமடையாத என்றபடி. இது வானவர்க்கும் விசேஷணமாகலாம், வானவர்தம் முதல்வனான எம்பெருமானுக்கும் விசேஷணமாகலாம். நித்யஸூரிகளை நிர்வஹிப்பதுபோல் அடியேனையும் நிர்வஹிக்கலாகாதோ என்பது குறிப்பு.

மதிகோள்விடுத்த தேவா!— எம்பெருமான் சந்திரனுடைய துயரைத்தீர்த்ததாக ஆழ்வார்கள் பலவிடங்களிலும் அநுஸந்திக்கக் காண்கிறோம். இவ்வரலாற்றின் விவரணம் இதிஹாஸபுராணங்களில் கண்டது சிற்றறிவுக்குப் புலப்படவில்லை. தக்ஷமுனிவனது சாபத்தால் க்ஷயமடைந்து வந்து சரணம் புகுந்த சந்திரனைச் சிவபிரான் காத்ததாக வரலாறு காண்பதுண்டு; ப்ரயோஜ்ய கர்த்தாவாகிய அச்சிவபிரானது செயலை ப்ரயோஜக கர்த்தாவான திருமால் மேல் ஏற்றிக்கூறியிருப்பதாகக் கொள்வர். அன்றியும், ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் சந்திரபுஷ்கரிணியை வருணிக்கும் ச்லோகத்தில் "யஸ்யா:—க்ஷாரஸமுத்ராவாஸே க்ஷீணீ நாம் உக்ஷஸூயாதீயி க்ஷிதாஸேவா ஸஸ்யா:, அப்யாஸநாபாமகமர்ஷணீ நாம் சந்த்ரஸ் ஸுதாதீதிநிகாமமாப." என்றருளிச் செய்தபடி. சந்திரபுஷ்கரிணியில் பலகாலம் நீராடி ஸ்ரீரங்கநாதனது திருவருளால் தனது க்ஷயரோகம் தீரப் பெற்றான் சந்திரன் என விளங்குதலால் அதனைத் திருவுள்ளம்பற்றி 'மதிகோள் விடுத்த தேவா!' என்றருளிச் செய்கிறார்களென்றுங்கொள்வர். இதன் உண்மையை வல்லார்வாய்க் கேட்டுணர்க. .... (அ)

போதார்தாமரையாள் புலவிக்குலவானவர்தம்
கோதா * கோதில்செங்கோல் குடைமன்னரிடைநடந்த
தூதா * தூமொழியாய் சுடர்போல் என்மனத்திருந்த
வேதா * நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே. (க)

போது ஆர் தாமரையாள்	நல்லபோதிலே அலர்ந்த தாமரைப்பூவை இருப்பிடமாகவுடையளான பிராட்டிக்கும்
புலவி	பூமிப்பிராட்டிக்கும்
குலம் வானவர் தம்	சிறந்த நித்யஸூரிகளுக்கும்
கோதா	விரும்பத்தகுந்தவனே !,
கோது இல் செங்கோல்	தடையின்றிச் செங்கோல் செலுத்துமவராய்
குடை	கொற்றக்குடையை யுடையரான
மன்னர் இடை	(துரியோதநாதி) ராஜாக்களிடத்தில்
நடந்த தூதா	தூதுநடந்தவனே !,
தூ மொழியாய்	தூய் சொற்களை யுடையவனே !
சுடர் போல்	விளக்கொளிபோலே ஜ்வலித்துக் கொண்டு
என் மனத்து இருந்த	என்னுள்ளத்திலுறைகின்ற
வேதா	வேத வேத்யனே !

திருவிண்ணகர் மேயவனே !—; நின் அடைந்தேன்—.

* * *—பிராட்டிமாரும் நித்யஸூரிகளும் புருஷகாரமாகச் சரணம் புகுகிறுரிதில். போதார்தாமரையாள் தன்கோதா !, புலவிதன் கோதா !, குலவானவர்தம் கோதா ! என்று யோஜிக்கலாம். 'கௌதுகம்' என்னும் வடசொல் விகாரமடியாப் பிறந்த விளியாம் **கோதா** ! என்பது. 'ப்ரியனே !' என்றபடி. செவ்வித் தாமரைப்பூவை இருப்பிடமாகவுடையளான ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு அன்பனே !, பூமிப்பிராட்டிக்கு அன்பனே !, நித்யஸூரிகட்கு அன்பனே ! என்கை. பூமிப்பெயரான **புலம்** என்னும் சொல்லடியாப்பிறந்த பெண்பாற் பெயர் **புலவி** என்பது. அன்றியே, 'புலவி' என்று பிரிவுக்கும் பெயருண்டு; போதார்தாமரையாளுடைய புலவியில் — [பிராட்டியைப் பிரணயவசத்தால் பிரிந்திருக்குங் காலத்தில்] அப்பிரிவினாலுண்டான ஊடலைத்தீர்த்துத் தேறுதல் செய்விக்கும் நித்யஸூரிகளுக்கு அன்பனே ! என்னவுமாம்.

இப்படி நித்யஸூரிநாதனா யிருக்கச்செய்தேயும் ஆச்ரிதர்கட்காகத் தன்னை யழியமாறித் தூதுபோனமை சொல்லுகிறது **கோதில் செங்கோற்குடைமன்னரிடை நடந்த தூதா** ! என்று. இங்கு 'மன்னர்' என்றது துரியோதனாதியரை யென்றுங் கொள்ளலாம், பாண்டவர்களை யென்றும் கொள்ளலாம். பாண்டவர்களின் குடை சாமரம் முதலானவற்றையெல்லாம் பறித்துக்கொண்டு முத்துக் குடை நிழற்கீழேயிருந்து பூமிப்பரப்புக்கெல்லாம் தாங்களே அரசர்களாய் நிர்வஹித்துக்கொண்டு போருகிற துரியோதனாதியரிடத்திலே கழுத்தில் ஓலையைக் கட்டிக்கொண்டு தூதெழுந்தருளினவனே !; அன்றியே, கண்ணபிரானுடைய திருவுள்ளத்தாலே கோதில் செங்கோற்குடை மன்னரான பாண்டவர்கட்காகத் தூதெழுந்தருளினவனே ! என்னுமாம்.

தூமொழியாய் !— ஆச்ரிதர்களான பாண்டவர்களிடத்தில் தனக்குண்டான பக்ஷபாதம் விளங்க வார்த்தை யருளிச்செய்தவனே ! என்றவாறு. அதாவது என்னென்னில்; 'பாண்டவர்களும் நீங்களும் செய்யப்பார்த்தது என் ?' என்று துரியோதனாதியரைக்கேட்க; அதற்குத் துரியோதனன் 'பாண்டவர்களுக்குத்

தருமமும் தருமபலனை ஸ்வர்க்கபோகமுமுண்டு; அவர்கள் ஐந்துபேர்; நாங்கள் நூறுபேர்; ஆகையாலே பூமிப்பரப்பெல்லாம் எங்களுக்கே இடம் போரு மித்தனை, நாங்கள் ஒரு ஊசிகுத்துமிடமும் கொடுப்பதில்லை' என்று சொல்ல, 'உன் எண்ணம் இதுவானபின்பு இனி யுத்தம் நடக்குமித்தனை' என்றருளிச் செய்த மொழியாம். இது ஆச்ரிதரான பாண்டவர்களிடத்துப் பரிவுதோற்ற அருளிச்செய்த வார்த்தையாகையாலே தூமொழியாம்.

சுடர்போல் என்மனத்திருந்த வேதா!—'இப்படிப்பட்ட ஆச்ரிதபக்ஷபாதி யன்றோ இவன்' என்று என்மனம் உன்மேல் ஈடுபட்டிருக்கு மென்றவாறு.

வேதா! நின்னடைந்தேன் திருவிண்ணகர்மேயவனே!—உன்னை வேதங்களிலே கேட்டுப்போகையல்லாமல் கண்ணாலே காணலாம்படி திருவிண்ணகரிலே வந்து ஸந்நிதிபண்ணியிருக்கு மிருப்பிலே வந்து சரணம் புகுந்தேனென்றாராயிற்று. .... (௯)

தேனார் பூம்புறவின் திருவிண்ணகர் மேயவனை *
வானாரும் மதிள்சூழ் வயல்மங்கையர்கோன், மருவார் *
ஊனார்வேற்கலியன் ஒலிசெய் தமிழ்மாலைவல்லார் *
கோனாய் வானவர்தங் கோடிமாநகர் கூடுவரே. (௧௦)

தேன் ஆர் பூ புறவின்	தேன்நிறைந்த பூக்களையுடைய சோலைகளையுடைத்தான
திரு விண்ணகர்	திருவிண்ணகர்த் திருப்பதியிலே
மேயவனை	நித்யவாஸஞ்செய்தருளு மெம்பெருமான் விஷயமாக,
வான் ஆரும்	ஆகாசத்தையளாவியிருக்கிற
மதிள்	மதிள்களாலும்
வயல்	கழனிகளாலும்
சூழ்	சூழப்பட்ட
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு
கோன்	ஸ்வாமியாய்,
மருவார்	பகைவருடைய
ஊன் ஆர்	சரீரங்களிலே புகுவதான
வேல்	வேற்படையையுடையரான
கலியன்	ஆழ்வார்
ஒலி செய்	அருளிச்செய்த
தமிழ் மாலை	இத்தமிழ்ப் பாசுரங்களை
வல்லார்	ஓதவல்லவர்கள்
கோன் ஆய்	ஸ்ரீவைகுண்ட நிர்வாஹகராய்க் கொண்டு
வானவர் தம்	நித்யஸூரிகளுடையதாய்
கொடி	கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதாய்
மா	சிறந்ததான
நகர்	ஸ்ரீவைகுண்டத்தை
கூடுவர்	அடையப்பெறுவர்.

* * *—இத்திருமொழி கற்றார்க்குப் பலனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. இங்கு நின்றும் பரமபதத்துக்கு எழுந்தருளுமவர்களை அங்குள்ள நித்யஸூரிகள் 1. "ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று" என்கிறபடியே 'நீங்கள்

1. திருவாய்மொழி 10—9—5.

http://acharya.org

பரமபதத்தை ஆளுங்கோன்' என்பாராதலால் 'கோனாய்' எனப்பட்டது. இத்திருமொழி கற்றாரிட்ட வழக்காயிருக்குமாம் திருநாடு. .... (௧௦)

அடிவரவு:—பொறுத்தேன் மறந்தேன் மானேய்தம் பிறிந்தேன் பாண் கல்லா வேறா தீவாய் போதார் தேனார் துறப்பேன்.

இரண்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து—மூன்றாந்திருமொழி,

துறப்பேனல்லேனின்பம்.

[இதுவும் திருவிண்ணகர் மங்களாசாஸநத்திருப்பதிகம்.]

அவதாரிகை:—கீழ்த்திருமொழிகளிரண்டிலும் ஆழ்வார் ஸம்ஸார தோஷங்களை விரித்துரைத்து, ஸம்ஸாரத்தில் தமக்குண்டான வெறுப்பை எம்பெருமான் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்தும் அதை நிவர்த்திப்பிக்க வேணுமென்று சரணம்புகுந்தும், 'இவர்க்கு இன்னமும் பூர்வவாஸனையாலே விஷயப்ராவண்யம் நிச்சேஷமாகக் கழிந்திராது; சிறிதாவது ஒட்டிக்கிடக்கும்; இன்னும் சிறிது இவரைப்பரீக்ஷிப்போம்' என்று திருவுள்ளங்கொண்ட திருவிண்ணகரப்பன் 'ஆழ்வாரே! உம்முடைய கருத்தைத் தெளிவாகச்சொல்லும்' என்று கேட்டருளினதாகக்கொண்டு, தாம் வெறுத்துக் காற்கடைக்கொண்ட விஷயம் இஃதென்றும், பெருவிடில் முடிந்துபோம்படியான அவஸ்தையைப் பிறப்பிக்குமதான தாமபேக்ஷித்த புருஷார்த்தம் இஃதென்றும், திருநாட்டிற்சென்று திருவடிகளின் கீழ்வாழ்ச்சியில் தமக்குப் பிறந்துள்ள பேராவலையும் விரிவாக விண்ணப்பஞ் செய்வதாம் இத்திருமொழி. .... *

துறப்பேனல்லே னின்பம் துறவாது * நின்னுருவம்
மறப்பேனல்லேன் என்றும்மறவாது * யானுலகில்
பிறப்பேனாக வெண்ணேன் பிறவாமைபெற்றது * நின்
திறத்தேனாதன்மையால் திருவிண்ணகரானே. (௧)

http://acharya.org

திருவிண்ணகரானே !—;

இன்பம்	(உன் அநுபவத்தினு லுண்டாகக்கூடிய) பேரின்பத்தை
துறப்பேன் அல்லேன்	தவிரமாட்டேன் ;
துறவாது	அவ்வின்பத்தைத்தவிராதவனுகி
என்றும்	ஒருநாளும்
நின் உருவம் மறப்பேன் அல்லேன்	உன்வடிவழகை மறவாதவனுயிருக்கின்றேன் ;
மறவாது	அவ்வடிவழகை மறவாதவனுகி
யான்	நான்
உலகில்	ஸம்ஸாரத்தில்
பிறப்பேன் ஆக எண்ணேன்	இனிப் பிறவியெடுக்க எண்ணமற்றவனுயிருக்கின்றேன் ;
பிறவாமை பெற்றது	இனிப்பிறவாதபடி பேறுபெற்ற விதுதானும்
நின் திறத்தேன் ஆதன்மையால்	உனக்கே ஆட்பட்டதனுலேயாம்.

* * *—சிற்றின்பங்களை நான் துறப்பனேயன்றி, தேவரீருடைய அநுபவமாகிற பேரின்பத்தை ஒருநாளும் இழக்கமாட்டேன் ; தேவரீருடைய வடிவழகு என்னுல் மறக்கமுடியுமாகிலன்றோ இன்பத்தை நான் துறந்தவனுவேன் ; வடிவழகை மறவாதவனுகையாலே இன்பத்தைத் துறவாதவனுயினேன் ; இப்படிப்பட்ட நான் இனிமேலும் இவ்விருள் தருமாஞாலத்தில் பிறந்து பிறந்து கஷ்டங்கள்பட நினைப்பேனே ? "மறந்தேனுன்னை முன்னம்" என்று கீழ்நாட்களில் தேவரீரை மறந்திருந்தேனுகிலும் இனிமேலுள்ள காலம் மறவாதேயிருக்கப் பாரித்திருப்பவனுதலால் அடியேன் பிறவித்துயர் நீங்கி நித்யாநந்த மநுபவிக்கவே யுரியேனுயினேன் என்றாராயிற்று.

கீழ்த்திருமொழியில் "மறந்தேனுன்னை முன்னம்—அதனுலிடும்பைக்குழியிற்பிறந்தே யெய்த்தொழிந்தேன்" என்று மறதிக்குப் பலனுகப் பிறவித்துன்பம் பெற்றமை சொன்னார் ; இதில் மறவாமைக்குப்பலனுகப் பிறவாமை பெற்றமை சொன்னுரென்க. .... (க)

துறந்தேனார்வச்செற்றச்சுற்றம் துறந்தமையால் *
சிறந்தேனின்னடிக்கே அடிமை திருமாலே *
அறந்தானுய்த்திரிவாய் உன்னை யென்மனத்தகத்தே *
திறம்பாமல்கொண்டேன் திருவிண்ணகரானே. (உ)

திருவிண்ணகரானே !—;

திரு மாலே !—;

அறம் தான் ஆய் திரிவாய்	தானே ஸாக்ஷாத்தர்மமாய்க் கொண்டு ஆள்பார்த்துத் திரியுமவனே !,
சுற்றம்	(ஸம்ஸாரிகளுடன்) உறவையும்
ஆர்வம்	அன்பையும்
செற்றம்	விரோதத்தையும்
துறந்தேன்	தவிர்ந்தேன் ;
துறந்தமையால்	தவிர்ந்ததனுல்,
நின் அடிக்கே	உன் திருவடிகளிலேயே
அடிமை சிறந்தேன்	கைங்கரியம் பண்ண வுரியனுனேன் ;
உன்னை	உன்னை
என் மனத்தகத்தே	எனது நெஞ்சினுள்ளே
திறம்பாமல் கொண்டேன்	தவருது தரித்துக் கொண்டேன்.

http://acharya.org

* * *—பிராகிருதர்களான அநுகூலரிடத்தில் அநுராகமும், பிரதிகூலரிடத்தில் பகையும், ஆபாஸபந்துக்களிடத்தில் உறவும் உள்ளவரையில் எம்பெருமான் திருவடிகளில் அன்பு நிலைநிற்கமாட்டாதாகலால் அம்மூன்றும் தமக்கு ஒழிந்தமையை அருளிச்செய்து 'தேவரீர் திருவடிகட்கே அடியேன் தகுந்தவனாயினேன்' என்கிறார். “பரித்யக்தா மயா லங்கா—பரித்யக்தா மயா லங்கா” [விட்டொழித்தேன் இலங்கையை] என்ற விபீஷணாழ்வானைப்போலே அருளிச்செய்கிறார் காண்மின்.

ஆர்வம், செற்றம், சுற்றம் என்ற மூன்றும் ஒருவகையாலே உபாதேயம்; மற்றொருவகையாலே த்யாஜ்யம்; (எங்ஙனே யெனில்;) விஷயாந்தரங்களிலே ஆசைவைத்து அவை ஸித்திப்பதற்கான முயற்சிகள் செய்யுமளவில் அவற்றுக்கு உதவிசெய்யும் நண்பர்களிடத்தில் உண்டாகிற ஆர்வமும், அவற்றுக்குக்கெடுதல் விளைக்கிற (அல்லது, கெடுதல் விளைவிப்பவராகத் தம்மால் கருதப்படுகின்ற) பிரதிகூலர்களிடத்தில் மாத்ஸர்யமும், உண்மையான உறவினரல்லாத தேஹபந்துக்களிடத்திலும் காமிநிகளிடத்திலும் வைக்கிற பந்துத்வ ப்ரதிபத்தியுமாகிற ஆர்வச்செற்றச் சுற்றங்கள் த்யாஜ்யம்; பகவத்பாகவதர்களிடத்தில் விளையும் ப்ரேமமும், பகவத்பாகவத விரோதிகளிடத்தில் விளையும் பகையும், “சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையுமவரே யினியாவரே” என்று விளையும் உறவுமுறையும் ஸ்வரூபாநுரூபமாகையாலே உபாதேயம். இங்கு “துறந்தேனார்வச் செற்றச்சுற்றம்” என்றது முற்சொன்ன த்யாஜ்யமானவற்றை யென்க.

துறந்தமையால் நின்னடிக்கே அடிமை சிறந்தேன்=‘தவிரவேண்டுமவை யெல்லாம் தவிர்ந்தமையாலே 1. “திருமாலே! நானுமுனக்குப் பழவடியேன்” என்று இயற்கையாகவே உள்ளதாக அநுஸந்திக்கப்படுகிற அடிமைத்தொழிலுக்கு அர்ஹனாய்விட்டேனென்கை. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யம்;—“(துறந்தமையாலித்யாதி.) புறம்பே சிலரை உறவுமுறையென்றிருக்கையிறே இழவு வருகைக்கடி; அது தவிர்ந்தால் இப்போதாக உறவுஸம்பாதிக்கவேண்டுவதில்லையிறே; இவன் பக்கல் ஸம்பந்தம் ஸ்வாபாவிகமே. பாஹ்யவிஷயங்களை விட்டபோதே தொடங்கித் திருவிடையாட்டமிறே. ராவணபவநத்தைவிட்டு (ஸ்ரீவிபீஷணாழ்வான்) ஆகாசஸ்தனானபோதே ஸ்ரீமானானானிறே. அப்ராப்த விஷயங்களைவிட்ட வநந்தரம் ப்ராப்தவிஷயத்தினுடைய சமாவுதியிலே நின்றேன். ப்ராப்திபலமான கைங்கர்யத்துக்கு யோக்யனானேன்.”

அறம் தானாய்த்திரிவாய்=“கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்துண்போமறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து, உன்றன்னைப்பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்” என்றாப்போலே ஸாக்ஷாத்கர்மமே வடிவெடுத்தது போன்

1. திருப்பல்லாண்டு. 11.

றுள்ள தேவரீர் பலன்கொடுக்கைக்கு அவஸரம் பார்த்திருக்கிறீராகில் அடியேனிடத்தில் வேறு சில தர்மங்கள் வேணுமோ? என்றவாறு. .... (உ)

மானேய் நோக்குநல்லார் மதிபோல்முகத்துலவும் *
ஊனேய்கண்வாளிக்கு உடைந்தோட்டந் துன்னடைந்தேன் *
கோனே குறுங்குடியுள்குழகா திருநறையூர்த்
தேனே * வருபுனல்சூழ் திருவிண்ணகரானே. (ங)

கோனே	ஸ்வாமிந்!,
குறுங்குடியுள் குழகா	திருக்குறுங்குடியிலே வந்து கலந்து கொள்ள நிற்பவனே!,
திருநறையூர் தேனே	திருநறையூரில் தேன்போல் பரமபோக்யனே!
வருபுனல் சூழ் திருவிண்ணகரானே	பெருகுகின்ற தீர்த்தங்களால் சூழப்பட்ட திருவிண்ணகரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே!,
மான் எய் நோக்கு நல்லார்	மான்பார்வைபோன்ற பார்வையையுடைய மாதர்களது
மதி போல் முகத்து உலவும்	சந்திரன்போன்ற முகத்தில் உலாவுகின்ற
ஊன் எய் கண் வாளிக்கு	மாம்ஸமயமான கண்களாகிற பாணத்துக்கு
உடைந்து	அஞ்சி நடுங்கி
ஓட்டந்து	ஓடிவந்து
உன் அடைந்தேன்	உன்னைச் சரணமடைந்தேன்.

* * *—பாம்புக்கு அஞ்சி ஓடிவந்து விழுந்தேனென்பாரைப்போலவும், ராமாஸ்த்ரத்துக்கு நடுங்கிவந்து விழுந்தேனென்பாரைப்போலவும் மாதர்களின் கண்களாகிற அம்புக்கு அஞ்சி வந்து நின்னடைந்தேனென்கிறார். ஸ்த்ரீகள் ஆண்களை ஆகர்ஷித்துக்கொள்வது கடைக்கண்ணோக்கினலாதலால் '**மானேய் நோக்குநல்லார்**' என்றார். அவர்களைச் சிறப்பித்தும் அவர்களுடைய முகத்தை வருணித்தும் இவர் கூறுவது காமுகர்களின் ஸமாதியாலென்க.

ஓட்டந்து='ஓட்டம தந்து' என்ற இரண்டு சொற்கள் 'ஓட்டந்து' என ஒரு சொல்லாயிற்று: சிதைவு; ஓடிவந்து என்றபடி.

குழகன்=மஹானாயிருக்கும் தனது மேன்மையைப்பாராமல் சிறியாரோடுங் கலந்து பழகுமவன் என்கை.

திருநறையூர்த்தேனே !=" பட்டர் 'திருநறையூர்ப் பெருக்குக்குச் சினையாறு படுகிறது கிடாய்' என்றருளிச்செய்வர்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. இதன் அழகிய கருத்தை அறிவீர்களோ? கேண்மின்; திருவிண்ணகர்த் திருப்பதிவிஷயமான இத்திருமொழி முடிந்தவுடனே "கண்ணுஞ்சுழன்று" என்ற திருமொழி தொடங்கிச் "சினவிற்செங்கண்" என்ற திருமொழியளவும் நூறுபாசுரங்களாலே திருநறையூரை அநுபவிக்கப்போகிறாரே ஆழ்வார்; அதற்குள்ளே இப்போது 'திருநறையூர்த்தேனே' என்று அத்திருப்பதியைப்பற்றி ப்ரஸ்தாவம் செய்வானேன்? என்று நஞ்சீயர் போல்வார் பட்டரைக் கேள்வி

http://acharya.org

கேட்டனர் போலும்; அதற்கு பட்டர் அருளிச்செய்த மறுமாற்றமாயிது; இதன் கருத்து யாதெனில்; ஆற்றில் பெருவெள்ளம் வரப்போவதற்குமுன்னே ஆறு பொசிந்துகாட்டுவது வழக்கம்; அதுபோலே, நாலு பாசுரங்களாலே திருநறையூர்த் திருப்பதியநுபவமாகிற மஹா ப்ரவாஹம் ஸம்பவித்திருப்பதனால் அதற்கு முன்னடையாளமாகத் திருநறையூர்த்தேனே! என்று இவ்வாறு பொசிந்துகாட்டுகிறது இடாய் என்கை. இங்ஙனே மிக அழகிய அர்த்தம் பட்டர் திருவுள்ளத்தில் தானே தோன்றும். .... (௩)

சாந்தேந்துமென்முலையார் தடந்தோள்புணரின்ப வெள்ளத்
தாழ்ந்தேன் * அருநரகத்தழுந்தும் பயன்படைத்தேன் *
போந்தேன்புண்ணியனே உன்னையெய்தி யென்தீவினைகள்
தீர்ந்தேன் * நின்னடைந்தேன் திருவிண்ணகரானே. (௪)

திருவிண்ணகரானே!—;

சாந்து ஏந்தும் மென் முலையார் { குங்குமமணிந்த மெல்லிய முலைகளையுடையரான மாதர்களது
தட தோள் பருத்ததோள்களோடே
புணர் இன்பம் வெள்ளத்து } அணைவதனாலுண்டாகும் இன்பசாகரத்தில்
ஆழ்ந்தேன் { (கீழ்நாட்களில்) மூழ்கிக்கிடந்தேன்;
(அதனால்)
அரு நரகத்து அழுந்தும் பயன் படைத்தேன் } கொடிய ஸம்ஸாரநரகத்தில் அழுந்திக்கிடப்பதாகிற பலனைப் பெற்றேன்;
புண்ணியனே { புண்யமே வடிவெடுத்திருக்கும் பிரானே!,
போந்தேன் நின் அடைந்தேன் } (உன் திருவடிவாரத்திலே) வந்து சேர்ந்தவனாய் உன்னையடைந்தேன்;
உன்னை எய்தி உன்னைக் கிட்டி
என் தீ வினைகள் தீர்ந்தேன் } எனது கொடும்பாவங்கள் தொலையப்பெற்றேன்.

* * *—கீழ்நாட்களெல்லாம் அநியாயமாய்க் கெட்டுப்போனேன்; பாழாய்ப் போனேன்; சிற்றின்பநுகர்ச்சியிலேயே ஆழ்ந்து நரகத்திலே அழுந்தி நசிக்கப் பார்த்தேன்; தைவாதீனமாய் மீண்டேன், உன்திருவடிகளைச் சேர்ந்து உய்யும் வழிகண்டேன் பிரானே! என்கிறார்.

விஷயபோகங்களைக் காறியுமிழ்ந்து பகவத்விஷயத்திலே வந்து சேர்ந்த ஆழ்வார் ஹேயமான அவ்விஷயங்களைப்பற்றிச் சாந்தேந்து மென்முலையார் என்றும் தடந்தோள்புணரின்ப வெள்ளமென்றும விரக்தர்க்கும் காமம்பிறக்கும் படியாக எதுக்கு வருணித்துப்பேசுகிறார்? என்று சிலர் பட்டரைக்கேட்டார்களாம்; அதற்கு அவர் அருளிச்செய்ததாவது—உலகத்தில் வாக்குப்படைத்தவர்கள் பலவகைப்படுவர்; சிலர் உள்ளதை உள்ளபடியே பேசுவர்கள்; சிலர் சிறந்த விஷயத்தைப்பற்றிப் பேசத்தொடங்கினாலும் தங்களுடைய வாக்கின் திறமை போராமையினால் குறைபடப் பேசுவர்கள்; சிலர் நாவீறுடைமையினால் அற்பவிஷயங்களையும் கனக்கப் பேசுவர்கள்; இப்படி பேச்சில் பலவகைகளுண்டு.

http://acharya.org

பேசுகிறவர்களின் வாக்கின் போக்கை அநுஸரித்து விஷயங்கள் சிறுத்துப் போவதும் பெருத்துப்போவது முண்டு. திருமங்கையாழ்வாருடைய நாவீறு லோகவிலக்ஷணமாகையால் அற்பவிஷயங்களைப்பற்றிப் பேசும்போதும் பெருக்காறு பெருகுமாபோலே யிருக்குமேயன்றி அவ்விஷயங்களின் சிறுமைக்குத் தக்கபடி சிறுத்திராது இவருடைய சொற்போக்கு. 'வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார்வனமுலை' என்றாப்போலே பெருத்திருக்கும்; ஆகவே, விஷயங்கள் அற்பமென்பதில் தடையில்லை; இவருடைய வாக்குப் பரமகம்பீரமாகையால் அற்பவிஷயத்தையும் கனக்கப்பேசுகின்றது—என்றும்.

இங்கே வியாக்கியான வாக்கியம் காண்மின்;—"விஷயங்களை விட்டு இவ்வருகே போந்தவிவர் வீதராகர்க்கும் ஸ்ப்ருஹை பிறக்கும்படி சொல்லுவானென்?" என்று பட்டர்க்கு விண்ணப்பஞ்செய்ய $"மூரிக்குக் கிழக்கு' என்னும் போதும் இங்ஙனல்லது இராதுகாண் திருமங்கையாழ்வார் நாவீறு' என்றருளிச்செய்தார்.

கிடாம்பியம்மாள், சிறியாண்டான்பெருமாள் பணித்தானைப் பலகாலும் சொல்லும்; 'நாம் சொல்லுகிற வாசகங்களேயன்றோ பட்டரும் வ்யவஹரிக்கிறது! என்றிருக்கவொண்ணாது, அங்குத்தைக்கு ஏற்றமுண்டு. முன்னே நின்ற தூணை நாம் தூணென்றவாறே சிராயாய்த்தோற்றும்; பட்டர் சொன்னவாறே தளிரும்முறியுமாய்த் தோற்றும்' என்று."

தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன்—"ஆநந்தோ ப்ரஹ்ம" என்கிற உபநிஷத்தின்படியே பகவதநுபவமொன்றே இன்பவெள்ளமென்று கைகண்ட இவ்வாழ்வார், துன்பவெள்ளத்தை இன்பவெள்ளமென்கிறது அதிலே மயங்கியிருக்கும் உலகத்தாருடைய கருத்தாலேயென்க. இன்பவெள்ளம்போல் பிரமிக்கவிருப்பது கொண்டு. .... (௪)

மற்றோர்தெய்வமெண்ணேன் உன்னையென்மனத்துவைத்துப்
பெற்றேன் * பெற்றதுவும் பிறவாமையெம்பெருமான்! *
வற்றாநீள்கடல்சூழ் இலங்கை யிராவணனைச்
செற்றாய்! * கொற்றவனே! திருவிண்ணகரானே! (௫)

$ மூரிக்குக்கிழக்கு—அஸாரம் என்றபடி. மூரியாவது அணை; அதற்குக்கீழ்ப்பட்ட ஜலம் சழிவடைநீராய் அஸாரமாயிருக்குமென்று கொண்டு, அஸாரமென்னும் பொருளில் 'மூரிக்குக் கிழக்கு' என்று ப்ரயோகமாயிற்றென்ப. 'மேற்கு கிழக்கு என்னும் போதும்' என்று சிலர் பாடங்கொள்வது முண்டு. அதாவது, இன்னவிடம் மேற்கு, இன்னவிடம் கிழக்கு என்று ஒருவர் சொல்லவேண்டில் அதில் ஒரு வர்ணனையுமின்றியே 'மேற்கு கிழக்கு' என்றே சொல்லவேண்டியதாகும்; ஆனால் அதனையே திருமங்கையாழ்வார் வாக்கினால் சொல்லுவதாயிருந்தால் விலக்ஷணமாகவே யிருக்குமென்கை.

http://acharya.org

வற்றா நீள் கடல் சூழ்	ஒருநாளும் வற்றாத பெரியகடலால் சூழப்பட்ட
இலங்கை	லங்காபுரியில்
இராவணனை	ராவணனை
செற்றாய்	கொன்றொழித்தவனே !,
கொற்றவனே	தேவாதிதேவனே !
திரு விண்ணகரானே !—;	
மற்று ஓர் தெய்வம் எண்ணேன்	வேறொரு தெய்வத்தை நெஞ்சிலும் நினைப்பேனல்லேன் ;
எம்பெருமான்	ஸ்வாமிந் !,
உன்னை	உன்னை
என் மனத்து வைத்து	எனது நெஞ்சில் இருத்தி
பெற்றேன்	ஒரு பேறுபெற்றேன் ;
பெற்றதுவும்	அப்படி நான்பெற்ற பேறாவது
பிறவாமை	இனிப் பிறப்பில்லாமையே.

* * *—ஒருவராலும் அழிக்கவொண்ணாத அரணையுடைத்தான இலங்கையை நீறுபடுத்தி இராவணனையும் வேரோடே களைந்தொழித்தாப்போலே அடியேனுடைய பிரதிபந்தகங்களையெல்லாம் தொலைத்தருளின பெருமானே ! நான் ஆச்ரயிக்கத்தகுந்த தெய்வம் வேறொன்று இருப்பதாக நெஞ்சிலும் நினையேன் ; ஸர்வஸ்மாத் பரனான உன்னையே நெஞ்சில் தாங்கி அலப்யலாபம் பெற்றேன் ; என்ன பேறு பெற்றேனென்னில், தேவதாந்தரங்களை ஆச்ரயிப்பதற்கு ஒருகால் காரணமாகக்கூடிய ஜன்மமும் தொலையப்பெற்றேன் ; திருவிண்ணகரிற் கண்ட காட்சியிலே பெற்ற பேறுகாண் இது. .... (௫)

மையொண்கருங்கடலும் நிலனும்மணிவரையும் *
செய்யசுடரிரண்டும் இவையாயநின்னை * நெஞ்சில்
உய்யும்வகையுணர்ந்தேன் உண்மையாலினி * யாதும்மற்றோர்
தெய்வம்பிறிதறியேன் திருவிண்ணகரானே ! (௬)

திரு விண்ணகரானே !—;	
மை ஒண் கரு கடலும்	மைபோன்று அழகியதாய்க் கறுத்திருக்கின்ற ஸமுத்ரமும்
நிலனும்	பூமியும்
மணி வரையும்	சிறந்த பர்வதங்களும்
செய்ய இரண்டு சுடரும்	அழகிய சந்த்ர ஸூர்யர்களும்
இவை ஆய நின்னை	ஆகிய இப்பொருள்களாய் விரிந்து நிற்கிறவுன்னை
நெஞ்சில்	நெஞ்சினால்,
உய்யும் வகை	நான் உஜ்ஜீவிக்கும்படி
உண்மையால் உணர்ந்தேன்	உள்ளபடி தெரிந்து கொண்டேன் !
இனி	இப்படியான பின்பு
மற்று	இதற்குமேலே
பிறிது ஓர் தெய்வம் யாதும் அறியேன்	எவ்விதமான தேவதாந்தரத்தையும் நினைக்கமாட்டேன்.

* * *—இப்பாட்டில் "மற்றோர் தெய்வமெண்ணேன்" என்றதை மேறது வேரோடே உபபாதிக்கிறாரிதில். திருவிண்ணகர்ப்பெருமானே !, ஸப்தஸாகரங்கள், அவற்றால் சூழப்பட்ட பூமி, அதற்கு ஆணியடித்தாற்போலேயிருக்கிற குலாசலங்கள், சந்திரன் ஸூர்யன் முதலிய சுடர்ப்பொருள்கள் ஆகிய இவை

http://acharya.org

யெல்லாம் நீயே; உன் உருவமே இவையெல்லாம் என்று நான் நன்குணரப் பெற்றேனாதலால் ஸர்வசரீரியான உன்னைவிட்டு உனது சரீரமான தேவதாந்தரங்களைத் தெய்வமாக நெஞ்சில்தான் நினைப்பனோ? இதுவரையில் நான் அழிந்து போனதுபோலல்லாமல் இனி உஜ்ஜீவிக்க ப்ராப்தனாயினேனாதலால் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்றதாயிற்று. .... (சு)

வேறேகூறுவதுண்டு அடியேன்விரித்துரைக்கு
மாறே * நீபணியாதடை நின்திருமனத்து *
கூறேன்நெஞ்சுதன்னால் குணங்கொண்டு * மற்றோர்தெய்வம்
தேறேனுன்னையல்லால் திருவிண்ணகரானே! (எ)

திரு விண்ணகரானே!—;	
அடியேன்—;	
வேறே	விலக்ஷணமாக
கூறுவது உண்டு	விண்ணப்பஞ்செய்வதொரு வார்த்தையுண்டு;
விரித்து உரைக்கும் ஆறே நீ பணியாது	(நான்) விரிவாகக்கேட்க வேண்டும்படி நியமியாமல்
நின் திருமனத்து	உன் திருவுள்ளத்தில்
அடை	ஸாரமாகக் கொண்டருள வேணும்;
உன்னை அல்லால்	உன்னையொழிய
மற்று ஓர் தெய்வம்	வேறொரு தெய்வத்தை
கூறேன்	வாய்விட்டுச் சொல்லமாட்டேன்;
குணம் கொண்டு	(அவர்களிடத்தில்) குணவிசேஷத்தைக் கண்டாகிலும்
நெஞ்சு தன்னால்	நெஞ்சினால்
தேறேன்	(அவர்களை ஆச்ரயணீயராக) விச்வஸிக்கமாட்டேன்.

* * *—அடியேன் வேறே கூறுவதுண்டு=தோற்றினபடி கும்பலில் சொல்லுகிற வார்த்தைபோலல்லாமல் இவ்வார்த்தை ரஹஸ்யமாய் மிக முக்கியமாக விண்ணப்பஞ்செய்கிற தென்றபடி.

விரித்துரைக்குமாறே பணியாது=தேவரீர்க்கும் அடியேனுக்கும் நடக்கிற ஸம்வாதம் கீதாசாஸ்த்ரம்போலே விரிந்திருக்கவொண்ணாது; அதாவது—கீதையிலே முடிவாக அருளிச்செய்த சரமச்லோகத்தை முதலிலேயே அருளிச்செய்திருந்தால் அவ்வளவு நூல்விரிவு நேராதிராது; தேவரீர் ஒன்று சொல்ல, அதற்கு அர்ஜுநன் கலங்கிப் பல கேள்விகள் கேட்க, அவற்றுக்கு தேவரீர் உத்தரமருளிச்செய்ய, அதற்குமேலும் பலபல சங்கைகள் தோன்றி அர்ஜுநன் கேள்விகள்கேட்க, இப்படியே கீதாசாஸ்த்ரம் விரிந்ததாயிற்று; அப்படியல்லாமல் இப்போது தேவரீர் ஸாரமாகத் திருவுள்ளம் பற்றவேணும்; அதற்குமேல் அடியேன் ஒன்றும் வாய்திறக்கும்படி யிருக்கவொண்ணாது; "ஸ்திதோஸ்மி கத ஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ=ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ" [சஞ்சலமற்று நிலைபெற்றேன், ஸந்தேஹங்கள் தீர்ந்தேன், தேவரீர்

http://acharya.org

சொன்னபடியே செய்கிறேன்] என்று கையெழுத்திடும்படி அருளிச்செய்ய வேணுமென்கை. 'ஆழ்வீர்! உம்மைத் திருவடி சேர்த்துக்கொண்டேன்' என்றருளிச் செய்யவேணுமென்பதே தேர்ந்த பொருள்.

அடியேன் வேறுகதியற்றவனாகையால் இவ்வருள் செய்தே தீரவேணுமென்கிறார் பின்னடிகளில். .... (எ)

முளிந்தீந்த வெங்கடத்து மூரிப் பெருங்களிற்றால் *
விளிந்தீந்தமாமரம்போல் வீழ்ந்தாரைநினையாதே *
அளிந்தோர்ந்தசிந்தை நின்பாலடியேற்கு * வானுலகம்
தெளிந்தேயென் றெய்துவது திருவிண்ணகரானே! (அ)

	திருவிண்ணகரானே!—;	நினையாதே	நினையாமல்
முளிந்து தீந்த	உலர்ந்து தீஞ்சுபோன	நின்பால்	உன்னிடத்தில்
வெம் கடத்து	வெவ்விய பாலைநிலத்திலே	அளிந்து ஓர்ந்த சிந்தை அடியேற்கு	கனிந்து தெளிந்த மனமுடையேனான எனக்கு
மூரி பெரு களிற்றால்	வலிய பெரியயானையினால்	தெளிந்து	இந்த ஸம்ஸாரக் கலக்கங்கள் நீங்கி
விளிந்து	தள்ளப்பட்டு	வான் உலகம் எய்துவது என்று	பரமபதம் அடையும் நாள் எதுவோ?.
தீந்த	கெட்டுப்போன		
மா மரம் போல் வீழ்ந்தாரை	பெரியமரங்கள்போல் தொலைந்துபோனவர்களை		

* * *—தீக்ஷ்ணமான மருகாந்தாரத்திலே வலிதான ஒரு யானையாலே தள்ளப்பட்டு உருமாய்ந்து போகிற பெரிய மரங்கள் போலே இவ்வுலகில் எத்தனையோ பலசாலிகள் கருமங்களாலே முடிக்கப்பட்டு முடிந்துபோகிறார்களாதலால் இப்படிப்பட்ட ஸம்ஸாரத்தை ஒரு பொருளாக மதியாமல் பரமதயாளுவான தேவரீர் பக்கலிலே நெஞ்சைச் செலுத்தியிருக்கு மடியேனுக்குப் பரமபதம் கிடைக்கும் நாள் எதுவோ அந்நாளை யருளிச்செய்யவேணும் திருவிண்ணகரப்பனே!—என்கிறார்.

முளிந்து + தீந்த, முளிந்தீந்த; விளிந்து + தீந்த, விளிந்தீந்த. (சங்கு + கதை, சங்கதை என்றாவதுபோல.) வெம் கடம்—கடூரமான பாலைநிலம். இந்த ஸம்ஸாரமே முளிந்தீந்த வெங்கடமாகவும், கருமங்களே மூரிப்பெருங்களிறாகவும், மாண்டொழிந்த அரசர்கள் விளிந்தீந்த மாமரமாகவும் கொள்க .... (அ)

சொல்லாய்திருமார்பா! உனக்காகித் தொண்டுபட்ட
நல்லேனை * வினைகள்நலியாமை நம்புநம்பீ! *
மல்லா! குடமாடீ! மதுசூதனே! * உலகில்
செல்லாநல்லிசையாய்! திருவிண்ணகரானே! (கூ)

http://acharya.org

திரு விண்ணகரானே !—;

மல்லா	மிடுக்குடையவனே !
குடம் ஆடி	குடக்கூத்தாடினவனே !
மதுசூதனே	மதுவென்னும் அசுரனைக் கொன்றவனே !
உலகில் செல்லா	லோகத்தில் நடையாடாத [அபூர்வமான]
நல் இசையாய்	நல்ல கீர்த்தியையுடையவனே !.
நம்பீ	பரிபூர்ணனே !,
திரு மார்பா	பிராட்டியை மார்வில் உடையவனே !,
சொல்லாய்	அடியேனுக்கு மறுமொழி கூறியருளவேணும் ;
உனக்கு ஆகி	உன்விஷயத்தில்
தொண்டு பட்ட	அடிமைபூண்ட
நல்லேனை	விலக்ஷணனனான வென்னை
வினைகள் நலியாமை	பாவங்கள் தொந்தரவு செய்யாதபடி
நம்பு	ஆதரித்தருளாய்.

* * *—அடியேனுடைய குற்றங்களையும் நற்றமாக உபபாதிக்கவல்ல பிராட்டி இணைபிரியாதிருக்கும்போது அடியேனுக்கு என்ன குறை? திருமாலே! மிடுக்குடையவனே! மிடுக்குக்குப் போக்குவீடாகக் குடக்கூத்தாடினவனே! பரிபூர்ணனே! மதுவைக்கொன்றவனே! லோகவிலக்ஷணமான புகழையுடைய திருவிண்ணகரப்பனே! சோதிவாய் திறந்து ஒருவார்த்தை யருளிச்செய்ய வேணும்; தேவரீருக்கே அடிமைப்பட்டிருக்கையாகிற நன்மையையுடைய அடியேனைக் கருமங்கள் நெருக்காதபடி ஆதரித்தருளவேணுமென்கிறார்.

திருவாய்மொழியில் (10—2—1.) "கெடுமிடராயவெல்லாம்" என்ற பாசுரத்தின் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் பட்டருடைய ஐதிஹ்யமொன்று அருளிச்செய்யப்பட்டுள்ளது, அது இங்கே அநுஸந்திக்கவுரியது; அதாவது—ஒருநாள் அழகிய மணவாளன் வேட்டைத்திருநாளுக்காக ஓர் ஆற்றங்கரையிலே எழுந்தருளியிருந்தார்; அங்கே பல ஸ்ரீவைஷ்ணவர்களுந் தாமுமாய் பட்டர் எழுந்தருளியிருந்து பெருமாள் வடிவழகிலே ஈடுபட்டு அழகிய ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்து கொண்டிருக்கையில், சில அரஸிகர்கள் வந்து 'ஸந்த்யாகாலமாயிற்று' என்று விண்ணப்பம் செய்தார்கள்; ஸந்த்யாவந்தநம் அநுஷ்டிக்க வேணுமாகையாலே அதற்கு இடையூறாயிருக்கும் உபந்யாஸத்தை நிறுத்தியருளவேணுமென்பது அவர்களுடைய கருத்துப்போலும்; அப்போது பட்டர் 'நாம் பெருமாளழகிலே துவக்குண்டு இன்றொருநாள் அநுஷ்டாநத்தில் சிறிது விளம்பித்தோமென்றால் யமனுடைய ஓலையிலே இது ஒரு குற்றமாக ஏறமாட்டாது காணும்; "உனக்காகித் தொண்டுபட்ட நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரம் அறியீர்களோ? அவனுக்காகத் தொண்டுபட்டுப் போதுபோக்குமவர்களை வினைகள் நலியுமோ? இத்யாதிகள் அருளிச்செய்தாராம்.

மூன்றாமடியில், "மல்லார் குடமாடி" "மல்லாற் குடமாடி" "மல்லா! குடமாடி" என மூன்று பாடங்கள் உண்டு; மல்லா! என விளியான பாடமே

http://acharya.org

மிகவழங்குவது. குடமாடி !—தலையில் குடங்களை வரிசையாக அடுக்கிவைத்துக் கொண்டு அவை அசையாமல் நர்த்தனஞ்செய்வது குடக்கூத்தாம். .... (௯)

தாரார் மலர்க்கமலத் தடஞ்சூழ்ந்த தண்புறவின் *
சீரார் நெடுமறுகில் திருவிண்ணகரானை *
காரார் புயற்றடக்கைக் கலியனொலிமாலை *
ஆராரிவைவல்லார் அவர்க்கல்லல் நில்லாவே. (௧௦)

தார் ஆர் மலர்	இதழ்மிக்க பூக்களையுடைத்தான
கமலம் தடம்	தாமரைத்தடாகங்களினால்
சூழ்ந்த	சூழப்பட்ட
தண் புறவின்	குளிர்ந்த தோட்டங்களையுடையதாய்
சீர் ஆர் நெடு மறுகில்	செல்வம் மிக்க நீண்ட வீதிகளையுடையதான
திரு விண்ணகரானை	திருவிண்ணகரிலே எழுந்தருளியிருக்கிற அப்பன் விஷயமாக,
கார் ஆர் புயல் தட கை கலியன்	காளமேகம் போன்று ஔதார்யத்தையுடைய நீண்டகைகளையுடையரான திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	சொல்மாலையாகிய
இவை	இப்பாசுரங்களை
ஆர் ஆர் வல்லார்	எவரெவர் ஓதுகின்றனரோ,
அவர்க்கு	அவரவர்கட்கு
அல்லல்	பாவங்கள்
நில்லா	தங்கமாட்டாமல் ஓடிப்போய் விடும்.

* * *—இதழ்மிக்க பூவையுடைத்தான தாமரைத்தடாகங்களாலே சூழப்பட்ட குளிர்ந்த சுற்றுப்பிரதேசங்களையுடையதும் செல்வம் மிகுந்த பெரிய திருவீதிகளையுடையதுமான திருவிண்ணகரிலே எழுந்தருளியிருக்கிற தன்னொப்பாரில்லப்பன் விஷயமாகப் பரமோதாரரான திருமங்கைமன்னனருளிச்செய்த இத்திருமொழியை ஓதுமவர்கள் யாராயிருந்தாலும் அவர்களிடத்தில் எவ்விதமான துக்கமும் நிற்கமாட்டாதென்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—துறப்பேன் துறந்தேன் மானேய் சாந்து மற்றோர் மை வேறே முளிந்தீந்த சொல்லாய் தாரார் கண்ணும்.

மூன்றாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து—நாலாந்திருமொழி,

கண்ணுஞ்சுழன்று.

அவதாரிகை:—கீழ்த்திருமொழியில் "கோனே குறுங்குடியுள்குழகா திருநறையூர்த்தேனே!" என வந்தவிடத்தில் "திருநறையூர்ப் பெருக்குக்குச் சினையாறு படுகிறது கிடாய்" என்றன்றோ பட்டர் அருளிச்செய்தது; அப்படியே திருநறையூர் விஷயமான நூறு பாசுரங்களாகிற பெருவெள்ளம் பெருகத் தொடங்குகின்றது இப்போது. இத்திருமொழி தொடங்கி மேல் ஏழாம்பத்தில் மூன்றாந்திருமொழி முடிய [திருச்சேறைப்பதிகம் வருமளவும்] திருநறையூரில் ஈடுபட்டு அருளிச்செய்யும் திருமொழிகளாம்.

கீழ் மூன்று திருமொழிகளில் திருவிண்ணகரப்பன் திருவடிகளிலே தம்முடைய ஆர்த்தியைப் பரக்க விண்ணப்பஞ்செய்தார்; இப்போதே இவ்விருள் தருமா ஞாலத்தைவிட்டுத் திருநாடுசேரப் பாரித்தார்; எம்பெருமான் 'ஆழ்வீர்! திருநாட்டுக்குப் போலியான திருப்பதிகள் இங்கேயிருக்க அங்குப்போகத் துடிப்பதேன்? நாளடைவிலே போகலாம்; திருநறையூரின் போக்யதையைப் பாரும்; இதிற்காட்டிலும் பரமபதத்தில் விசேஷமுண்டென்று நினைக்கிறீரோ?' என்ன, அப்படியாகில் இவ்விடத்தே அநுபவிக்கிறேனென்று இழிகிறார். *

கண்ணுஞ்சுழன்று பீளையோடு ஈளைவந்தேங்கினால் *
பண்ணின்மொழியார் பையநடமி னென்னாதமுன் *
விண்ணும் மலையும் வேதமும்வேள்வியுமாயினான் *
நண்ணுநறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (க)

பீளையோடு	பிளிச்சையோடுகூட
கண்ணும் சுழன்று	கண்கள் சுழலவிட்டு
ஈளை வந்து	கோழைமேலிட்டு
ஏங்கினால்	தளர்ச்சியடைந்தால்,
	(அப்பொழுது)
பண் இன் மொழியார்	இசைப்பாட்டுபோல் இனிமையான வாய்மொழியையுடையமாதர்
	(நம்மைநோக்கி)
பைய நடமின் என்னாதமுன்	'மெல்ல நடந்துசெல்லுங்கள்' என்று (திரஸ்கரித்துச்) சொல்வதற்கு முன்,—

விண்ணும்	ஆகாசமும்
மலையும்	பர்வதங்களும்
வேதமும்	வேதங்களும்
வேள்வியும்	யாகங்களும்
ஆயினான்	தானேயாயிருக்குமெம்பெருமான்
நண்ணும்	விரும்பியுறையுமிடமான
நறையூர்	திருநறையூரை
நெஞ்சமே	ஓ மனமே!
நாம் தொழுதும்	நாம் வணங்குவோம்;
எழு	எழுந்திரு.

http://acharya.org

* * *—யௌவனபருவத்தில் இஷ்டப்படி விஷயபோகங்கள் செய்யவேண்டியதென்றும், அப்படி விஷயபோகஞ் செய்வதற்கு சக்தியில்லாமல் உடல் தளர்ந்தகாலத்திலே பகவத்பக்தி மிக்கு திவ்யதேசங்களிலே போதுபோக்க வேண்டியதென்றும் பலர் கருதியிருப்பதுண்டு; யௌவனபருவத்தில் விஷயபோகங்கள் செய்பவர் ஒருநியதியில்லாமல் கண்டவிடங்களிலும் கட்டித்திரிவார்கள்; சரீரத்திற்கு எவ்வளவு கிழத்தனம் வரக்கூடுமோ அவ்வளவும் வந்து, நடந்து செல்லமாட்டாமல் ஒரு தடியைப்பற்றிக்கொண்டு முதுகு கூனிட்டு நடக்கும் நிலைமை நேர்ந்தவிடத்தும் நப்பாசை வழியாயேயாலே பூர்வவாஸனையே கொண்டு வேசிகளின் வீட்டுவாசலிலேயே பற்றிக்கிடக்கும்படியாகும்; அவர்கள் இவர்களைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளினாலும் அவர்களது முகத்தைப்பார்ப்பதும் முறுவலை யெதிர்பார்ப்பதுமா யிருப்பார்களேயன்றி அவ்வளவிலுங்கூட விரக்திபிறவாது; திவ்யதேசங்களில் ஈடுபாடும் உண்டாகாது; ஆகையால் விஷயாந்தரங்களில் கைவைப்பது ஒருநாளும் க்ஷேமப்படுவதற்கு உறுப்பாகமாட்டாது; இப்போதே திருநறையூரைத் தொழுவது நன்று என்கிறார். * இளமையொளி கெடுவதன் முன்னமே இது செய்யத்தக்கதென்கை.

கிழத்தனத்தில் கண்கள் சுழலமிடுவதும் கண்களினின்று பீளிச்சைபெருகுவதும் கோழை வருவதும் இயல்பாதலால் முதலடி கிழத்தனத்தின் முதிர்ச்சியைச்சொன்னபடி. அப்படிப்பட்ட நிலைமையிலும் முன்பு கலந்து பழகின மாதர்களை விடமாட்டாத நப்பாசை தொடர்ந்தே வருமென்பது இரண்டாமடியில் தொனிக்கும். த்ரவ்யாம் தேஹவலிமையும் உள்ளவரையில் அவர்கள் ஆதரிப்பர்களேயன்றி, அவை போனால் நப்பமாட்டார்களே; அது தெரிந்தும் நப்பாசையின் கொடுமையினால் அங்கே தாவுவர்கள்; அப்போது 'உங்களுக்கு இங்கென்ன காரியம்? நடவுங்கோள்' என்பர்கள்; இப்படிப்பட்ட திரஸ்காரத்தையே போக்யமாகக்கொண்டு போதுபோக்குவர்கள்; அவ்வளவிலும் திவ்ய தேசத்தைப் பணிய நெஞ்சு ஒருப்படாது; ஆகையாலே விஷயாந்தரங்களைக் காறியுமிழ்ந்து திருநறையூரைத் தொழுவோமென்கை. கிழத்தனத்தைக்கண்டு வெறுத்து 'ஒழிந்துபோ, ஒழிந்துபோ' என்று நாத்திக் தள்ளச்செய்தேயும் 'அஹஹ! இது என்ன இனிமையான பேச்சு!; யாழினிசைபோலே வாய்மொழியினழகு இனிதாயிருக்கின்றதே!' என்று அவர்களுடைய பேச்சில் ஈடுபட்டிருப்பர்களென்பது தோன்றப் பண்ணின் மொழியார் எனப்பட்டது.

'என்னுதமுன் நாம் தொழுதும்' என்று தன்மையாகச் சொல்லப்பட்டிருந்தாலும் இதற்கு முன்னிலையில் முழுநோக்கென்க; 'பாவிகாள்! இளவொளியிளமை கெடுவதன்முன்னம் திருநறையூரைத் தொழுங்கோள்' என்று பிறரை நோக்கிச் சொல்லவேண்டியதையே 'நாம் தொழுதும்' என்ற சொற்போக்கால் சொல்லுகிறபடி. முகுந்தமாலையில் "நாயெநீ வாஸஷொதெ... நாஸயனெ திஷ்டி — வைவாவெயத்ர மயாசஹெ நாசஹொச வியாவராகாவயம்" என்ற ச்லோகம் இவ்விஷயத்தில் ஒப்பு நோக்கத்தக்கது. 'ஐயோ! நீ பாழாய்ப்

http://acharya.org

போகிறாயே!' என்று பிறரைப்பார்த்துரைத்தால் சிறப்புடைப்பன் என்று அஞ்சுமவர்கள் 'ஐயோ! நாம் பாழாய்ப்போகிறோமே!' என்று தன்மையாகச் சொல்லிக்கொள்ளுதல் உலகவழக்கிலும் காணத்தக்கது. ... . (க)

கொங்குண்குழலார் கூடியிருந்துசிரித்து * நீர்
இங்கென்னிருமி யெம்பால்வந்ததென் றிகழாதமுன் *
திங்களெரிகால் செஞ்சுடராயவன் தேசுடை *
நங்கள் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (உ)

கொங்கு உண் குழலார்	மணம்பொருந்திய கூந்தலை யுடையரான மாதர்	திங்கள்	சந்திரனும்
கூடி இருந்து	கூட்டமாகத் திரண்டிருந்து	எரி	அக்நியும்
சிரித்து	பரிஹாஸம்பண்ணி	கால்	காற்றும்
நீர்	'நீங்கள்	செம் சுடர்	ஸூரியனும்
இருமி	இருமிக்கொண்டு	ஆயவன்	ஆகிய இப்பொருள்களா யிருக்கும் எம்பெருமா னுடையதும்
இங்கு	இவ்விடத்தில்	தேசு உடை	தேஜஸ்ஸையுடையதும்
எம்பால் வந்தது	எங்களிடத்தில் வந்தது	நங்கள்	நமக்குப் புகலிடமானதுமான
என்	எதுக்காக?'	நறையூர்	திருநறையூரை
என்று இகழாத முன்	என்று திரஸ்கரிப்பதற்கு முன்னே,—		நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—:

* * *—லொக்குலொக்கென்று இருமியிளைக்குங்காலத்திலும் பூர்வவாஸனையாலே வேசிகளின் வீடுகளை நோக்கியே செல்ல நேருமே; அப்போது பரிஹாஸம் பண்ணுவதற்காக அவர்களெல்லாரும் ஒன்றுகூடி 'ஐயா! முற்ற மூத்த கிழவனாரே! இருமிக்கொண்டே எங்கு வருகிறீர்? எதற்காக நம்மிடம் வருகிறீர்?' என்று அநாதரித்துச்சொல்லும் வார்த்தைகள் செவிப்படுவதற்கு முன் திருநறையூர் தொழுவது நன்று.

கொங்குண்குழலார்=(வண்டுகள் படிந்து) தேனைப்பருகப்பெற்ற கூந்தலையுடையார் என்னவுமாம். அவர்கள் பரிஹஸிக்கத் தள்ளக்கொள்ளுகிறபோதும் 'இப்படியும் ஒரு கூந்தலழகுண்டோவுலகில்!' என்று வருணிப்பர் காமுகர் என்பது இதில் தோன்றும்.

'தேஜஸ்' என்னும் வடசொல் தேசு எனத்திரிந்தது. .... (உ)

கொங்கார்குழலார் கூடியிருந்துசிரித்து * எம்மை
எங்கோலமையா! என்னினிக்காண்பதென்னுதமுன் *
செங்கோல் வலவன்தான் பணிந்தேத்தித் திகழுமூர் *
நங்கோன் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (ங)

http://acharya.org

கொங்கு ஆர் குழலார்	(தலைப் பூக்களில்நின்றும் பெருகின) தேன்நிறைந்த கூந்தலையுடைய மாதர்	என்னாத முன்	என்று திரஸ்கரிப்பதற்கு முன்னே,
கூடி இருந்து	திரளாக இருந்து	செங்கோல் வலவன் தான்	அரசாட்சிபுரிந்த சோழராஜன்
சிரித்து	பரிஹாஸம்பண்ணி	பணிந்து	ஆச்ரயித்து
ஐயா	'கிழவனே!	எத்தி	துதித்து
இனி	இப்படி நீர் கிழத்தன மடைந்த பின்பு	திகழும் ஊர்	விளங்கப் பெற்ற திவ்யதேசமாய்
எம்மை	எங்களையும்	நம் கோன்	எம்பெருமானுடையதான
எம் கோலம்	எங்களுடைய அலங்காரத்தையும்	நறையூர்	திருநறையூரை
என் காண்பது	எதுக்காகப் பார்ப்பது?'		நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—ஒன்றுக்கும் உதவாதபடி உடல் மெலிந்து தளர்ந்தொழிந்தாலும் நப்பாசையாலே அங்குச்சென்று அவர்களது இயற்கையழகிலே கண்வைப்பதும் ஆபரணாதிகளாலுண்டான செயற்கையழகிலே கண்வைப்பதுமாயிருப்பர்களே; அப்போது அவர்கள் * மொளேசொயக் கண்ணிடுங்கிப் பித்தெழ மூத்திருமித் தாள்கள்நோவத் தம்மில் முட்டித் தள்ளிநடக்கும் பிப்பருவத்திலே நீர் எங்களுடம்பையும் எங்களழகையும் நோக்குவது எதுக்கு?' என்று ஏசுவர்கள்; அப்படிப் பட்ட நிலைமை நேருவதற்கு முன்னமே திருநறையூரைத்தொழுவது நன்று.

செங்கோல் வலவன் தான்பணிந்தேத்தித் திகழுமூர்=திருவல்லிக்கேணியில் தொண்டையர்கோன் போலவும், பரமேச்சுர விண்ணகரத்தில் பல்லவன் மல்லையர்கோன் போலவும், அட்டபுயகரத்தில் வயிரமேகன் போலவும், நந்திபுர விண்ணகரத்தில் நந்திவருமன் போலவும் இத்திருப்பதியில் செங்கணான் கோச்சோழன் அபிமானியாயிருப்பனென்க. மேல் "அம்பரமும் பெருநிலனும்" என்ற திருமொழியில் ஒவ்வொரு பாசுரத்திலும் இது அருளிச்செய்யப்படுவது காண்க. நாட்டை ஆண்டுகொண்டு அஹங்காரியாய்ப் போதுபோக்க வேண்டியவனும் இத்தலத்திற் பணிந்து உய்வுபெற்றமை விளங்கச் **செங்கோல் வலவன் தான்** என்றார். .... (ந.)

கோம்புமரவமும் வல்லியும் வென்றநுண்ணேரிடை *
வம்புண்குழலார் வாசலடைத்திகழாதமுன் *
செம்பொன்கமுகினந்தான் கனியுஞ் செழுஞ்சோலைசூழ் *
நம்பன் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (ச)

கொம்பும்	வஞ்சிக் கொடியையும்	நுண்	நுட்பமாய்
அரவமும்	ஸர்ப்பத்தையும்	ஏர்	அழகியதான
வல்லியும்	இளங்கொடியையும்	இடை	இடையையுடையரும்
வென்ற	தோற்கடித்த		

http://acharya.org

வம்பு உண் குழலார்	பரிமளம் மிக்க கூந்தலை யுடையருமான பெண்கள்
வாசல் அடைத்து	வாசற்கதவைப் போட்டு விட்டு
இகழாத முன்	அவமானப்படுத்துவதற்கு முன்னே—,
கமுகு இனம்	பாக்குமரங்களின் இனங்கள்
செம் பொன்	செவ்வியபொன்போலே
கனியும்	பழுத்திருக்கப்பெற்ற
செழு சோலை	வளம்மிக்க சோலைகளாலே
சூழ்	சூழப்பட்டதும்
நம்பன்	விச்வஸிக்கத்தகுந்த எம்பெருமானுடையதுமான
நறையூர்	திருநறையூரை

நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—அசக்தி மேலிட்டகாலத்தும் சாபல்யம் தவிராமையாலே 'இதொரு துவண்ட இடை இருக்கு மழகு என்கொல்!' என்று அவர்களது அவ்யவஸ்திதார்த்தை வாய்வெருவிக்கொண்டு அடியுமன்றி அங்கேறச் செல்வர்கள்; 'அசக்தனும் தரித்ரனுமாகிய இப்பாவி எதுக்கு இங்கு வந்தான்?' என்று இகழ்ந்து 'ஒழிந்துபோ கிழவா!' என்பர்கள்; அவ்வளவிலும் உள்ளே நுழையப் பார்ப்பர்கள்; வாசற்கதவை நெருக்கியடைத்துத் தூரத்துவர்கள். இப்படிப் பட்ட பரிபவங்களுக்குப் பாத்திரமாகாமல் திருநறையூர் தொழுவது நன்று.

விலங்குங்கயலும் வேலுமோண்காவியும்வென்றகண் *
சலங்கொண்டசொல்லார் தாங்கள்சிரித் திகழாதமுன் *
மலங்கும்வராலும் வாளையும்பாய்வயல்சூழ்தரு *
நலங்கொள் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (௫)

விலங்கும்	மானையும்
கயலும்	மீனையும்
வேலும்	வேற்படையையும்
ஒண் காவியும்	அழகிய செங்கழுநீர்ப்பூவையும்
வென்ற	தோற்கடித்த
கண்	கண்களையுடையரும்
சலம் கொண்ட சொல்லார் தாங்கள்	கபடமுள்ள சொற்களை யுடையருமான பெண்கள்
சிரித்து	பரிஹாஸம்பண்ணி
இகழாத முன்	திரஸ்கரிப்பதற்கு முன்னே,—
மலங்கும் வராலும் வாளையும்	பலவகைப்பட்ட மீன்கள்
பாய்	துள்ளிவிளையாடுகின்ற
வயல்	கழனிகளாலே
சூழ்தரு	சூழப்பட்டதும்
நலம் கொள்	நன்மைமிக்கதுமான
நறையூர்	திருநறையூரை

நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—"மாதரார் கயற்கண்ணென்னும் வலைப்பட்டழுந்துவேனை" என்கிறபடியே மாதர்களது கண்வலையிலகப்பட்டு 'இப்படியுமொரு கண்ணழகுண்டோ?' என்று ஈடுபட்டு முதுமையிலும் விடமாட்டாதே அங்குச்சென்று அவர்களுடைய கண்களிலேயே கண்வைத்திருப்பர்கள்; 'ஐயோ! இந்தக்கிழவனுக்கு நம் கண்ணிலே என்ன காரியமுண்டு' என்று சொல்லி அவர்கள் சிரித்துத் தூரத்து

http://acharya.org

வர்கள்; இப்படிப்பட்ட பரிபவங்களுக்கு ஆளாகாமல் திருநறையூரைத் தொழுவது நன்று.

வெருண்டாற்போல் பார்க்கிற பார்வைக்கு மான்நோக்கும், பளபளவென்று மினிர்தற்கும் புடைபரந்து நீண்டிருக்குந் தன்மைக்கும் மீனும், கூர்மையாகப் பாயுந்தன்மைக்கு வேலும் கண்ணுக்கு ஒப்பாகுமாதலால் “ விலக்குங்கயலும் வேலுமொண்காவியும் வென்றகண் ” எனப்பட்டது.

சலங்கொண்ட சொல்லார் = ‘ சலம் ’ என்ற வடசொல் கபடமென்னும் பொருளது; மேலே தேனொழுகப் பேசுவதும் உள்ளே கபடங்கொண்டிருப்பதும் மாதர்களது பெரும்பான்மையான இயல்பு என்பது “மது திஷ்டதி வாசி யோஷிதாம் ஹ்ருதி ஹாலாஹலமேவ கேவலம்—மது திஷ்டதி வாசி யோஷிதாம் ஹ்ருதி ஹாலாஹலமேவ கேவலம்’ என்ற கவிகளின் ச்லோகத்தாலும் விளங்கும்.

மலங்கு என்பதும் வரால் என்பதும் வாளை என்பதும் மீன்களின் அவாந்தர ஜாதிபேதம். .... (ரு)

மின்னேரிடையார் வேட்கையை மாற்றியிருந்து *
என்னீரிருமி யெம்பால் வந்ததென் றிகழாதமுன் *
தொன்னீ ரிலங்கைமலங்க விலங்கெரியூட்டினான் *
நன்னீர் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (சு)

மின் நேர் இடையார் } மின்னல்போன்ற இடையையுடையரான மாதர்
வேட்கையை { (முன்பு வைத்திருந்த) ப்ரீதியை
மாற்றி இருந்து } தவிர்ந்தவர்களாய்க் கொண்டு
நீர் ‘(கிழவரான) நீங்கள்
இருமி இருமிக்கொண்டு
எம்பால் வந்தது என் என்று } எங்களிடம் வந்தது எதுக்காக?’ என்று
இகழாத முன் { திரஸ்கரிப்பதற்கு முன்னே,—

தொல் நீர் இலங்கை } கடல்சூழ்ந்த லங்காபுரி
மலங்க வியாகுலப்படும்படி
விலங்கு { (அநுமானாகிற) வானர வீரனைக் கொண்டு
எரி ஊட்டினான் } தீமூட்டிவிட்ட பெருமானுடையதாய்
நல் நீர் { நல்ல தீர்த்தங்களை யுடையதான
நறையூர் திருநறையூரை
நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—மின்போல் நுட்பமான இடையையுடையரான மாதர்கள் தாங்கள் யௌவனத்தையும் பொருள்மிகுதியையுங்கண்டு வைத்திருந்த அன்பை ‘ காரணமொழிந்தால் காரியமுமொழியும் ’ என்கிற நியாயப்படியே தவிர்த்துக்கொண்டு ‘ கிழவா! நீ எங்கள் பக்கல் எதுக்கு வருகிறாய்? இருமிக்கொண்டே வருகிறாயே, இந்த இருமல் எங்களுக்கு நீ கொடுக்கும் பரிசிலோ?’ என்றிப்படிப்பட்ட பரிஹாஸ வார்த்தைகளைச்சொல்லி ஏசும்படியாக இடம் வைத்துக்கொள்ளாமல்

http://acharya.org

* இலங்கை பாழாளாகப் படைபொருத பெருமானுறையும் திருநறையூரைத் தொழுவது நன்று.

மூன்றாமடியின் பிற்பகுதியை 'விலங்கெரி' என்று மெடுக்கலாம்; 'இலங்கெரி' என்று மெடுக்கலாம். முந்தினதில், விலங்காலே எரியூட்டினான்—ஹநுமானென்கிற சாகாமிருகத்தைக்கொண்டு தீக்கொளுவித்தவன் என்றதாம். பிந்தினதில், இலங்கு—ஜ்வலிக்கின்ற என்றபடி. இதற்கு முன்பு அக்நியானவன் இலங்கையினுட் புகுவதற்கு அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தான்; சோறு வேவப்பண்ணுகை முதலிய முக்கிய காரியங்களுக்கு வேண்டுமளவு புகுந்திருந்தான்; இராமபிரானால் நன்றாக ஜ்வலித்துக்கொண்டு எங்கும் புகுந்து உண்டு களித்தானென்க. .... (௬)

வில்லேர்நுதலார் வேட்கையைமாற்றிச்சிரித்து * இவன்
பொல்லான் திரைந்தானென்னும் புறனுரைகேட்பதன்முன் *
சொல்லார் மறைநான்கோதி உலகில்நிலாயவர் *
நல்லார் நறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (௭)

வில் ஏர் நுதலார்	வில்போன்று அழகிய நெற்றியையுடையரான மாதர்	கேட்பதன் முன்	கேட்கநேருவதற்கு முன்னே,-
வேட்கையை மாற்றி	(முன்புவைத்திருந்த) ஆசையைத் தவிர்ந்து	சொல் ஆர்	பதங்கள் நிரம்பிய
சிரித்து	பரிஹாஸம்பண்ணி	நான்கு மறை	நான்குவேதங்களையும்
இவன் பொல்லான்	'இந்தக் கிழவன் பொல்லாதவன்,	ஓதி	அதிகரித்து
திரைந்தான்	சதைசுருங்கினான்'	உலகில்	இவ்வுலகில்
என்னும்	என்று (இகழ்ந்து) சொல்லும்படியான	நிலாயவர்	(அவ்வேதங்களை) ஸ்தாபிக்குமவர்களாய்
புறன் உரை	இழிவான வார்த்தைகளை	நல்லார்	நல்லொழுக்கமுடையரான வைதிகர்வாழ்கிற
		நறையூர்	திருநறையூரை

நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—**வில்லேர்நுதலார்**—வில்வளைவாயிருப்பதுபோல் வளைவான நெற்றியையுடைய மாதர்; குண்டுமுகமுடையார் என்றபடி. வில்லில் நின்றும் அம்புகள் புறப்படுவதுபோல் முகத்தில் நின்றும் அம்புபோன்ற கடைக்கண்ணோக்கங்கள் புறப்படுதல் பற்றி 'வில்லேர் நுதல்' எனப்பட்டது என்றொருதமிழன். நுதல்—முகத்துக்கும் வழங்குவதுண்டு. **பொல்லான்**—குரூபி என்றபடி. **திரைந்தான்**—திரையாவது தோல் சுருங்கிப்போதல்; முதிர்ந்த கிழத்தனத்தின் அறிகுறி. புறனுரை—வம்புவார்த்தைகளென்றவாறு.

திருநறையூரில் வாழ்பவரெல்லாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள் என்பது மூன்றாமடி. .... (௭)

http://acharya.org

வாளோண்கண் நல்லார்தாங்கள் மதனனென்றார்தம்மை *
கேளுங்களீளையோடு ஏங்குகிழவனென்றுதமுன் *
வேள்வும்விழவும் வீதியிலென்றுமறாதவூர் *
நாளுநறையூர் நாம்தொழுதுமெழுநெஞ்சமே. (அ)

வாள்	வாட்படைபோன்று
ஒண்	அழகிய
கண்	கண்களையுடையாரான
நல்லார்	ஸ்த்ரீகள்
தாங்கள்	தாங்களே
மதனன் என்றார் தம்மை	‘இவன் ஸாக்ஷாத் மன்மதன்’ என்று முன்பு கொண்டாடிச் சொன்னவர்களைக் குறித்து
ஈளையோடு ஏங்கு கிழவன்	“கோழையோடு கூடித் தளர்ந்திருக்கின்ற இக்கிழவனை
கேளுங்கள்	வந்தகாரியமென்னவென்று கேளுங்கள்”
என்றுதமுன்	என்று இகழ்ந்து சொல்லுதற்கு முன்னே,—
வீதியில்	திருவீதிகளில்
வேள்வும்	யாகங்களும்
விழவும்	உத்ஸவங்களும்
என்றும்	ஒருநாளும்
அறாத ஊர்	விட்டுநீங்காத ஊராகிய
நறையூர்	திருநறையூரை
நாளும்	நாள்தோறும்

நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.

* * *—ஒரு கண்ணோக்கிலே ஓராளை முடித்துவிடவல்ல கண்ணழகு படைத்தவர்களான மாதர்கள், யௌவநாவஸ்தையிற் புருஷர்களை மன்மதன் வாயில் மண்ணைப்போட்டு வந்து பிறந்தவர்களாக வருணித்துப்பேசுவர்கள்; அவர்களே கிழத்தனம் வந்தவர்களை அநாதரித்தொழிவர்கள்; ஆகையாலே நாசமான பாசங்களைவிட்டுத் திருநறையூரைத்தொழுதல் நன்று.

இரண்டாமடியின் முதலில் “கேண்மின்கள்” என்றே எங்கும் பாடம் வழங்கிவருகின்றது; பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்தை நோக்குமிடத்து அப்பாடம் ஆதாரமற்றதேயாம்; ‘கேளுங்கள்’ என்ற பாடமே வியாக்கியானத்திற் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு இரண்டுவகையான பொருளருளிச்செய்யப்பட்டுள்ளது; ‘கேளுங்கள்’ என்று முழுச்சொல்லாய் வினைமுற்றாகக்கொண்டு பொருள்பணித்தல் ஒருவகை. ‘கேள் உங்கள்’ என்று பிரித்து, [ஈளையோடு ஏங்குகிழவன் உங்கள் கேள் என்றுதமுன்] கோழையோடுகூட இருமித்தளர்கின்ற இக்கிழவன் உங்கள் உறவு என்று அந்த வீட்டுப்பெண்களை நோக்கி இந்த வீட்டுப்பெண்கள் சொல்லுவது, இந்த வீட்டுப்பெண்களை நோக்கி அந்த வீட்டுப்பெண்கள் சொல்லுவதாய் இப்படி ஒருவர்க்கொருவர் பரிஹஸிக்கும்படியான நிலைமை நேருவதற்கு முன்னே எனப்பொருள்பணிப்பது மற்றொரு வகை.

திருநறையூரில், ஸந்நிதியில் உத்ஸவகோஷங்களும் திருமாளிகைகளில் யஜ்ஞகோஷங்களும் மலிந்திருக்குமென்கிறது மூன்றாமடி. .... (அ)

http://acharya.org

கனிசேர்ந்திலங்கு நல்வாயவர் காதன்மை விட்டிட *
குனிசேர்ந் துடலங் கோலில்தளர்ந் திளையாதமுன் *
பனிசேர் விசும்பில் பான்மதிகோள் விடுத்தானிடம் *
நனிசேர் நறையூர் நாம்தொழுது மெழுநெஞ்சமே. (கூ)

கனி சேர்ந்து	கோவைப்பழத்தோடொத்து	விசும்பில்	ஆகாசத்தில்
இலங்கு	விளங்குகின்ற	பால்	பால்போன்ற
நல் வாயவர்	அழகிய அதரத்தை யுடையரான பெண்கள்	பனி சேர்	குளிர்ச்சி பொருந்தியவனான
		மதி	சந்திரனுடைய
காதன்மை விட்டிட	(வைத்திருந்த) ப்ரீதியை விட்டொழிக்கும்படியாக	கோள்	துன்பத்தை
		விடுத்தான்	போக்கின பெருமானுடைய
உடலம்	சரீரமானது	இடம்	இருப்பிடமாய்
குனி சேர்ந்து	கூன்வளைந்து	நனி சேர்	பெருமை பொருந்தியதான
கோலில்	தடியோடு கூடி	நறையூர்	திருநறையூரை
தளர்ந்து இளையாத முன்—;		நாம் தொழுதும், நெஞ்சமே! எழு—.	

* * *—மாதர்களின் அபிமானத்திற்குப் பாத்திரமாகி மார்பு நெறித்துக் கிடந்தவர்கள் அம்மாதர்களின் அபிமாநம் விட்டு நீங்கும்படியாக உடல் கூன் வளைந்து ஒரு தடியையுமூன்றி நடக்கவேண்டும்படியான முதுமைவிளைந்து ஒரு நற்காரியமும் செய்ய யோக்யதை யில்லையாவதற்குமுன்னே திருநறையூரைத் தொழுவது நன்று.

நனிசேர்நறையூர்—(எம்பெருமானுக்கு) மிகவும் பொருந்தியிருக்கின்ற திருநறையூர் என்றுமாம் .... (கூ)

பிறைசேர் நுதலார் பேணுதல்நம்மை யிலாதமுன் *
நறைசேர் பொழில்சூழ் நறையூர் தொழுநெஞ்சமேயென்ற *
கறையார் நெடுவேல் மங்கையர்கோன் கலிகன்றிசொல் *
மறவாதுரைப்பவர் வானவர்க்கின்னரசாவரே. (கய)

பிறை சேர் நுதலார்	சந்திர கலைபோன்ற நெற்றியை யுடையரான பெண்கள்	கறை ஆர் நெடு வேல்	ரத்தக்கறை நிரம்பிய நீண்ட வேற்படையை யுடையவரும்
நம்மை	நம் விஷயத்தில்	மங்கையர் கோன்	திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவருமான
பேணுதல் இலாத முன்	ஆதரவைத்தவிர்த்துக் கொள்ளும்படியான கிழத்தனம் வருவதற்கு முன்னே,—	கலிகன்றி	ஆழ்வாருடைய
		சொல்	இந்த ஸ்ரீஸூக்திகளை
நெஞ்சமே	'ஓ மனமே!	மறவாது உரைப்பவர்	மறவாமல் ஓதுமவர்கள்
நறை சேர் பொழில் சூழ் நறையூர் தொழு என்ற	தேன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருநறையூரை வணங்கு' என்று உபதேசித்தவரும்	வானவர்க்கு	நித்ய ஸூரிகளுக்கும்
		இன் அரசு ஆவர்	மேற்பட்டவர்களாவர்.

http://acharya.org

* * *—மாதர்களிடத்தில் ஆசைவைப்பதும் அவர்கள் வெறுப்பதும் அவமானப்படுத்திப் பேசுவதுமான துர்விஷயங்களுக்கு இடங்கொடாதே, பரம போக்யமான திருநறையூரைத் தொழுவதே நன்று என்று அருளிச்செய்த திருமங்கையாழ்வாரது இப்பாசுரங்களை இளமைப்பருவத்திலேயே கற்பவர்கள் நித்ய ஸூரிகளின் நாட்டுக்கு நியாமகராகப் பெறுவர்கள் என்று இத்திருமொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினராயிற்று.

கறையார்நெடுவேல்—பகவத் பாகவத விரோதிகளை நிரஸநம் பண்ணின ரத்தக்கறை கழுவுவதற்கும் அவகாசமின்றியே வியாபரிக்குமாம் திருமங்கையாழ்வாருடைய வேல். .... (௧௦)

அடிவரவு:—கண்ணும் சொங்குண் கொங்கார் கொம்பு விலக்கு மின் வில் வாள் கனி பிறை கலங்க.

நாலாந்திருமொழி உரைமுற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து—ஐந்தாந்திருமொழி,

கலங்கமுந்நீர் கடைந்து.

[இதுவும் திருநறையூர் மங்களாசாஸநத் திருப்பதிகம்.]

கலங்கமுந்நீர் கடைந்து அமுதங்கொண்டு * இமையோர்
துளங்கல்தீர நல்கு சோதிச் சுடராய *
வலங்கையாழி யிடங்கைச்சங்கம் உடையானூர் *
நலங்கொள் வாய்மை அந்தணர்வாழும் நறையூரே. (௧)

முந்நீர் — ஸமுத்ரத்தை
கலங்க — கலங்கும்படியாக
கடைந்து — கடைந்து
அமுதம் கொண்டு — (அதில் நின்று) அமுதமெடுத்து
இமையோர் துளங்கல் தீர நல்கு — தேவர்களின் கலக்கம் தீரும்படியாக (அவர்களுக்குக்) கொடுத்தருளினவனும்
சோதி சுடர் ஆய — பரஞ்சோதியாயுள்ளவனும்
வலங்கை ஆழி இடங்கை சங்கம் உடையான் — வலத்திருக்கையில் திருவாழியையும் இடத்திருக்கையில் திருச்சங்கையும் உடையவனுமான எம்பெருமானுடைய
ஊர் — திவ்ய தேசம் (எதுவென்றால்)
நலம் கொள் வாய்மை — நன்மைகொண்ட ஸத்யவாதித்வத்தையுடையரான
அந்தணர் — பிராமணர்கள்
வாழும் — வாழுமிடமான
நறையூர் — திருநறையூராகும்.

http://acharya.org

* * *—துர்வாஸமுனியின் சாபத்தினால் அமரருடைய செல்வமெல்லாம் ஒழிந்தகாலத்து அமரர்கோனுடைய சரணாகதிக்குத் திருவுள்ளமிரங்கிக் கடலைக் கடைந்து அமுதமெடுத்தளித்து அமரருடைய கஷ்டங்களைப் போக்கியருளினவனும், சோதிக்கிரளை வடிவெடுத்த தென்னும்படி மஹா தேஜஸ்வியாயிருப்பவனும், ஆச்ரிதவிரோதிகள் அஞ்சுவதற்குறுப்பாகவும் ஆச்ரிதர்கள் பல்லாண்டு பாடுவதற்குறுப்பாகவும் திருவாழி திருச்சங்குகளைத் திருக்கைகளிலேந்தியுள்ளவனுமான எம்பெருமான் வாழுமிடம் திருநறையூர்; ஸத்யவாதிகளான பிராமணர்களும் அப்பதியில் வாழ்கின்றனர் என்றவாயிற்று.

'கடல் நம்முடைய படுக்கையாயிற்றே, அதற்கொரு கலக்கம் விளைக்கலாமோ?' என்றும் நினையாமல், தன்னையடுத்தவர்கட்குக் காரியஞ்செய்வதிற் கண்வைத்துத் தனது பள்ளியான கடலைக் கலக்கியும் கடைந்து அமுதமளித்தானென்ற மஹாகுணம் விளங்க 'முந்நீர் கலங்கக் கடைந்து' எனப்பட்டது. **நல்குசோதிச்சுடராய**=தேவர்கட்கு அமுதமளித்ததனால் எம்பெருமானுக்குத் திருமேனியில் புகர் விஞ்சிற்றுப்போலும்; அன்பர்கள் துயர்தீரப்பெற்றால் அதுவேயிறே ஸ்வாமிக்குப் பொலிவு.

நலங்கொள்வாய்மையந்தணர் = 'ஸத்யமே சொல்லவேணும்' என்பது சாஸ்த்ரவிதியாயினும், பிறர்க்குத் துன்பம் விளைக்குமதான ஸத்யத்தைச் சொல்லக் கூடாதென்பதும் நூற்கொள்கையாதலால் அப்படி தீமையாகத் தலைக்கட்டாமல் நன்மையாகவே தலைக்கட்டுமதான ஸத்யத்தையே சொல்லுமவர்களாம் திருநறையூரந்தணர்கள். "सत्यं ब्रूयात् प्रियं ब्रूयात् न ब्रूयात् सत्यमप्रियम्=ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்" என்றது காண்க.

இனி, "நலங்கொள்வாய்மை" என்று உண்மையுரையான வேதத்தைச் சொன்னபடியாய், வேதம்வல்ல அந்தணர்வாழுமிடம் திருநறையூர் என்றுரைத்தலுமொன்று. .... (க)

முனையார் சீயமாகி அவுணன் முரண்மார்வம் *
புனைவா ளுகிரால் போழ்படவீர்ந்த புனிதனூர் *
சினையார் தேமாஞ் செந்தளிர்கோதிக் குயில்கூவும் *
நனையார் சோலைசூழ்ந் தழகாய நறையூரே. (உ)

முனை	போர்புரிவதில்	புனை	அழகு பொருந்திய
ஆர்	பொருத்தமுடைய	வாள்	ஒளிபொருந்திய
சீயம் ஆகி	நரஸிம்ஹமூர்த்தியாய்த் திருவவதரித்து	உகிரால்	நகங்களினால்
		போழ்பட	இரண்டு பிளவாகும்படி
அவுணன்	(இரணியனென்னும்) அசுரனுடைய	ஈர்ந்த	கிழித்துப்போட்ட
		புனிதன்	பரமபவித்திரனான பெருமானுடைய
முரண் மார்வம்	முரட்டு மார்பை		

ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்)
குயில்	குயில்களானவை
சினை ஆர் தேமா	தழைப்புவாய்ந்த தேன் மாமரங்களினுடைய
செம் தளிர்	சிவந்த தளிர்களை
கோதி	கொந்தி
கூவும்	கூவப்பெற்றனவும்
நனை ஆர் சோலை சூழ்ந்து	பூமொட்டுகள் நிறைந்திருக்கப்பெற்றனவுமான சோலைகளால் சூழப்பட்டு
அழகு ஆய	அழகுடைத்தான
நறையூர்	திருநறையூராம்.

* * *—பாபாத்மனை ப்ரஹ்லாதாழ்வானுக்கு நேர்ந்த துன்பங்களைப் பொறுத்திருக்கமாட்டாமல் நரஸிம்ஹமூர்த்தியாகித் தூணில்தோன்றி இரணியனென்னுமசுரனுடைய முரட்டுமார்பைத் திருநகங்களாற் பிளந்தெறிந்த பவித்திரன் வாழுமிடம் திருநறையூர்; அஃது எப்படிப்பட்டதென்னில்; தழைத்திருக்கின்ற தேன்மாமரங்களில் செந்தளிர்களைக் குயில்கள் கொந்திக் கூவுதல் செய்யப்பெற்ற—பூமொட்டுக்கள் நிறைந்த—சோலைகளாற் சூழப்பட்டதாம். நல்ல குரல்படைத்த ரஸிகர்கள் ஸ்ரீபாகவதம் ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலியவற்றில் அவகாஹித்து அநுபவித்து அவ்வர்த்தங்களை உபந்யஸிக்கின்றனர் திருநறையூரில்—என்பது உள்ளுறை. .... (உ)

ஆனைப் புரவித் தேரொடுகாலா ளணிகொண்ட *
சேனைத்தொகையைச்சாடி யிலங்கை செற்றானூர் *
மீனைத்தழுவி வீழ்ந்தெழும் மள்ளர்க் கலமந்து *
நானப்புதலில் ஆமை யொளிக்கும் நறையூரே. (ங)

ஆனை	யானைகளும்
புரவி	குதிரைகளும்
தேரொடு	தேர்களும்
காலாள்	காலாள்களுமாக
அணி கொண்ட	அணிவகுக்கப்பட்ட
சேனை தொகையை சாடி	சேனைக் கூட்டத்தைச் சிதைத்து
இலங்கை செற்றான்	இலங்காபுரியை அழித்த பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்)
மீனை	மீன்களை
தழுவி	(பிடிப்பதற்காக) இரண்டு கைகளாலும் அணைத்து
வீழ்ந்து	(பின்பு அவற்றால் தள்ளுண்டவர்களாய்க்) கீழேவிழுந்து
எழும்	(பின்னும் அவற்றைப் பிடிக்க ஆசையினால்) எழுந்திருக்கின்ற
மள்ளர்க்கு	உழவர்களுக்கு
அலமந்து	அஞ்சி
ஆமை	ஆமையானது
நானம் புதலில்	மஞ்சள் புதரிலே
ஒளிக்கும்	ஒளிந்துகொள்ளுமிடமான
நறையூர்	திருநறையூராம்.

* * *—இராவணன் போர்புரியப் புறப்பட்டுவரும்போது முந்துற முன்னம் மலைகள்நடந்தாற்போல யானைகளைப் புறப்படவிட்டு அவற்றின் பின்னே குதிரைகளைவிட்டு அவற்றின்பின்னே தேர்களையோட்டி இவையித்தனைக்குங்

http://acharya.org

காவலாகக் காளொள்களைப் பின்னே புறப்படவிட்டு வந்தானும் ; அந்த அடைவை அங்ஙனமே அருளிச்செய்கிறார் ‘ஆனைப்புரவித் தேரொடுகாலாளணி கொண்ட சேனைத்தொகை’ என்று. ஆக இப்படிப்பட்ட சேனைத்திரள்களை யெல்லாம் பொடிபொடியாக்கி இலங்காபுரியைப் பாழ்படுத்தின பெருமான் வாழுமிடம் திருநறையூர். அஃது எப்படிப்பட்ட தென்னில் ; [மீனைத்தழுவி இத்யாதி.] அவ்விடத்தில் நிலப்பண்பாலே மலைகள்போலே வளர்ந்திருக்குமாம் மீன்கள் ; அவற்றைப் பிடிக்கிற உழவர்கள் இரண்டுகையாலுமாகத் தழுவுவர்கள் ; அவைமிக்க வலிவுள்ளவையாதலால், பிடிப்பவர்களை உதறித்தள்ளிவிட்டுப் போய்விடும் ; அங்ஙனம் தள்ளப்பட்டு விழுந்த உழவர்கள் மறுபடியும் அவற்றைப்பிடிக்க எழுந்திருப்பர்கள் ; அதைக்கண்ட ஆமையானது அஞ்சி வரம்பிலேநின்ற மஞ்சள் பற்றையிலே புகுந்து மறையும். இப்படிப்பட்ட வயல்வளத்தை யுடையதாம் திருநறையூர். .... (௩)

உறியார் வெண்ணெயுண்டு உரலோடுங் கட்டுண்டு *
வெறியார்கூந்தல் பின்னைபொருட்டு ஆன் வென்றானூர் *
பொறியார் மஞ்ஞை பூம்பொழில்தோறும் நடமாட *
நறுநாண் மலர்மேல் வண்டிசைபாடும் நறையூரே. (௪)

உறி ஆர்	உறிகளிலே நிறைத்து வைத்த
வெண்ணெய்	வெண்ணெயை
உண்டு	வாரி உட்கொண்டு
உரலோடும் கட்டுண்டு	(அக்குற்றத்திற்காக) உரலோடு சேர்த்துக் கட்டப்பட்டவனும்
வெறி ஆர் கூந்தல் பின்னை பொருட்டு	பரிமளம் மிக்க கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக
ஆன்	(ஏழு) எருதுகளை
வென்றான்	வலியடக்கினவனுமான பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம் (ஏதுவென்றால்)
பொறி ஆர்	புள்ளிகள் நிரம்பிய
மஞ்ஞை	மயில்கள்
பூ பொழில் தோறும் நடம் ஆட	பூஞ்சோலைகளெங்கும் கூத்தாடப்பெற்றதும்
வண்டு	வண்டுகள்
நறு நாள் மலர் மேல்	மணம்மிக்க அப்போதலர்ந்த பூக்களிலே (இருந்துகொண்டு)
இசை பாடும்	இசைப்பாட்டுகளைப் பாடப் பெற்றதுமான
நறையூர்	திருநறையூர்.

* * *—திருவாய்ப்பாடியில் உறிகளிலே சேமித்துவைக்கப்பட்ட வெண்ணெயைக் களவுசெய்து உட்கொண்டு பிடிபட்டு அக்குற்றத்திற்காக உரலோடு கட்டுண்டு அசக்தன்போலப் பாவனை செய்யாநின்றாலும், நப்பின்னைப் பிராட்டியை மணந்து கொள்ளுதற்காக அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்திருந்தபடி எழுரிஷபங்களை வலியடக்கித் தனது பெருமிடுக்கை விளங்கச் செய்துகொண்ட பெருமான் அப்படிப்பட்ட பாத்வ ஸௌலப்யங்களை இன்றைக்கும் பிரகாசப்படுத்திக்கொண்டு எழுந்தருளியிருக்குமிடம் திருநறையூர். அவ்விடத்திலே விசித்

திரமான கலாபங்களையுடைய மயில்கள் சோலைகளிலெங்கும் நடனமாடுகின்றன; செவ்வித்தாமரைப் பூக்களிலே மதுபானம் பண்ணியிருந்த வண்டுகள் மயில்களின் கூத்துக்கு இணங்க இசைபாடுகின்றன. .... (௪)

விடையேழ் வென்று மென்தோளாய்ச்சிக் கன்பனாய் *
நடையால் நின்ற மருதம் சாய்த்த நாதனூர் *
பேடையோடன்னம் பெய்வளையார் தம்பின்சென்று *
நடையோ டியலி நாணியொளிக்கும் நறையூரே. (௫)

ஏழ் விடை வென்று	ஏழெருதுகளை வலியடக்கி
மென்தோள் ஆய்ச்சிக்கு	மெல்லிய தோளழகை யுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு
அன்பன் ஆய்	நாயகனானவனும்
நின்ற மருதம்	நிலைத்து நின்ற (இரட்டை) மருதமரங்களை
நடையால்	தவழ்கிற நடையினாலே
சாய்த்த	விழத்தள்ளினவனுமான
நாதன்	எம்பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம் (ஏதுவென்றால்)
அன்னம்	ஹம்ஸங்களானவை
பெடையோடு	(தமது) பேடைகளோடு கூடி.
பெய் வளையார் தம் பின் சென்று	செறிந்த வளைகளையணிந்த பெண்களின் பின்னே போய்
நடையோடு இயலி	(அவர்களுடைய) நடையை அநுஸரித்து நடக்கப் பார்த்து
	(அப்படி நடக்க முடியாமையினாலே)
நாணி	வெட்கமடைந்து
ஒளிக்கும்	ஒளிக்குமிடமான
நறையூர்	திருநறையூராம்.

* * *—நப்பின்னைப் பிராட்டியோடு கலவிசெய்வதற்கு இடையூறாகநின்ற ஏழு எருதுகளை வலியடக்கி அவளுக்கு அன்பனாகப் பெற்றவனும், உரலோடு கட்டுண்டு தவழ்ந்து செல்லுமளவிலே அஸுராவேசங்கொண்ட இரட்டை மருதமரங்களைச் சாய்த்தவனுமான பெருமான் எழுந்தருளியிருக்குமிடம் திருநறையூர். அவ்விடத்தில் அன்னப்பறவைகள் பேடைகளோடுகூடி. அங்குள்ள மாதர்களின் நடையழகைக்கண்டு தாமும் அப்படியே நடக்கவிரும்பி அவர்களைப் பின்செல்லும்; அந்த நடையழகு தங்களுக்கு வாராமையாலே வெள்கி ஒதுங்கிப் போகின்றனவாம். .... (௫)

பகுவாய் வன்பேய் கொங்கைசுவைத்தாருயிருண்டு *
புகுவாய்நின்ற போதகம்வீழப் பொருதானூர் *
நெகுவாய் நெய்தற்பூ மதுமாந்திக் கமலத்தின் *
நகுவாய்மலர்மேல் அன்னமுறங்கும் நறையூரே. (௬)

பகு வாய்	பெரிய வாயை யுடையவளும்
வன்	மனக்கொடுமையை யுடையவளுமான
பேய்	பேய்ச்சியாகிய பூதனையி னுடைய
கொங்கை	ஸ்தனத்தை
சுவைத்து	உறிஞ்சி

ஆர் உயிர் உண்டு	(அவளது) அருமையான உயிரை முடித்தவனும்,
புகு வாய்	(கம்ஸனரண்மனையினுள்ளே) நுழைய வேண்டிய வாசலில்
நின்ற	(மதமூட்டி) நிறுத்தப் பட்டிருந்த
போதகம்	(குவலயாபீடமென்னும்) யானை
வீழ	சாகும்படியாக
பொருதான்	போர்புரிந்தவனுமான பெருமானுடைய

ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்)
அன்னம்	ஹம்ஸங்களானவை
நெகு வாய் நெய்தல் பூ	அலர்ந்த வாயையுடைய [விகஸித்த] கருநெய்தற்பூக்களிலே
மது	தேனை
மாந்தி	பருகி
கமலத்தின் மகு வாய் மலர் மேல்	விரிந்த வாயையுடைய தாமரைப்பூக்களிலே
உறங்கும்	கண்வளரப்பெற்ற
நறையூர்	திருநறையூராம்.

* * *—கம்ஸனுடைய ப்ரேரணையினால் மாயவகையாக முலைகொடுத்துக் கொல்லவந்த பூதனையென்னும் பேய்ச்சியின் விஷந்தடவின முலையை உறிஞ்சியுண்கிறபாவனையிலே அவளுயிரைக் கவர்ந்துண்டவனும், கம்ஸனரண்மனைவாசலில் தன்னைக் கொல்லுமாறு மதமூட்டி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீட மென்னும் யானையைப் பொருது முடித்தவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடம் திருநறையூர்.

கட்டவிழ்கின்ற நெய்தற்பூவிலே மதுவைப்பருகி, நன்றாக வலர்ந்த தாமரைப் பூவைப் படுக்கையாகக் கொண்டு அதிலேபோய்ப் படுக்கப்பெற்ற அன்னங்களை யுடையதாம் அத்திருப்பதி.

‘பகுவாய்’ என்றவிடத்து, ‘பஹு’ என்னும் வடசொல் பகு என்று திரிந்துகிடக்கிறது. பெரியவாய் என்றபடி. .... (௬)

முந்துநூலும் முப்புரிநூலும் முன்னீந்த *
அந்தணாளன் பிள்ளையை அந்நான் றளித்தானூர் *
பொந்தில் வாழும் பிள்ளைக்காகிப் புள்ளோடி *
நந்துவாரும் பைம்புனல் வாவி நறையூரே. (௭)

முப்புரி நூலும்	யஜ்ஞோபவீதத்தையும்
முந்து நூலும்	அநாதியான வேதாக்ஷர ராசியையும்
முன் ஈந்த	முன்னே (தனக்குத்) தந்த
அந்தணாளன்	(ஸாந்தீபினி யென்னும்) பிராமணனுடைய
பிள்ளையை	(கடலில் மூழ்கியிறந்த) புத்திரனை

அந்நான்று	(குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கிற) அக்காலத்தில்
அளித்தான்	(மீட்டுக்) கொடுத்தருளின பெருமானுடைய
ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்,)
புள்	பறவைகள்
பொந்தில்	மரத்தின் பொந்துகளில்
வாழும்	வாழ்கிற

http://acharya.org

பிள்ளைக்காகி	குட்டிகளின் ஆஹாரத்துக்காக	வாரும்	திரட்டிக்கொண்டு போகப்பெற்ற
ஓடி	ஓடிவந்து	பைம்புனல் வாவி	தெளிந்த நீரையுடைய தடாகங்களையுடைத்தான
நந்து	நத்தைகளை	நறையூர்	திருநறையூராம்.

* * *—ஸ்ரீக்ருஷ்ணன் கம்ஸனைக்கொன்று உக்ரஸேநனுக்கு முடிசூட்டிய பின்பு, அவந்தீநகரத்திலிருந்த ஸாந்தீபிநியென்னும் ப்ராஹ்மணோத்தமர் பக்கல் சென்று ஸகலசாஸ்த்ரங்களையும் அத்யயநம் பண்ணிப் பிறகு குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கப்பார்க்கிறவளவிலே, அவ்வாசிரியர் கண்ணனுடைய சக்திவிசேஷத்தை யறிந்தவராகையால் 'பன்னிரண்டு வருஷத்திற்கு முன்பு மேல் கடலில் ப்ரபாஸ தீர்த்த கட்டத்திலே நீராடும்போது முழுகியிறந்துபோன என்புத்திரனைக் கொண்டு வந்து தரவேண்டும்' என்று அபேக்ஷிக்க, கண்ணபிரான் 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிக் கடற்கரை சேர்ந்து, சங்கினுருவங்கொண்டு ஸமுத்ர ஜலத்தில் வஸிக்கின்ற பஞ்சஜநனென்கிற அசுரனே அவ்வந்தணச்சிறுவனைக் கொண்டுபோயின னென்பதை அங்கு வருணன் சொல்லக்கேட்டுக் கடலில் பிரவேசித்து அவ்வஸுரனைக் கொன்று அவனுடலாகிய பாஞ்சஜந்யத்தை யெடுத்து வாயில்வைத்து முழக்கிக்கொண்டே யமபட்டணத்திற் கெழுந்தருளி அங்கு யாதனையிற்கிடந்த அக்குமாரனைப் பூர்வதேஹத்திற் சிறிதும் பேதமில்லாதபடி கொணர்ந்து கொடுத்தருளினனென்பது இப்பாட்டிற்குறித்த கதை. "மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை, ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்றார் பெரியாழ்வாரும்.

இடைப்பிள்ளையான கண்ணபிரான் ஸாந்தீபிநியிடத்தில் வேதமோதினனென்பதும் உபநயநஸம்ஸ்காரம் பெற்றானென்பதும் எங்ஙனே சேருமென்று சிலர் சங்கிப்பர்; * ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவி லொருத்திமகனாயொளித்து வளர்ந்தவனான கண்ணன் க்ஷத்ரிய ஜாதியிற் பிறந்தவன். பிராமணர் க்ஷத்ரியர் வைசியர் என்னும் மூன்று ஜாதியாரும் தேஹோத்பத்தியாகிய இயற்கைப் பிறப்புடனே செயற்கைப்பிறப்பாக உபநயநமென்கிற ஸம்ஸ்காரத்தாலாகும் ஜ்ஞாநஜந்மத்தையுங்கொண்டு இருபிறப்பாளராய் 'த்விஜர்' எனப்படுவரென்க.

'முந்துநூலீந்த' என்றது—வேதமோதுவித்த என்றபடி. 'முப்புரிநூலீந்த' என்றது—உபநயநம் செய்வித்த என்றபடி. உபநயநம் செய்வித்தபிறகே வேதமோதுவித்தல் முறைமையாதலால் 'முப்புரிநூலும் முந்துநூலும் முன்னீந்த' என இயைத்துக்கொள்ளுதல் பொருந்தும். 'வாபீ கூப தடாகாதி' என்பர் வடநூலார். கடலிற்புகுந்து முழுகின ஸாந்தீபிநிபுத்திரனைப் பிழைப்பித்து மீட்டுக்கொணர்ந்து கொடுத்த பெருமானுறையுமிடம் திருநறையூர். மரத்தின் பொதும்பிலே வாழுங் குட்டிக்காக இரைதேடும் பறவைகள் நத்தைகளை வாரிக்கொண்டு வரப்பெற்ற நீர்நிலங்களையுடையதாம் அத்திருப்பதி. வாவி—'வாபீ' என்னும் வடசொல் விகாரம். .... (௭)

வெள்ளைப்புரவித் தேர்விசயற்காய் விறல்வியூகம்
விள்ள * சிந்துக்கோன்விழ ஊர்ந்த விமலனூர் *
கொள்ளைக்கொழு மீனுண் குருகோடிப் பேடையோடும் *
நள்ளக்கமலத் தேறலுகுக்கும் நறையூரே. (அ)

வெள்ளை புரவி	வெள்ளைக் குதிரைகள் பூட்டின	ஊர்	திவ்யதேசம் (எதுவென்றால்,)
தேர்	தேரையுடையனான	கொள்ளை கொழு மீன் உண்	மிகுதியாகக் கொழுத்த மீன்களைப் பிடித்துண்கிற
விசயற்கு ஆய்	அர்ஜுநனுக்காக,	குருகு	கொக்குகள்
விறல் வியூகம் விள்ள	(எதிரிகளினுடைய) மிடுக்கையுடைத்தான ஸேனாஸமூஹம் தொலையும்படியாகவும்	ஓடி	ஓடிச்சென்று
சிந்து கோன்	ஸிந்துதேசத்தலைவனான ஜயத்ரதன்	பேடையோடும்	தம் பேடைகளோடுகூட
விழ	முடியும்படியாகவும்	நள்ளக் கமலம்	செறிந்த இதழ்களையுடைய தாமரைப்பூவில்
ஊர்ந்த	(தேரை) நடத்தின	தேறல்	தேனை
விமலன்	பரிசுத்தனான பெருமானுடைய	உகுக்கும்	பருகப்பெற்ற
		நறையூர்	திருநறையூராம்.

* * *—அர்ஜுநனுக்குத் தேர்ப்பாகனாயிருந்து வெற்றிபெறுவித்தவனும் ஸைந்தவனை முடியச்செய்தவனுமான பெருமான் வாழுமிடம் திருநறையூர்.

மஹாபாரதயுத்தத்தில் பதின்மூன்றாநாளிலே அர்ஜுந புத்ரனான அபிமந்யுவைத் துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனான ஸைந்தவன் [ஜயத்ரதன்] கொன்றுவிட, அங்ஙனம் தன் மகனைக்கொன்ற அந்த ஜயத்ரதனை மற்றைநாள் ஸூர்யாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடின் தீக்குதித்து உயிர்விடுவதாக அர்ஜுநன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினான்காநாட்பகல் முழுவதும் ஜயத்ரதனை வெளிப்படுத்தாமல் ஸேனையின் நடுவே நிலவறையில் மறைத்துவைத்திருக்க, அர்ஜுநனுடைய சபதம் பொய்த்துவிடுமேயென்று சிந்தித்த கண்ணபிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சில நாழிகைக்கு முன்னமே தன் சக்ராயுதத்தால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருளடைந்ததனால் அர்ஜுநன் அக்நிப்ரவேசஞ் செய்யத்தொடங்க, அதனைக் களிப்போடு காணுதற்குத் துரியோதனாதியருடனே ஜயத்ரதன் வந்து எதிர்நிற்க, அச்சமயத்தில் கண்ணன் திருவாழியை வாங்கிவிடவே, பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுநன் ஜயத்ரதனைத் தலையறுத்திட்டனனென்ற வரலாறு இரண்டாமடிக்கு அறியத்தக்கது.

அர்ஜுநனுடைய தேர்க்குதிரைகள் வெண்ணிறங்கொண்டவை யென்பது 1. "வெள்ளைப்புரவிக்குரக்கு வெல்கொடித்தேர்மிசை முன்புநின்று, கள்ளப்

1. பெரியாழ்வார் திருமொழி 4—1—7.

http://acharya.org

படைக்குழீணபரிப் பாரதங் கை செய்யக் கண்டருளார்” என்று பெரியாழ்வா ரருளிச்செயலாலும் விளங்கும். ‘விஜயன்’ என்பது அர்ஜுநனுடைய நாமங்களுள் ஒன்று. வியூகம்—‘வ்யூஹ’ என்னும் வடசொல் விகாரம். .... (அ)

பாரையூரும் பாரம்தீரப் பார்த்தன்றன்
தேரையூரும் * தேவதேவன் சேருமூர் *
தாரையூரும் தண்தளிர்வேலி புடைசூழ *
நாரையூரும் நல்வயல்சூழ்ந்த நறையூரே. (கூ)

பாரை	பூமியில்	தாரை ஊரும்	(தேனின்) வெள்ளம் பெருகாநின்ற
ஊரும்	நடமாடுகின்ற	தண் தளிர்	குளிர்ந்த தளிர்கள் நிறைந்த
பாரம்	சுமையானது	வேலி	வேலிகள்
தீர	தொலையும்படியாக	புடை சூழ	நாற்புறமும் சூழப்பெற்று
பார்த்தன் தன்	அர்ஜுநனுடைய	நாரை ஊரும்	நாரைகள் ஸஞ்சரிக்கப் பெற்ற
தேரை ஊரும்	தேரை நடத்தினவனான	நல் வயல் சூழ்ந்த	நல்ல கழனிகளால் சூழப்பட்ட
தேவதேவன்	தேவாதிதேவன்	நறையூர்	திருநறையூராம்.
சேரும் ஊர்	நித்யவாஸம் செய்தருளும் திவ்யதேசம் (எதுவென்றால்)		

* * *—பூமிதேவிக்குத் தன்மீது ஸஜ்ஜனங்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும் அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பதுபோல் வருத்தமற்றிருக்கும். ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்புமுட்டையைத் தாங்குவதுபோல் மிகவருத்தமாம். த்வாபரயுகத்தில் இப்பூமியின்கண் பிறந்திருந்த கம்ஸன் சிசுபாலன் துரியோதனன் முதலிய ஆஸுரப்ரக்ருதிகளின் பாரத்தைப் பொறுக்க மாட்டாமல் பூமிப்பிராட்டி கோரூபத்தைத்தரித்து மேருமலையினுச்சியிலுள்ள தேவர்களின் ஸபையையடைந்து, அச்சபைநடுவில் வீற்றிருக்கும் நான்முகனை வணங்கித் தனது துயரத்தை முறையிட்டு இவ்வஸுரர்களைத் தொலைத்துத் தன்னை ஸுகப்படுத்தவேணுமென வேண்டிக்கொள்ள, அதற்கு நான்முகன் சிறிதுகாலம் யோசித்து ‘இது நம்மாலாகாது, ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸர்வலோக பிதாவாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு அறிவித்து அவர்மூலமாக இக்காரியத்தை நிறைவேற்றுவிக்கவேணும்’ எனக்கருதி அந்தப்பூமியையும் மற்றுமுள்ள தேவர்களையுங் கூட்டிக்கொண்டுபோய்ப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமனைத்துதிக்க, பின்பு திருமால் அருள்புரிந்த சிந்தைகொண்டு அவர்கட்குக் காட்சிதந்து யோகக்ஷேமங்களை விசாரித்து அவர்கள் வந்த வரலாற்றை உணர்ந்தருளி ‘ஓ தேவர்காள்! உங்கள் கருத்தை அறிந்துகொண்டேன்; முற்காலத்தில் வருணனுடைய சாபத்தினால் கச்யபரும் அவரது மனைவியான அதிதியும் இப்பொழுது வஸுதேவ தேவகிகளாகப் பிறந்திருக்கின்றனர்; இப்பிறவியில் அவர்களுக்கு நான் பிள்ளையாகப் பிறக்கிறேனென்று முன் வரமளித்திருக்

கிறேன்; அங்ஙனமே நான் அவர்களுடைய கர்ப்பத்தில் தோன்றி ஸாதுபரித்ராணமும் துஷ்டநிக்ரஹமும் தர்மஸம்ஸ்தாபநமும் செய்யக்கடவேன்; நீங்கள் போகலாம்' என்று சோதிவாய்திறந்து அருளிச்செய்து அவர்களையனுப்பிவிட்டு அப்படியே வந்து திருவவதரித்தருளிப் பார்த்தஸாரதியாயிருந்து பூமிபாரங்களையெல்லாம் போக்கின பெருமான் வாழுமிடம் திருநறையூர்.

[தாரையூரும் இத்யாதி.] 'தார்' என்று பூவுக்கும் பேராதலால், தாரை—புஷ்பத்தை. ஊரும்—தன்னுடைய (அவ்வளவு) சேர்ந்திருக்கிற, தளிர்களையுடைத்தான வேலியாலே சூழப்பட்டும் நாரைகள் உலாவப்பெற்றிருக்கிற வயல்களாலே சூழப்பட்டது. 'தாரா' என்னும் வடசொல் ஐயீறாகத் தாரையெனத் திரிந்ததெனக்கொண்டால், நெடிதுயர்ந்துநின்ற வேலி என்றதாம். வேலியின் சிறப்பே யிதுவானால் உள்ளுள்ள சிறப்பு வாசாமகோசர மென்கை. .... (௯)

தாமத்துளப நீண்முடிமாயன் தான்நின்ற *
நாமத்திரள் மாமாளிகைசூழ்ந்த நறையூர்மேல் *
காமக்கதிர் வேல்வல்லான் கலியனொலிமாலை *
சேமத்துணையாம் செப்புமவர்க்குத் திருமாலே. (௧௦)

துளபம்	திருத்துழாயினாலாகிய
தாமம்	மாலையை
நீள் முடி	நீண்ட திருமுடியிலே யுடையனான
மாயன் தான்	ஸர்வேச்வரன்
நின்ற	நித்யவாஸம் பண்ணப் பெற்றதும்,
நாமம்	புகழ்பெற்றவைகளாய்
திரள்	நெருங்கியிருக்கின்ற
மா மாளிகை	பெரியதிருமாளிகைகளினால்
சூழ்ந்த	சூழப்பட்டதுமான
நறையூர் மேல்	திருநறையூர் விஷயமாக,—
காமம் கதிர் வேல் வல்லான்	மிக்க வொளிபொருந்திய வேற்படையைப் பிடிக்கவல்லவரான
கலியன்	திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	இச் சொல்மாலையை
செப்புமவர்க்கு	ஓதவல்லவர்களுக்கு
திரு மால்	திருமகள் கொழுநனான ஸர்வேச்வரன்
சேமம் துணை ஆம்	எப்போதும் ரக்ஷகனான ஸஹாயபூதனாக ஆவன்.

* * *—'நானே ஸகல சராசரங்களையும் நிர்வஹிக்கவல்லேன்' என்று திருத்துழாய் மாலையணிந்த திருவபிஷேகத்தை யுடையனான பரமபுருஷன் வாழுமிடமாய், 'இது இன்னாருடைய திருமாளிகை, இது இன்னாருடைய திருமாளிகை' என்று ப்ரஸித்திபெற்ற நெருங்கின திருமாளிகைகளாலே நிறைந்ததான திருநறையூர்த் திருப்பதி விஷயமாகத் திருமங்கை மன்னன் திருவாய்மலர்ந்தருளிய இச்சொல்மாலைகளைக் கற்குமவர்களுக்கு எம்பெருமான் எஞ்ஞான்றும் உடனிருந்து வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்தருள்வனென்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று.

http://acharya.org

தாமத்துளபம் = தாமதுளஸீதாமா.

நாமம்—ப்ரஸித்திப் பொருளதான வடசொல் அவ்யயம். **காமக்கதிர்** = 'காமம்' என்பது மிகுதிப்பொருளதான வடமொழி அவ்யயம். விரும்பத் தகுந்த ஒளியையுடைய வேல் என்னவுமாம். சேமம் -க்ஷேமம். .... (௰)

அடிவரவு:—கலங்க முழை ஆனை உறி விடை பகுவாய் மூந்து வெள்ளை பாரை தாமம் அம்பரம்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து—ஆறாந்திருமொழி,

அம்பரமும் பெருநிலனும்.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதி மங்களாசாஸனத் திருப்பதிகம்.]

அம்பரமும் பெருநிலனும் திசைகளெட்டும்
அலைகடலுங் குலவரையுமுண்ட கண்டன் *
கொம்பமரும் வடமரத்தி னிலைமேல் பள்ளி
கூடினான் திருவடியே கூடகிற்பீர் *
வம்பவிழும் செண்பகத்தின் வாசமுண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல்வைகு *
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௧)

அம்பரமும்	ஆகாசத்தையும்	கண்டன்	திருக்கழுத்தையுடையவனும்
பெருநிலனும்	பரந்த பூமியையும்	கொம்பு அமரும்	கிளைகள் பொருந்திய
திசைகள் எட்டும்	எட்டுத் திக்குக்களையும்	வட மரத்தின்	ஆலமரத்தினுடைய
அலை கடலும்	அலையெறிகின்ற கடல்களையும்	இலை மேல்	தளிரின் மீது
குலம் வரையும்	குலபர்வதங்களையும்	பள்ளி கூடினான்	சயனித்துக்கொண்டவனுமான ஸர்வேச்வரனுடைய
உண்ட	உட்கொண்ட	திரு அடியே	திருவடிகளையே

http://acharya.org

கூட இற்பீர்	அடையவேணுமென் றிருப்பவர்களே!,
மணி வண்டு	அழகியவண்டுகள்
வம்பு அவிழும் செண்பகத்தின் வாசம் உண்டு	அப்போதலர்கின்ற செண்பகப்பூவின் பரிமளத்தைப் புஜித்து (பின்பு)
வகுளத்தின் மலர் மேல் வைகு	மகிழம்பூவின்மீது தங்கி யிருக்கப்பெற்றதும்,
செம்பியன் கோ செங்கணான் சேர்ந்த கோயில்	'செம்பியன்கோச் செங்கணான்' என்னும் சோழராஜன் பணிசெய்யப்பெற்ற கோயிலுமான
திரு நறையூர் மணி மாடம்	திருநறையூரிலுள்ள திவ்யஸந்நிதியை
சேர்மின்கள்	போய்ச்சேருங்கள்.

* * *—ஊழிப்பெருவெள்ளம் பரந்து உலகமுழுவதையும் அழிக்கப்புகுகிறவளவிலே ஒன்று நப்பாமல் அனைத்தையும் திருவயிற்றிலுள்ளே வைத்தருளிப் பாதுகாத்து ஒரு சிற்றாலந்தளிரிலே துயில்கொண்ட பரமனுடைய திருவடிகளைச் சேரவிரும்புவீர்களாயின் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள் என்று உபதேசிக்கிறார்.

அவ்விடத்துச் சோலைவளம் சொல்லுகிறது மூன்றுமடியால். வம்பு—புதுமையும் பரிமளமும். [செம்பியன் கோச் செங்கணான் சேர்ந்த கோயில்] திருவல்லிக்கேணியில் தொண்டையர்கோன் போலவும், பரமேச்சுர விண்ணகரத்தில் பல்லவன் மல்லையர்கோன் போலவும், அட்டபுயகரத்தில் வயிரமேகன் போலவும், நந்திபுரவிண்ணகரத்தில் நந்திவருமன்போலவும் இத்திருப்பதியில் செம்பியன்கோச் செங்கணானென்னுமோரரசன் தொண்டுபூண்டு உய்ந்துபோனானென்றுணர்க. இத்திருப்பதிகத்தின் வியாக்கியான அவதாரிகையில் பெரியவாச்சான் பிள்ளை—“துர்மாநியுமாய் ஸ்நேஹமுமின்றிக்கே யிருக்கிற ராஜாதான் ஸ்ரீமார்க்கண்டேய பகவானைப்போலே தேவதாந்தர பஜநம்பண்ணி அங்குத் தன்னுடைய அபிமதம் தலைக்கட்டிக்கொள்ளப் பெறாமையாலே இங்கே $ ஹ்ருதவிராநனைத் திருவடிகளிலே விழுந்து ஆச்ரயித்து ஐஹிகாமுஷ்மிகங்களிரண்டையும் பெற்றுப்போனான்” என்றும், “† நம்பி ஒரு வாள்கொடுத்தருள அத்தைக்கொண்டு பூமியையடையத் தன் காலின்கீழே இட்டுக்கொண்டானென்றொரு ப்ரஸித்தியுண்டாய்த்து” என்று மருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் அறியத்தக்கன.

திருநறையூர் மணிமாடம்=இவ்வாழ்வார்தாம் பெரியதிருமடலில் அருளிச்செய்யும்போது “இரும்பொழில்சூழ் மன்னுமறையோர் திருநறையூர் மாமலைபோல் பொன்னியலுமாடம்” என்றும் “தென்னறையூர் மன்னுமணிமாடக்கோயில் மணாளனை” என்றும் அருளிச்செய்திருத்தலால் திருநறையூரிலுள்ள நம்பிஸந்நிதிக்கு 'மணிமாடக்கோயில்' எனத்திருநாமம் வழங்கிவந்ததென்பது தெரிகின்றது. (திருநாங்கூர் மணிமாடக்கோயில் வேறு.)

அம்பரம், வடம், வகுளம்—வடசொற்கள். .... (க)

$ அஹங்கார மொழிந்தவனாய் என்றபடி. † நம்பி—திருநறையூரெம்பெருமான்.

கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்டகாலம்
குலவரையின் மீதோடி அண்டத்தப்பால் *
எழுந்தினிது விளையாடு மீசனெந்தை
இணையடிக்கீ ழினிதிருப்பீர் இனவண்டாலும் *
உழுஞ்செறுவின் மணிகொணர்ந்து கரைமேல்சிந்தி
உலகெல்லாம் சந்தனமு மகிலுங்கொள்ள *
செழும்பொன்னி வளங்கொடுக்கும் சோழன்சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (உ)

நெடு வெள்ளம் கொண்ட காலம்	பிரளயப்பெருவெள்ளம் (உலகங்களை) ஆக்கிரமித்த வொரு சமயத்திலே
கொழு கயல் ஆய்	பருத்த மத்ஸ்யரூபியாய்க் கொண்டு
குலவரையின் மீது ஓடி	குலபர்வதங்களின்மேலே போய் ஸஞ்சரித்து
அப்பால்	அதற்குமேலே
அண்டத்து	அண்டபித்தியளவும்
எழுந்து	கிளம்பி [துள்ளி]
இனிது	சுகமாக
விளையாடும்	விளையாடின
ஈசன் எந்தை	எம்பெருமானுடைய
இணை அடி கீழ்	உபயபாதங்களின் கீழ்
இனிது இருப்பீர்	சுகமாகவாழ விருப்ப முள்ளவர்களே!,
இனம் வண்டு ஆலும்	கூட்டமாகத் திரண்ட வண்டுகள் நடமாடப் பெற்ற
செழு பொன்னி	அழகிய திருக்காவேரியானது
உழும் செறுவின் கரை மேல்	உழப்படுகிற கழனிகளின் வரப்புகளின்மீது
மணி கொணர்ந்து சிந்தி	ரத்னங்களைக் கொண்டுவந்து சிதறத் தள்ளியும்
உலகு எல்லாம்	ஸகலஜனங்களும்
சந்தனமும்	சந்தனக்கட்டைகளையும்
அகிலும்	அகிற்கட்டைகளையும்,
கொள்ள	எடுத்துக்கொள்ளும்படியாக
வளம் கொடுக்கும்	வளங்களைக் கொடுக்கு மிடமாய்
சோழன் சேர்ந்த	சோழராஜன் பணிசெய்யப் பெற்றதான

திரு நறையூர் மணி மாடம், சேர்மின்கள்—.

* * *—மத்ஸ்யாவதார வரலாறு முன்னடிகளில் அநுஸந்திக்கப்படுகிறது. ஒரு பிரமகல்பமுடிவில் பிரமசம்பந்தமான நைமித்திக ப்ரளயம் உண்டாயிற்று; அப்பொழுது பூமிமுதலிய உலகங்கள் கடலாற் சூழப்பட்டு மூழ்குஞ்ஸமயத்தில் நித்திரை தெளிந்தெழுந்து அந்த ஜலத்தில் படுக்கயத்தனித்த பிரமனது முகத்தினின்றும் வெளிக்கிளம்பின நான்கு வேதங்களையும் ஹயக்ரீவனென்னுமோர் தானவன் அபஹரித்துக் கொண்டுபோய் விட்டான்; அப்போது வேதங்கள் தொலைந்ததை கண்டு திருமால் ஓர் சிறிய மீன்வடிவு கொண்டார்; அக்காலத்தில் தவத்தின் பெருமையினால் ஜீவித்து, கிருதமாலா நதியின்கரையில் திருமாலை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்த ஸத்யவ்ரதனென்னுமோர் ராஜர்ஷி ஜலபானம் பண்ணிக்கொண்டு பிழைத்திருந்தார்; அவர் ஜலதர்ப்பணஞ்செய்கையில்

http://acharya.org

அப்போது இரண்டு கைகளுக்குள் ஒரு சிறிய மீன் அகப்பட்டுக்கொண்டது; அதனை அவர் ஜலத்தில் விட்டார்; அப்போது அந்த மீன் 'ஓ க்ருபாளுவான ராஜரிஷியே! என்னை இப்படி ஜலத்தில் விட்டீரே, என் இனத்தார் என்னை விழுங்கி விடுவார்களே; என்னை நீர் காப்பாற்றியருளவேணும்' என்ன; அவர் அதனைத் தன் கமண்டலதீர்த்தத்தில் எடுத்துவிட்டார்; அதனுட்புகுந்த அந்த மீன் ஓரிரவுக்குள் கமண்டலத்துக்குள் நிரம்பி மறுநாள் காலையில் 'ஓ தயாளுவே! நான் எப்படி உம்முடைய கலசத்துக்குள் கஷ்டப்பட்டு வஸிப்பது? என்மீது சிறிது அருள்புரியலாகாதா?' என்றது; உடனே அவர் அதனைக் கமண்டலத்தினின்றும் எடுத்துத் தன்னிடத்துள்ள சந்தன ஜலத்தில் புகவிட்டார்; உடனே மூன்றடி பிரமாணம் வளர்ந்த அந்த மீன் 'என்னை இப்படி கஷ்டப்படுமாறு விட்டுவைப்பது உமக்குத்தருமமா?' என்றது; அன்புகூர்ந்த அவர் உடனே அதையெடுத்து ஓர் குளத்தினுள் விட்டார்; அங்கும் மிகவளர்ந்த அந்த மீன் 'நான் சுகமாக வஸிக்க இடம்பெறாமல் வருந்துவது உமது திருவுள்ளத்திற்கு உகப்போ?' என்றது; உடனே அவர் அதை யெடுத்து ஒரு ஏரியில் விட்டார்; அக்கணமே அந்த ஏரி நிரம்பவளர்ந்த அந்த மீன் 'ஸ்வாமின்! என்னை யிப்படி அலையவிடுவது நியாயமா?' என்றது; அதைக்கேட்டுக் கருணைகூர்ந்த அவர் அதனையெடுத்துக் கடலில் விட்டார்; அப்பால் அந்த ஸத்யவிரதர் அம்மீனிடத்துப் பெருமயல்கொண்டு அதனை நோக்கி 'ஓ மத்ஸ்யராஜனே! உன்னுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன்; நூறு யோஜனை நீளமும் அதற்குத் தக்க பருமனும் வாய்ந்துள்ள நீ யார்? உனது தத்துவத்தை வெளியிடவேணும்' என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அந்த மத்ஸ்யராஜன் 'ஓ மஹாநுபாவரே! இன்றுமுதல் ஏழுநாட்களுக்குள் இந்த மூன்று உலகங்களும் மூழ்கிவிடப்போகின்றன; அந்தப் பெருநீரில் ஒரு விசாலமான ஓடம் வரப்போகிறது; அந்தப்படகில் ஸப்தரிஷிகளும் நீரும் எல்லா ஓஷதிகளும் ஸமஸ்த பிராணிகளும் ஏறி மனத்திற்கு வருத்தமொன்றுமின்றி உலாவக்கட்வீர்கள்; இப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருக்குமளவில் ஓர் பெருங்காற்று அடிக்கப்போகிறது; அதனால் அந்த ஓடமானது பெருநீரில் அலையப்போகின்றது; அப்பொழுது எனது சிரஸ்ஸில் முளைத்துள்ள பெரியதொரு கொம்பில் பெரியதொரு ஸர்ப்பத்தினால் அந்த ஓடத்தைக்கட்டிவிடும்; பிறகு நான் அந்தப் பட்குடன் உம்மையும் எல்லாப்பிராணிகளையும் ரிஷிகளையுஞ் சுமந்துகொண்டு அந்தப் பேரிருள் நீங்கும்வரையில் நான் கடலில் ஸஞ்சரிக்கப்போகிறேன்; அப்போது எனது பெருமையை நீர் உணர்வீர்' என்றுரைத்துவிட்டு மறைந்திடவே, ஆச்சரியமடைந்த அந்த ஸத்யவிரதர் பகவானாலே குறிக்கப்பட்ட அக்காலத்தை எதிர்பார்த்திருக்கையில் ஸப்த மேகங்களினுடைய ஆரவாரத்தால் கடல் கிளரத்தொடங்கிற்று; பகவான் குறித்ததினத்தில் ஒரு பெரிய ஓடம் அந்தக்கடலில் வரக்கண்டு மகிழ்ந்து எல்லாக் கொடி செடி பீஜங்களையும் அந்தப் படகிலேற்றித் தாமும் ஏறினார்; ஏறி, ஸப்தரிஷிகளுந் தாமுமாய்ப் பகவானைச்

http://acharya.org

சிந்தனைசெய்து கொண்டிருக்கையில், பெரிய கொம்புள்ள மத்ஸ்யரூபங்கொண்ட பகவான் காணப்பட்டார்; லக்ஷம் யோஜனை நீளமும் பதினாயிரம் யோஜனை பருமனும் ஒற்றைக்கொம்பும் ஸுவர்ணவர்ணமும் ஸகலலோகமநோஹர ரூபமும் வாய்ந்தவராகக் காணப்பட்டார்; உடனே அந்த ஸத்யவிரதர் ஒரு பெரிய நாகத்தைக்கொண்டு அந்த மத்ஸ்யபகவானது கொம்பிலே அப்படகைக்கட்டிவிட, அப்பெருமான் அதனை வஹித்துக்கொண்டு அண்டகடாஹத்தளவும் செல்லத் துள்ளிவிளையாடி, முன்பு அசுரர் கவர்ந்துசென்ற வேதங்களையும் மீட்டுக் கொணர்ந்தருளி, ஆக இவ்வண்ணம் பிரளயாபத்தில் நின்றும் பிரஜைகளைக் காத்தருளியதும் வேதங்களை உபகரித்தருளினதும் மத்ஸ்யாவதார வரலாறும். இதனை ஸங்க்ஷேபமாக இப்பாட்டில் ஒன்றரையடியால் அநுஸந்தித்தாராயிற்று.

மேல் எட்டாம்பத்திலும் (8—8—1.) "வானோரளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம் வலியுருவின், மீனாய்வந்து வியந்துய்யக்கொண்ட தண்டாமரைக்கண்ணன்" என்பர்.

"குலவரையின் மீதோடியண்டத்தப்பால் எழுந்தினிது விளையாடும்" என்றது பிரளயப்பெருவெள்ளம் நீங்குமளவும் ஓடத்தை வஹித்துக்கொண்டு விளையாடினமையைச் சொன்னவாறு. இப்படிப்பட்ட எம்பெருமானது திருவடிகளை விடாது பணிந்திருக்கவேணுமென்னும் விருப்புடையீர்! திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—என்கிறார்.

"உழுஞ்செறுவின் மணிகொணர்ந்து கரைமேல் சிந்தி உலகெல்லாம் சந்தனமு மகிலுங்கொள்ளச் செழும்பொன்னி வளங்கொடுக்கும்" என்ற அடைமொழி திருநறையூரில் அந்வயிக்கவுமாம், சோழனிடத்து அந்வயிக்கவுமாம். பொன்னி பெருகும்படியான நாட்டுக்குத் தலைவன் என்றவாறு. காவிரியாறு பெருகும்போது வயல்களிலே ரத்னங்களைக் கொணர்ந்து தள்ளுவதும் சந்தனக் கட்டை அகிற்கட்டை முதலானவற்றை உலகங்கொள்ளுமாறு அடித்துக்கொண்டு வருவதும் இயல்பு. .... (உ)

பவ்வநீருடை யாடையாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப்பவனம் மெய்யா *
செவ்விமாதிர மெட்டும்தோளா அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர் *
கவ்வைமாகளிறுந்தி வெண்ணியேற்ற
கழல்மன்னர் மணிமுடிமேல் காகமேற *
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௩)

பவ்வம் நீர் — கடல் நீரை
உடை ஆடை ஆக சுற்றி — அரையிலுடுத்துக் கொள்ளும் பீதாம்பரமாகச்சுற்றி,
பார் அகலம் திரு அடி ஆ — பூமிப்பரப்பையெல்லாம் திருவடியாகக் கொண்டு,

http://acharya.org

பவனம் மெய் ஆ	வாயுவைத் திருமேனியாகக் கொண்டு
செவ்வி மாதிரம் எட்டும் தோள் ஆ	அழகிய திசைகளெட்டையும் புஜங்களாகக் கொண்டு
அண்டம் திருமுடி ஆ	அண்டபித்தியைத் திருவபிஷேகமாகவுங் கொண்டு
நின்றான் பால்	நின்ற ஸர்வேச்வரனிடத்திலே
செல்ல கிற்பீர்	சென்றுசேர விரும்பியிருக்குமவர்களே!,
கவ்வை	ஆரவாரத்தையுடையனவாய்
மா	பெரியவையான
களிறு	யானைகளை
உந்தி	தள்ளிக்கொண்டு
வெண்ணி	வெண்ணியென்னுமிடத்தில்
ஏற்ற	எதிர்த்து வந்த
கழல் மன்னர்	வீரக்கழலணிந்த அரசர்களினுடைய
மணி முடி மேல்	சிறந்த முடிகளின் மீது
காகம் ஏற	காக்கைகள் ஏறியிருக்கும்படி
தெய்வம் வாள் வலம் கொண்ட	திவ்யமான வாட்படையின் வலிவைக்காட்டின
சோழன்	சோழராஜன்
சேர்ந்த	பணிசெய்யப்பெற்ற

திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—எம்பெருமான் ஜகத்ஸ்வரூபியாயிருக்கும் நிலைமையை உருவகத்தாலே அநுபவிக்கிறார் முன்னடிகளில். விபுவான எம்பெருமானுக்குக் கடல் நீரானது அரையிலுடுக்கும் ஆடையாகின்றது; பூமிப்பரப்பெல்லாம் திருவடியாகின்றது; வாயுராசியெல்லாம் திருமேனியாகின்றது; திசைகளெட்டும் திருத்தோள்களாகின்றன; அண்டகடாஹமானது திருவபிஷேகமாகின்றது; ஆக இவ்வகைகளாலே ஜகத்ரூபியாயிருக்கின்ற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் கிட்டவேணுமென் றிருப்பீராகில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள். அத்திருப்பதி செங்கணான் கோச்சோழன் சேரப்பெற்றதாம்; அவ்வரசன் எப்படிப்பட்டவனென்னில்; மஹாவீரன்; [கவ்வைமாகளிறுந்தி இத்யாதி.] 'விண்ணியேற்ற' என்றபாடம் பெரும்பான்மையாக வழங்கிவரினும் 'வெண்ணி' என்றபாடம் மாறுபட்டதென்ப. 'இது கோயில்வெண்ணி (கோயிலுண்ணி) எனவழங்கும் சோணாட்டூர்' என்பர். படையெடுத்து வந்த மாற்றரசர் போர் செய்த இடம் இது; மேற்பாட்டிலும் இங்ஙனமே. யானைகளைப் படை திரட்டிக்கொண்டு வெண்ணியில் வந்தெதிர்த்த கழல்மன்னர்களைப் பிணமாக்கின சோழன் சேர்ந்த திருநறையூர் என்கை. 'முடிமேல் காகமேற' என்றது பிணமாக்கினபடியைச் சொன்னவாறு. பிணங்களைக் காகமேறியுண்ணுமே.

தெய்வவாள் வலங்கொண்ட—இவ்வரசன் திருநறையூர் நம்பிபக்கல் ஒரு வாள்பெற்று வெற்றிபெற்றனனென்பர். .... (௩)

பைங்கணா ளரியுருவாய் வெருவநோக்கிப்
பருவரத்தோ ளிரணியனைப் பற்றிவாங்கி *
அங்கைவா ளுகிர்நுதியா லவனதாகம்
அங்குருதி பொங்குவித்தா னடிக்கீழ்நிற்பீர் *

http://acharya.org

வெங்கண்மா களிறுந்தி வெண்ணியேற்ற
விறல்மன்னர் திறலழிய வெம்மாவுய்த்த *
செங்கணான் கோச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௪)

பைங் கண் { பசுமையான திருக்கண்களை யுடைய
ஆள் அரி உரு ஆய் } நாஸிம்ஹரூபியாகி
வெருவ நோக்கி { (எதிரிகள்) அஞ்சும்படி விழித்து,
வரம் பரு தோள் இரணியனை } பெற்ற வரங்களினால் பருத்தபுஜங்களை யுடையவனான இரணியாசுரனை
பற்றி வாங்கி பிடித்திழுத்து
அம் கை அழகிய திருக்கைகளிலுள்ள
வாள் உகிர் நுதியால் } ஒளிபொருந்திய நகங்களின் நுனியினால்
அவனது ஆகம் } அவ்விரணியனுடைய சரீரத்தில் நின்றும்
அம் குருதி பொங்குவித்தான் } அழகிய ரத்தத்தை வெள்ளமிடச்செய்த பெருமானுடைய
அடி கீழ் நிற்பீர் { திருவடிகளின்கீழ் நிற்க விருப்பமுடையவர்களே!,
வெம் கண் மா களிறு உந்தி { வெவ்விய கண்களையுடைய பெரியயானைகளைத் தள்ளிக்கொண்டு
வெண்ணி ஏற்ற } வெண்ணியென்னுமிடத்தில் எதிர்த்துவந்த
விறல் மன்னர் சூரர்களான அரசர்கள்
திறல் அழிய வலிமாளும்படியாக
வெம் மா உய்த்த } குதிரைகளை நடத்தி வெற்றிபெற்றவனான
செங்கணான் கோ சோழன்—;
சேர்ந்த கோயில்—;
திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—நாஸிம்ஹாவதாரத்தை யநுபவிக்கிறார் முன்னடிகளில். ஸிங்கத்திற்குக் கண்ணில் பசுமை ஜாதிஸ்வபாவமாதலால் 'பைங்கண்' எனப்பட்டது, பார்த்த பார்வையிலேயே இரணியன் குடல்குழம்பிப் போம்படி பார்த்து, அதற்குமேல் நகங்களையுங்கொண்டு அவனுடலைப்பிளந்தொழித்த பெருமானது திருவடிகளைப் பெறவேண்டியிருப்பீராகில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள். 'பருவரைத்தோள்' என்ற பாடத்திற்கு பருத்த மலைபோன்ற தோள்களையுடையனென்றுரைக்க.

இப்பதியைச்சேர்ந்த சோழனது சிறப்பைச்சொல்லுகிறது மூன்றாமடி. கீழ்ப்பாட்டிலுரை காண்க. .... (௪)

அன்றுலக மூன்றினையு மளந்துவேறோர்
அரியுருவா யிரணியன தாகங்கீண்டு *
வென்றவனை விண்ணுலகில் செலவுய்த்தாற்கு
விருந்தாவீர் மேலெழுந்து வீலங்கல்பாய்ந்து *
பொன்சிதறி மணிகொணர்ந்து கரைமேல்சிந்திப்
புலம்பரந்து நிலம்பரக்கும் பொன்னிநாடன் *
தென்றமிழன் வடபுலக்கோன் சோழன்சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (௫)

http://acharya.org

அன்று	முன்பொருகாலத்தில்
உலகம் மூன்றினையும்	மூவுலகங்களையும்
அளந்து	(திரிவிக்கிரமனாய்) அளந்து கொண்டவனும்
வேறு ஓர் அரி உரு ஆய்	விலக்ஷணமானதொரு நரஸிம்ஹரூபியாகி
இரணியனது	ஹிரண்யாஸுரனுடைய
ஆகம்	உடலை
கீண்டு	இருபிளவாகப் பிளந்து
வென்று	வெற்றிபெற்று
அவனை விண் உலகில் செல உய்த்தாற்கு	அவ்விரணியனை வீரஸ்வர்க்கத்திற்குப் போகவிட்டவனுமான ஸர்வேச்வரனுக்கு
விருந்து ஆவீர்	விருந்தினராக ஆகவேண்டியிருக்குமவர்களே!,
மேல் எழுந்து	கிளர்ந்துகொண்டு
விலங்கல் பாய்ந்து	(இடையே தடையாகநின்ற) மலைகளை உடைத்துக் கொண்டு வந்து
பொன் சிதறி	பொன்களை எங்கும் இறைத்துக்கொண்டு
	(அதற்கு மேலே)
மணி கொணர்ந்து	(மற்றும் பல) ரத்னங்களைத் திரட்டிக்கொண்டு வந்து
கரை மேல்	கரைகளின்மீது
சிந்தி	விழவிட்டு
புலம்	வெளிநிலங்களிலெங்கும்
பரந்து	வியாபித்து (இப்படி)
நிலம் பரக்கும்	பூமியெங்கும் பரவுகின்ற
பொன்னி	திருக்காவேரியையுடைத்தான
நாடன்	நாட்டுக்குத் தலைவனாய்
தென் தமிழன்	தென்திசையிலுள்ள தமிழ்நாட்டுக்கரசனாய்
வட புலம் கோன்	வடநாட்டுக்கும் அரசனான

சோழன், சேர்ந்த, திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—மூவுலகங்களையும் மாவலியினபிமானத்தில் நின்றும் விலக்கித் தன் திருவடிக்கீழ் இட்டுக்கொண்டவனும், எங்குங்கண்டறியாத விலக்ஷணமான நரஸிம்ஹமூர்த்தியாகி இரணியன் மார்வைக்கிழித்து அவனை வீரஸ்வர்க்கமனுப்பினவனுமான பெருமானுடைய ஆதரவுக்கு இலக்காகவேண்டியிருப்பீர்! திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள். தென்னாட்டுக்கும் வடநாட்டுக்கும் தலைவனான சோழன் சேர்ந்து உய்ந்த தலமாம் இத்திருநறையூர். இவ்வரசன் ஆண்ட நாட்டில் பெருகும் பொன்னியாற்றின் வளமுரைப்பது மூன்றாமடி. காவிரியானது ஸஹ்ய பர்வதத்தில் நின்றும் பெருகிவரும்போது வருமிடையே தடையாகநிற்கும் மலைகளையுடைத்துக்கொண்டு பெருகுகின்றமையைச் சொல்லுகிறது 'விலங்கல் பாய்ந்து' என்று. .... (ரு)

தன்னாலே தன்னுருவம் பாய்ந்ததானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகுந் தானாய்வானாய் *
தன்னாலே தன்னுருவின் மூர்த்திமூன்றாய்த்
தானாய னாயினான் சரணென்றுய்வீர் *
மின்னாடு வேலேந்து விளைந்தைவேளை
விண்ணேறத் தனிவேலுய்த்துலகமாண்ட *
தென்னாடன் குடகொங்கன் சோழன்சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (சு)

தன்னாலே	ஸ்வேச்சையாலே
தன் உருவம்	தனது திவ்யமங்கள விக்ரஹத்தை
பயந்த	உண்டுபண்ணிக்கொண்ட
தான் ஆய்	திவ்யாத்மஸ்வரூபத்தை யுடையனாய்
தயங்கு ஒளி சேர் மூ உலகும் தான் ஆய்	மிக்கவொளியையுடைய மூவுலகங்களையும் 'தான்' என்கிற சொல்லுக்குள்ளே அடக்கிக் கொண்டவனாய்
வான் ஆய்	பரமபதத்துக்குத் தலைவனாய்
தன்னாலே	தன்னுடைய ஸங்கல்பத்தாலே
தன் உருவில்	தன் ஸ்வரூபத்தில் நின்றும்
மூன்று மூர்த்தி ஆய்	மூன்று மூர்த்திகளை வெளியிட்டவனாய்
தான்	தானே
ஆயன் ஆயினான்	கோபாலக்ருஷ்ணனுமாகத் திருவவதரித்தவனான எம்பெருமானை
சரண் என்று உய்வீர்	சரணம் என்றெண்ணி உஜ்ஜீவிக்கநினைப்பவர்களே!,
மின் ஆடு	ஒளிபொருந்திய
வேல் ஏந்து	வேற்படையைத்தரித்த
விளந்தை வேளை	'விளந்தைவேள்' என்னும் மோராசனை
விண் ஏற	வீரஸ்வர்க்கமடையும்படி
தனி வேல் உய்த்து	ஒப்பற்ற வேற்படையைப் பிரயோகித்து
உலகம் ஆண்ட	உலகங்களை ஆண்டு வந்த
தென் நாடன்	தென்தேசத்தரசனாய்
குட கொங்கன்	மேற்றிசையிலுள்ள கொங்குநாட்டுக்குத் தலைவனான

சோழன், சேர்ந்த, திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள் —.

* * *—தன்னுருவம் தன்னாலே பயந்த தானாய்=எம்பெருமான் தவிர மற்றையோருடைய ஸ்வரூபமெல்லாம் எம்பெருமானுடைய இச்சைக்கு உட்பட்டதாயிருப்பதுபோல, எம்பெருமானுடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் வேறொருவருடைய இச்சைக்கு உட்பட்டதாயிருக்குமோ வென்னில், இரா; தன்னுடைய ஸ்வரூபஸ்திதி முதலியவை தானிட்ட வழக்காம்படி யிருக்குமவனென்னவுமாம்; அகர்மவச்யன் என்றவாறு. "தயங்கொளிசேர் மூவுலகும் தானாய்" என்றதனால் லீலாவிபூதி முழுவதையும் தானிட்ட வழக்காகவுடையன் என்பதும், 'வானாய்' என்றதனால் நித்யவிபூதியைத் தானிட்ட வழக்காகவுடையன் என்பதும் சொல்லிற்றும். தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்=தன்னுடைய ஸங்கல்பத்தாலேயே ஸ்வஸ்வரூபத்தை மூன்று வகுப்பாக வகுத்துக்கொண்டவன்; தானான நிலைமையிலே நின்று ஸம்ரக்ஷித்தும் ப்ரஹ்மருத்ரர்களுக்கு அந்தர்யாமியாயிருந்து ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களை நடத்தியும் ஆகவிப்படி மூன்று வடிவுகளையுடையவனென்றபடி. தான் ஆயனாயினான்=இப்படிப்பட்ட தான் இடையர்களிலொருவன் 'இவன் எனக்கு மகன்' என்று அபிமானிக்கும்படி க்ருஷ்ணனாய் வந்து அவதரித்தவன். இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் நமக்குப்புகல் என்றிருப்பீரேல் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்.

சோழன் சேர்ந்து உய்ந்த திருப்பதியாமிது; அவன் எப்படிப்பட்டவனென்னில்; வேற்படை வல்லவனான 'விளந்தைவேள்' என்னுமோராசனை வென்று உலகமாண்டவன்.

http://acharya.org

'விளந்த வேளை' என்று பாடம் வழங்கிவரினும் 'விளந்தை வேளை' எனத் திருத்திக்கொள்ள வேணுமென்பர். 'விளந்தை' என்று ஓர் ஊருக்குப் பெய ரென்க. .... (சு)

முலைத்தடத்த நஞ்சுண்டு துஞ்சப்பேய்ச்சி
முதுதுவரைக் குலபதியாய்க் காலிப்பின்னே *
இலைத்தடத்த குழலூதி ஆயர்மாதர்
இனவளை கொண்டானடிக்கீழ் எய்தகிற்பீர் *
மலைத்தடத்த மணிகொணர்ந்து வையமுய்ய
வளங்கொடுக்கும் வருபுனலம் பொன்னிநாடன் *
சிலைத்தடக்கைக் குலச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (எ)

பேய்ச்சி	பூதனையானவள்
துஞ்ச	மாளும்படியாக
தட முலை	(அவளது) பருத்த முலையிலுள்ள
நஞ்சு உண்டு	விஷத்தை உட்கொண்டவனும்,
முது துவரை	ப்ராசீனமான த்வாரகைக்கு
குலபதி ஆய்	தலைவனாய்த் திருவவதரித்து
காலி பின்னே	பசுக்களின் பின்னே
தட	பெரிய
இலை குழல்	இலையாலே செய்யப்பட்ட குழலை
ஊதி	ஊதிக்கொண்டு போனவனும்,
ஆயர் மாதர்	இடைப்பெண்களினுடைய
வளை இனம்	வளைத்திரள்களை
கொண்டான்	(விளையாட்டாக) அபஹரித்தவனுமான எம்பெருமானுடைய
அடி கீழ்	திருவடிகளின் கீழே
எய்தகிற்பீர்	கிட்டி ஆச்ரயிக்க விருப்பமுடையவர்களே!,
மலை தடத்த	மலைப்பிராந்தங்களிலுண்டான
மணி	ரத்னங்களை
கொணர்ந்து	திரட்டிக்கொண்டு வந்து
வையம் உய்ய	உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி
வளம் கொடுக்கும்	ஸம்ருத்தியாகக் கொடுக்கின்றதாய்
வரு	பெருகிவருமதான
புனல்	தீர்த்தத்தையுடைத்தாய்
அம்	அழகியதான
பொன்னி	திருக்காவேரியையுடைய
நாடன்	நாட்டுக்குத்தலைவனாய்
சிலை	வில்லை
தட கை	பெரிய கையிலுடையவனாய்
குலம் சோழன்	சிறந்தவனான சோழராஜன்

சேர்ந்த, கோயில், திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—கம்ஸனது ஏவுதலினால் கள்ளவடிவில் நஞ்சுதீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லவந்த பேய்ச்சியை முலையுண்கிற பாவனையிலே உயிருண்டு முடித்தவனும், த்வாரகாபுரிக்குத் தலைவனும், இலைக்குழலூதிக்கொண்டு பசுக் களின் பின்னே போய் அவற்றை மேய்ப்பவனும், * கோழியழைப்பதன் முன்னங் குடைந்து நீராடுவான் போந்த இடைப்பெண்களின் ஆடையாபரணம் முதலியவற்றைக் கொள்ளைகொண்டு குருந்தமரத்தின்மேலேறி மறைந்து வீற்

http://acharya.org

திருப்பவனுமான எம்பெருமானது திருவடிகளைச் சேரவேண்டில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்.

மலைத்தாழ்வரைகளிலுண்டான ரத்னங்களைக்கொண்டுவந்து பூமியிலுள்ளா ரெல்லாரும் உபஜீவிக்குமாறு ஆங்காங்குக் கொழிக்கின்ற காவிரியாறு பெருகப் பெற்ற நாட்டுக்குத் தலைவனாய்ப் பெரிய ஆண்பிள்ளையான சோழராஜன் பணிவிடை செய்யப்பெற்ற கோயிலாம் அது. .... (எ)

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னைகேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச்சென்று * வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்றவேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநும் சென்னிவைப்பீர் *
இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட *
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (அ)

முருக்கு	முருக்கம்பூப்போலவும்
இலங்கு கனி	விளங்குகின்ற (கோவைப்) பழம்போலவும்
துவர்	சிவந்திருக்கிற
வாய்	அதரத்தையுடையளான
பின்னை	நப்பின்னைப்பிராட்டிக்கு
கேள்வன்	நாயகனும்,
முன்	முன்பொருகாலத்தில்
மன் எல்லாம்	க்ஷத்ரியர்களெல்லாரும்
அவிய	ஒழியும்படியாக
வென்றி செரு களத்து	வெற்றி தரவல்ல போர்க்களத்திலே
சென்று	போய்
செற்றம் வேந்தன்	மாற்றரசனை கார்த்த வீர்யார்ஜுனனுடைய
திறல் அழிய	மிடுக்கு அழியும்படியாக
சிரம் துணித்தான்	(அவனது) தலையைத் துணித்தவனுமான ஸர்வேச்வரனுடைய
திரு அடி	திருவடிகளை
நும் சென்னி வைப்பீர்	உங்கள் தலைகளிலே அணிந்துகொள்ள விருப்ப முடையவர்களே!,
இருக்கு	வேதத்தில்
இலங்கு திருமொழி	சிறந்தவையான புருஷ ஸூக்தம் முதலிய பாகங்களை
வாய்	வாயிலே உடையனாய்
எண் தோள்	எட்டுபுஜங்களையுடையனான
ஈசற்கு	சிவபிரானுக்கு
எழில்	அழகிய
எழுபது மாடம்	எழுபது ஆலயங்களை
செய்து	நிருமாணம் செய்வித்து
உலகம் ஆண்ட	உலகத்தைப் பரிபாலனம் பண்ணின
திரு குலத்து	உயர்ந்த குலத்திற் பிறந்தவனாய்
வளம்	செல்வம் மிக்கவனான

சோழன், சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—முருக்கம்பூப்போலவும் கொவ்வைக்கனிபோலவும் சிவந்து விளங்கா நின்ற அதரத்தையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்குக் கொழுநனும், க்ஷத்ரி

http://acharya.org

யர்களெல்லாரும் தலைமடியும்படி அமர்க்களத்திற்சென்று ஸஹஸ்ரபாஹுவான கார்த்தவீர்யார்ஜுநனுடைய தலையைத் துணித்தவனுமான எம்பெருமானுடைய திருவடிகளைச் சென்னிமேல் அணியவேண்டில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்.

சிவபிரானுக்கு எழுபது ஆலயங்கள் கட்டுவித்து முதலில் சிவபக்தனாயிருந்து பிறகு பகவத்பக்தனாய்ப்பெற்ற சோழன் சேர்ந்த கோயில் இது. (இச்சோழன் முன் பிறவியிற் சிலந்தியாய்ப்பிறந்து திருவானைக்காவிலுள்ள சிவலிங்கத்துக்குத் தன்னூலாலிழைத்து வந்த மேல்விதானத் திருப்பணியை அழித்து வந்த யானை நுழையாவண்ணம் சிவபிரானுக்கு மாடக்கோயில் பலகட்டி வழிபட்டவனென்பது தேவார முதலியவற்றாலு மறியப்படுமென்ப.) சோழமண்டலத்தின் கூறுகளாக அமைந்த ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சிவாலயம் இச்செங்கணனாற் கட்டப்பட்டதென்பர் சேக்கிழார்; "செங்கணான், அந்தமில்சீர்ச் சோணாட்டி லகனாடு தொறுமணியார், சந்திரசேகரனமருந் தானங்கள் பல சமைத்தான்" என்பது பெரியபுராணம். இங்ஙனம் சிவதொண்டினைச் சிறப்பப் புரிந்த இச்சோழன் முடிவில் திருநறையூர்த்திருமாலுக்கு அடியனாய்ச் சிறப்புற்றானென்க. "வேதத்தில் ஸ்ரீபுருஷஸூக்தாதிகளை உச்சரியா நின்றுள்ள வாயையுடையராய் எட்டுத்தோள்களையு முடையராயிருக்கிற தேவர்க்கு, தர்மீயமான மாடங்களெழுபதும் சமைத்துப் பின்னையும் தன்னுடைய அபிமதம் கிடையாமையாலே அவ்வபிமத ஸித்த்யர்த்தமாக அவன் வந்து ஆச்ரயிக்கிற தேசம்" என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வாக்கியம். .... (அ)

தாராளன் தண்ணரங்கவாளன் பூமேல்
தனியாளன் முனியாள ரேத்தநின்ற
பேராளன் * ஆயிரம்பேருடையவாளன்
பின்னைக்கு மணவாளன் பெருமைகேட்பீர் *
பாராள ரவரிவரென் றழுந்தையேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமாவுய்த்த *
தேராளன் கோச்சோழன் சேர்ந்தகோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. (கூ)

தார் ஆளன்	மாலையணிந்துள்ளவனும்	ஆயிரம் பேர் உடைய ஆளன்	ஸஹஸ்ரநாமங்களை வாசகமாகக் கொண்ட ஸ்வாமியும்
தண் அரங்கம் ஆளன்	குளிர்ந்த திருவரங்கமாநகரை ஆள்பவனும்	பின்னைக்கு மணவாளன்	நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனுமான எம்பெருமானுடைய
பூமேல் தனி ஆளன்	தாமரைப்பூவிற்பிறந்து ஒப்பற்றவளான பிராட்டியை ஆள்பவனும்	பெருமை	பெருமைகளை
முனியாளர் ஏத்த நின்ற பேர் ஆளன்	மஹர்ஷிகள் துதிக்கும்படியாயுள்ள பெருமைவாய்ந்தவனும்	கேட்பீர்	கேட்கவேண்டியிருக்குமவர்களே!,

http://acharya.org

அவர் இவர் என்று பார் ஆளர் — இன்னாரின்னாரென்று ப்ராவித்தராய்க்கொண்டு பூமியை ஆள்பவராய்
அழுந்தை — திருவழுந்தூரிலேவந்து
எற்ற — எதிரிட்டவர்களான
படை மன்னர் — ஆயுதபாணிகளான அரசர்களின்
உடல் துணிய — சரீரங்கள் துணிபடும்படி
பரிமா உய்த்த — குதிரைப்படைகளைச் செலுத்தினவனும்
தேர் ஆளன் — தேர்வீரனுமான
கோச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்—.

* * *—'உபயவிபூதியையும் நானே ரக்ஷிக்கக்கடவேன்' என்று தனிமாலையிட்டுக்கொண்டிருப்பவனும் ஐச்வர்யத்தைத் திருக்காக்கும் திருவரங்கம் பெரிய கோயிலை இருப்பிடமாகக்கொண்டுள்ளவனும் தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடைய அத்விதீயையான பிராட்டிக்கு வல்லபனும் ப்ரஹ்மபாவனையையே தலைக்கொண்டிருக்கிற ஸநகாதி மஹர்ஷிகள் ஆதிக்கும் பெருமையுடையவனும், அநுபவிப்பார்க்கு இழிந்தவிடமெங்கும் துறையாம்படி ஆயிரந் திருநாமங்களையுடையவனும் நப்பின்னைப்பிராட்டிக்கு நாதனுமான பெருமானுடைய பெருமைகளை அநுபவிக்கவேண்டில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்கள்.

அத்திருப்பதிக்கு அபிமாநியான சோழனுடைய வீரம் சொல்லுவது மூன்றுபடி. கீழ் மூன்று நான்காம் பாசுரங்களில், வெண்ணி யென்னுமிடத்தில் வந்தெதிர்த்த அரசர்களை வென்ற வீரம் சொல்லிற்று; தேரழுந்தூரில் வந்தெதிர்த்த மன்னரைவென்ற வீரம் சொல்லுகிறது இப்பாட்டில். .... (கூ)

செம்மொழிவாய் நால்வேதவாணர் வாழும்
திருநறையூர் மணிமாடச் செங்கண்மாலை *
பொய்ம்மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன்
புலமங்கைக் குலவேந்தன் புலமையார்ந்த *
அம்மொழிவாய்க் கலிகன்றி இன்பப்பாடல்
பாடவோர் வியனுலகில் நமனூர்பாடி *
வெம்மொழிகேட் டஞ்சாதே மெய்ம்மைசொல்லில்
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந்தக்கோரே. (கo)

செம் மொழி வாய் — உண்மையுரைப்பவர்களும்
நால் வேதம் வாணர் — நான்குவேதங்களையும் அதிகரித்தவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள்
வாழும் — வாழுமிடமான
திரு நறையூர் — திருநறையூரென்னுந் திருப்பதியில்
மணிமாடம் — மணிமாடத்திலெழுந்தருளியிருக்கிற
செம் கண் மாலை — புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரன்விஷயமாக,
பொய் மொழி ஒன்று இல்லாத — பொய்யுரைகள் சிறிதும் கலசாத
மெய்ம்மை ஆளன் — ஸத்யவசனத்தையுடையவரும்
புலம் மங்கை குலம் — அழகிய திருமங்கை நாட்டுக்கு
வேந்தன் — தலைவரும்

http://acharya.org

புலமை ஆர்ந்த அம் மொழி வாய் — பாண்டித்யம் நிரம்பிய அப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளைத் திருவாயிலே உடையவருமான

கலிகன்றி — திருமங்கையாழ்வாருடைய

இன்பம் பாடல் — ஆநந்தமயமான (இந்தப்) பாசுரங்களை

வியன் உலகில் — இப்பெரியவுலகத்திலே

பாடுவார் — பாடுமவர்கள்

மெய்ம்மை சொல்லில் — (பெறும்பலனை) உள்ளபடி சொல்லப்புகுந்தால்,

நமன்றமர் பாடி — யமலோகத்திலுண்டாகக் கூடிய

வெம் மொழி கேட்டு அஞ்சாதே — கடுஞ்சொற்களைக் கேட்டு அஞ்சாமல்

விண்ணவர்க்கு விருந்து ஆகும் பெருந்தக்கோர் — நித்யஸூரிகள் ஆதரித்துக் கொண்டாடும்படியான பெருமைபொருந்தியவராவர்.

* * *—ஸத்யவாதிகளாய் வேதத்துக்கு வ்யாஸபதம் செலுத்த வல்லவர்களான பிராமணர் வாழுமிடமான திருநறையூரில் மணிமாடக்கோயிலில் எழுந்தருளியிருக்கிற புண்டரீகாக்ஷனை எம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் ஆநந்தமாக அருளிச்செய்த இத்திருமொழியை * உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்திலே அதிகரிக்குமவர்கள் பெறும் பேற்றை உள்ளபடி சொல்லுவோமாகில், அவர்கள் யமபடருடைய கடுஞ்சொற்களைக்கேட்டு வருந்த அவகாசம் பெறாமல் திருநாட்டிற்புகுந்து * சூழ்விசும்பணிமுகில் திருவாய்மொழியிற்படியே நித்யஸூரிகள் எதிரேவந்து தங்கள் தங்களிருப்பிடங்களிலே கொண்டுபுக்கு உயரவைத்துத் தாங்கள் தாழவிருந்து திருவடி விளக்கிக்கொண்டாடும்படியான பெருமையைப் பெறுவார்களென்று இத்திருமொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

வேதவாணர்—வேதவாழ்நர்; வேதங்களைக்கொண்டு வாழ்பவர் என்றபடி. **திருநறையூர் மணிமாடம்**—மணிமயமான மாடங்களையுடைய திருநறையூர் என்றுமுரைப்ப. .... (௧௦)

அடிவரவு:—அம்பரம் கொழு பவ்வம் பைங்கண் அன்று தன்னுலே முலை முருக்கு தாரானன் செம்மொழி ஆறும்.

ஆறாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து—ஏழாந்திருமொழி,

ஆளும் பணியுமடியேனை.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதித் திருப்பதிகம்.]

ஆளும்பணியுமடியேனைக்கொண்டான் விண்டநிசாசரரை *
தோளுந்தலையும் துணிவெய்தச் சுடுவெஞ்சிலைவாய்ச் சரந்துரந்தான் *
வேளுஞ்சேயு மனையாரும் வேற்கணாரும் பயில்வீதி *
நாளும்விழவி னொலியோவா நறையூர்நின்ற நம்பியே. (க)

அடியேனை	அடியேனை	வேளும் சேயும் அனையாரும்	மன்மதனோடும் ஸுப்ரஹ்மண்யனோடும் ஒத்த அழகியபுருஷர்களும்
ஆளும் பணியும் கொண்டான்	சேஷபூதனாகவும் நித்யகிங்கரனாகவும் திருவுள்ளம் பற்றினவனும்,	வேல் கணாரும்	வேல்போன்ற கண்களையுடைய மாதர்களும்
விண்ட நிசாசரரை	பிரதிகூலரான ராக்ஷஸர்களின்	பயில் வீதி	வாஸஞ்செய்யப்பெற்ற திருவீதிகளையுடைத்தாய்,
தோளும் தலையும் துணிவு எய்த	தோள்களும் தலைகளும் துண்டுதுண்டாம்படியாக	நாளும்	எப்போதும்
சுடு வெம் சிலை வாய்	மிகக்கடூரமான வில்லில் நின்றும்	விழவின் ஒலி ஓவா	உத்ஸவகோலாஹலங்கள் ஓயாதிருக்கப் பெற்றதான
சரம்	அம்புகளை	நறையூர்	திருநறையூரில்
துரந்தான்	பிரயோகித்தவனுமான பெருமான் (யாவனென்னில்)	நின்ற	நித்யவாஸம்பண்ணுகிற
		நம்பி	ஸ்வாமி.

* * *—[அடியேனை ஆளும்பணியுங் கொண்டான்] ஆட்கொள்ளுகையாவதென்? பணிகொள்ளுகையாவதென்? என்னில்; 'இவன் நமக்கு உரியவன்' என்னும்படி சேஷத்வத்திலே நிறுத்துகை ஆட்கொள்ளுகையாம்; சேஷத்வத்தின் பயனான கைங்கரியத்தைக்கொள்ளுகை பணிகொள்ளுகையாம்; அடியேனுக்கு சேஷத்வ பாரதந்திரியங்களிரண்டையும் தந்தருளினவனென்றதாயிற்று. 'நான் எனக்கே உரியவன்; பிறர்வாசலில் தலைமடுக்கமாட்டேன்' என்று மார்பு நெறித்திருந்த நிலைமையைப்போக்கியும் இளையபெருமாளைப்போலே எல்லாவகையான கைங்கரியங்களையும் செய்வேனென்படி திருத்தியும் வாழ்வித்தவனென்கை. இப்படிப்பட்ட சேஷத்வ பாரதந்திரியங்களுக்கு இசையாதவர்களிடத்திலே நடத்தும் சிக்ஷையைச் சொல்லுகிறது விண்டநிசாசரரை என்று தொடங்கி. விண்ட=பொருந்தாமல் எதிரம்புகோர்த்த என்றபடி. அப்படிப்பட்ட

http://acharya.org

நிசாசரரை [அரக்கரை] தோளுந்தலையுந் துணிவெய்தச்சுடுவெஞ் சிலைவாய்ச் சரந்துரந்தான். "விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்। பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதிஸம்யுதா = விசித்ரா தேஹஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் — பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதிஸம்யுதா" என்கிறபடியே நம்மை வழிபடுவதற்கென்றே கொடுத்த கரசரணாதி அவயவங்கள் இவர்கட்கு அக்காரியத்தில் உபயோகப்படுகின்றிலவாகில் இவர்கட்கு இவை எதுக்கு? என்று தோள் தலை முதலிய உறுப்புகளை யொழித்தானாயிற்று.

இப்படிப்பட்ட எம்பெருமான் இன்னமும் அடியவர்களை ஆளும்பணியுங் கொள்வதற்காகவும் ஆஸுரப்ரக்ருதிகளைத் தொலைப்பதற்காகவும் ஸந்நிதி பண்ணியிருக்குமிடம் திருநறையூர். அதுவெப்படிப்பட்டதென்னில்; அழகிற் சிறந்த ஆண்களும் பெண்களும் நிறைந்த பெருநகரம்; நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவங்கள் இறைப்பொழுதும் மாறாமல் எப்போதும் உத்ஸவ கோலாஹலங்களை மிக்கது.

"ஆளும்பணியு மடியேனைக்கொண்டான்" என்பதைப் பாட்டுக்கு வினைமுற்றாகக்கொண்டு உரைக்கவுமாம். .... (௧)

முனியாய்வந்து மூவெழுகால் முடிசேர்மன்ன ருடல்துணிய *
தனிவாய்மழுவின் படையாண்ட தாரார்தோளான் வார்புறவில் *
பணிசேர்முல்லை பல்லரும்பப் பானலொருபால் கண்காட்ட *
நணிசேர்கமலம் முகங்காட்டும் நறையூர்நின்ற நம்பியே. (௨)

முனி ஆய் வந்து	பரசுராம முனியாய்த் திருவவதரித்து
மூவெழுகால்	இருபத்தொரு தலைமுறையளவும்
முடி சேர் மன்னர் உடல் துணிய	முடியுடையரான க்ஷத்ரியர்களின் சரீரங்கள் தொலையும்படியாக
தனி வாய் மழுவின் படை ஆண்ட	ஒப்பற்ற [கூர்மையான] வாயையுடைத்தான கோடாலியை ஆயுதமாகக் கொண்டவனும்
தார் ஆர் தோளான்	மாலையணிந்த திருத்தோள்களை யுடையனுமான பெருமான்,—
வார் புறவில்	அகன்ற சோலைப்புறத்திலே
ஒரு பால்	ஓரிடத்தில்

பணி சேர் முல்லை	குளிர்ந்த முல்லைப் பூக்களானவை
பல் அரும்ப	(அவ்வூரிலுள்ள மாதர்களின்) பற்கள் போன்று அரும்பு செய்யப்பெற்றதும்
பானல்	கருங்குவளைப்பூக்களானவை
(ஒருபால்)	மற்றோரிடத்தில்
கண் காட்ட	(அந்த மாதர்களின்) கண்கள் போன்று அலரப் பெற்றதும்
(ஒருபால்)	மற்றோரிடத்தில்
நணி சேர் கமலம்	மிகுதியாகவுள்ள தாமரைப் பூக்களானவை
முகம் காட்டும்	(அந்த மாதர்களின்) முகம் போன்று விகஸிக்கப் பெற்றதுமான
	நறையூர், நின்ற நம்பி—.

* * *—உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத்திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்ரிய வம்சங்கள் பலவற்றை நாசஞ்செய்தற்பொருட்டு

நாராயணமூர்த்தி ஜமதக்நிமுனிவரது மனைவியான ரேணுகையிடம் இராமனாய்த் திருவவதரித்துப் பரசு என்னும் கோடாலிப்படையை ஆயுதமாகக்கொண்டு அதனாற் பரசுராமனென்ன ப்ரஸித்திபெற்று வருகையில், ஒருநாள் கார்த்தவீரியார்ஜுநனும் அவனது குமாரர்களும் வேட்டையாடி ஜமதக்நியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்தகாலத்து, அங்கே அம்முனிவனது ஹோமதேநுவானது வேண்டின வஸ்துக்களையெல்லாம் யதேஷ்டமாக அளித்துக்கொண்டிருப்பதைக் கண்ட இவர்கள் அப்பசுவைக் கொள்ளைகொள்ள விரும்பி அதனைக்கவர்ந்து அம்முனிவனையுங் கொன்றிட்டது காரணமாக (ப்பரசுராமன்) அக்கார்த்தவீர்யார்ஜுநனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அதனாலேயே க்ஷத்ரிய வம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டானென்ற வரலாறு முன்னடிகட்கு அறியத்தக்கது. இப்படி துஷ்டர்களையழித்து சிஷ்டர்களை வாழ்விக்கக்கடவேனென்று தனிமாலையிட்டிருக்கும்படியைச் சொல்லுகிறது **தாரார் தோளான்** என்று.

இப்படிப்பட்ட எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான திருநறையூர் எப்படிப்பட்டதென்னில்; முல்லையரும்புபோன்ற பல்லழகும் கருங்குவளைப் பூப்போன்ற கண்ணழகும் செந்தாமரைப்பூப்போன்ற முகத்தினழகும் வாய்ந்த மாதர் நிரம்பிய ஊர் என்பதை ஒரு சமத்காரமாக அருளிச்செய்கிறார் பின்னடிகளில். அழகிய மாதர்கள் வாழ்கின்றன ரென்றுரைப்பது நகர்வளங்கூறும் வகைகளுள் ஒன்றாதல் அறிக.

ஈற்றடியின் முற்பகுதி "நனிசேர் வயலுள் முத்தலைக்கும்" என்றும் ஓதப்பட்டுவந்ததென்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தினால் விளங்குகின்றது. அப்பாடமே முதன்மையாக வியாக்கியானிக்கப் பட்டுள்ளது. (௨)

தெள்ளார்கடல்வாய் விடவாய சினவாளரவில் துயிலமர்ந்து *
துள்ளாவருமான்விழ வாளிதுரந்தான் இரந்தான் மாவலிமண் *
புள்ளார்புறவில் பூங்காவி புலன்கொள் மாதர்கண்காட்ட *
நள்ளார்கமலம் முகங்காட்டும் நறையூர் நின்றநம்பியே. (௩)

தெள் ஆர் கடல் வாய்	தெளிவுடைய திருப்பாற்கடலில்
விடம் வாய	விஷத்தை உமிழாநின்ற வாயையுடையனாய்
சினம்	(ப்ரதிகூலர்மேல்) சீற்றமுடையனாய்
வாள்	ஒளிபொருந்தியவனான
அரவில்	திருவனந்தாழ்வான் மீது
துயில் அமர்ந்து	சயனித்தருள்பவனும்
துள்ளா வரு	(பஞ்சவடியில்) துள்ளிவிளையாடிக்கொண்டு வந்த
மான்	(மாரீசனாகிற) மாயா மிருகம்
விழ	மாளும்படி
வாளி துரந்தான்	அம்பு எய்தவனும்
மாவலி	மஹாபலியினிடத்து
மண் இரந்தான்	பூமியை யாசித்தவனுமான பெருமான்,—
புள் ஆர் புறவில்	பட்சிகள் நிறைந்த புறச்சோலைகளிலே
பூ காவி	அழகிய செங்கழுநீர்ப் பூக்கள்

http://acharya.org

புலன் கொள் மாதர்	அழகிய ஸ்த்ரீகளினுடைய
கண்	கண்களை
காட்ட	காட்டப்பெற்றதும்
நல் ஊர் கமலம்	(இதழ்ச்) செறிவை யுடைய தாமரைப்பூக்கள்
முகம் காட்டும்	(அவர்களது) முகங்களைக் காட்டப் பெற்றதுமான

நறையூர், நின்ற நம்பி—.

* * *—அவதாரங்களுக்கு வேர்ப்பற்றான திருப்பாற்கடலில் வாழ்ச்சியைச் சொல்லுகிறது முதலடி. திருவனந்தாழ்வான் மங்களாசாஸந பரனாதலால் மது கைடபர்போன்ற அசுரர்கள் மேன்மேலும் வந்து எம்பெருமானுக்குத் தீங்கிழைக்கப் புகுகிறார்களோவென்று அதிசங்கித்து விஷத்தை உமிழ்வதும் சீறிக் கொண்டே யிருப்பதுமான நிலைமையைச் சொல்லுகிறார் **விடவாய சினவாளரவில்** என்று.

திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேலே எம்பெருமான் திருக்கண் வளர ஆசையுண்டோ? தேவர்கள் ஓடிவந்து கூக்குரலிட்டுக் கதறுவர்களே; 'பிரானே! படுக்கையை விட்டெழுந்திரு; எங்கள் பகைவரைத் தொலைத்திடு' என்று பல்லைக்காட்டிப் பிரார்த்திப்பார்களே; அவ்வவர்களுடைய கூக்குரலைக் கேட்டுக்கொண்டு படுக்கையில் கண்ணுறங்கமாட்டானே; உடனே திருவவதரித்துச்செய்தருளுங் காரியங்களுள் ஒன்றைச்சொல்லுகிறார் **துள்ளாவருமான் விழ வாளிதுரந்தான்** என்று. துள்ளா-துள்ளி என்றபடி; 'செய்யா' என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். 'இது மெய்யாகவே மான்' என்று நம்பும்படி துள்ளித்துள்ளி விளையாடிக்கொண்டே வந்த மாரீசனாகிய மாயமான் முடியும்படி அம்பெய்தவன். .... (௩)

ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி யொண்கயிற்றால் *
விளியாவார்க்க வாப்புண்டு விம்மியழுதான் மென்மலர்மேல் *
களியாவண்டு கள்ளுண்ணக் காமர்தென்ற லலர்தூற்ற *
நளிர்வாய்முல்லை முறுவலிக்கும் நறையூர் நின்றநம்பியே. (௪)

ஒளியா	மறைந்து நின்று
வெண்ணெய்	வெண்ணெயை
உண்டான் என்று	விழுங்கின குற்றத்திற்காக
ஆய்ச்சி	யசோதையானவள்
விளியா	கோபித்து
ஒண் கயிற்றால்	அழகிய தாம்பினால்
உரலோடு	உரலோடு சேர்த்து
ஆர்க்க	கட்ட
ஆப்புண்டு	கட்டுண்டு
விம்மி அழுதான்	விக்கிவிக்கி அழுத பெருமான்,—
மென் மலர் மேல்	மெல்லிய பூக்களின்மீது
வண்டு	வண்டுகள்
களியா	களித்து
கள் உண்ண	தேனைப்பருக,
காமர் தென்றல்	அழகிய தென்றல்காற்று
அலர் தூற்ற	புஷ்பங்களை வீசியிறைக்க,
நளிர் வாய் முல்லை	குளிர்ந்த முகத்தையுடைய முல்லைப்பூக்கள்
முறுவலிக்கும்	புன்சிரிப்புச் செய்யுமா போலே விகஸிக்கப் பெற்ற

நறையூர், நின்ற நம்பி—.

http://acharya.org

* * *—யசோதைப்பிராட்டி தடாக்களிலே சேமித்துவைத்த வெண்ணெய் முதலியவற்றைக் களவுவழியாலே கைப்பற்றி அமுதுசெய்த குற்றத்திற்காகத் தாம்பினால் கட்டுண்டு விக்கியழுத பரமஸௌலப்யன் திருநறையூர்நம்பி காண்மின்.

இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் ஒரு ஐதிஹ்ய மருளிச்செய்யப்படுகிறது; அதாவது—

“வங்கிப்புரத்து நம்பி பலகாலும் ‘திருவாராதன மருளிச்செய்யவேணும்’ என்று போருமாய் அவஸரஹாநியாலே அருளிச்செய்யாதே போந்தாராய்த் திருமலையிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே, ஆழ்வானுக்கும் நம்பி ஸ்ரீ ஹநுமத்தாஸர்க்கும் அதுதன்னை யருளிச்செய்தாராய்ச் சமைகிறவளவிலே நம்பி தோற்ற, திருவுள்ளம் துணுக்கென்றஞ்சி அப்போதருளிச்செய்த வார்த்தை:—‘என்றுமுள்ள இஸ்ஸம்ஶயம் தீரப்பெற்றோமாகிறது; நியாமகன் நியாம்யங்களிலே சிலர்க்கு அஞ்சிக்கட்டுண்டு அடியுண்டு அழுது நின்றானென்றால் இது கூடுமோ என்றிருந்தோம்; இன்று இரண்டு இழவுக்கும் நம்முடைய ஹ்ருதயம் அஞ்சி நொந்தபடியால் அதுவும் கூடும் என்று.” என்பதாம்.

இந்த ஐதிஹ்யத்தின் தாத்பரியம் வருமாறு:—வங்கிப்புரத்து நம்பியென்பவர் உடையவர் ஸ்ரீபாதத்திலே பலகாலும் அநுவர்த்தித்து ‘அடியேனுக்குத் திருவாராதனப்ரயோகம் உபதேசிக்கவேணும்’ என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்; ஆனாலும் உபதேசிக்க உடையவர்க்கு அவகாசப்படாமலே போயிற்று; இப்படியிருக்கையில் ஒருநாள் கூரத்தாழ்வானுக்கும் ஹநுமத்தாஸரென்னு மொருவர்க்கும் திருவாராதநக்ரமம் உபதேசிக்கநேர்ந்து உபதேசித்து முடிகிற ஸமயத்திலே வங்கிப்புரத்து நம்பி அங்கேவந்து சேர்ந்தார்; அவரைக் கண்டவுடனே உடையவருடைய திருவுள்ளம் அஞ்சி நடுங்கிற்று; இவர் பலகால் கேட்டுக் கொண்டிருந்தும் இவர்க்கு உபதேசியாதொழிந்தோம்; இன்று இவ்விருவர்க்கு உபதேசிக்கும்போதாவது இவரையும் கூட்டிக்கொண்டு உபதேசித்திருக்கலாம்; அதுவுஞ்செய்யப் பெற்றிலோம்: இவ்விருவகைக் குற்றங்களுக்கு ஆளானோமே! என்று அஞ்சிநடுங்கின உடையவர் வங்கிப்புரத்து நம்பியை நோக்கி அழகாக ஒருவார்த்தையருளிச் செய்தார்; அதாவது—எனக்கு நெடுநாளாக இருந்த ஒரு ஸந்தேஹம் இன்று தீரப்பெற்றது; ‘ஒளியா வெண்ணெ யுண்டானென்று உரலோடாய்ச்சி ஒண்கயிற்றால் விளியாவார்க்க வாப்புண்டு விம்மி யழுதான்’ என்றும் ‘எழில்கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்குநிலையும்...... அழுகையுமஞ்சிநோக்கு மந்நோக்கும்’ என்றும் ஆழ்வார்களருளிச் செய்கிறார்களே, உண்மையில் இப்படியிருக்குமோ, ஸர்வநியாமகனான எம்பெருமான் நியாம்யரானாரிடத்தில் அஞ்சிவருந்தக் கூடுமோவென்று ஸந்தேஹமுண்டாயிருந்தது; இப்போது உம்மிடத்தில் நான் அஞ்சி வருந்தினேனாகையால் அது ஸம்பாவிதமேயென்று துணியப்பெற்றேனென்றாராம்.

ஒளியா—ஒளித்து என்றபடி: ‘செய்யா’ என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். ‘விளியா’ என்றதும் அதுவே. விளிதல்-கோபித்தல். ஆப்புண்டு

http://acharya.org

விம்மியழுதான்—'ஆய்ச்சி தாம்பினால் நம்மைக்கட்டி வருத்துகின்றாளே' என்று துன்பம் பொறுத்திருக்கமாட்டாமல் விம்மியழுதானல்லன்; 'தயிர் பால் வெண்ணெய்களையும் பெண்களையும் களவுசெய்து திரியவேண்டிய காலம் பாழாய்ப் போகிறதே!, கட்டுண்டிருக்குமளவும் அந்தத் தொழில்களைத் தவிர்ந்திருக்க வேண்டியதாயிற்றே!' என்று வருந்தி விம்மியழுதானென்க.

[**மென்மலர்மேல் களியாவண்டு** இத்யாதி.] திருநறையூரின் சோலைவளம் சொல்லுகிறது: வண்டுகள் களித்து மதுபானம் பண்ணும்படி மலர்கள் தேன்மிக்கிருக்கின்றன; தென்றற்காற்று எங்கும் வீசி மலர்களை யுதிர்த்துத் தூற்றுகின்றது; முல்லைப்பூக்கள் மலரத் தொடங்குகின்றன—இதுவாயிற்று அவ்விடத்துச் சோலைகளின் நிலைமை.

பின்னடிகளில் சொற்சேர்க்கை அமைந்த அழகு ஆராயத்தக்கது. "மென்மலர்மேல் களியாவண்டு கள்ளுண்ணக் காமர்தென்றலலர்தூற்ற நளிர்வாய்முல்லை முறுவலிக்கும்" என்ற வாக்கியத்தொடரில் ஒரு அர்த்தவிசேஷம் ஸ்புரிக்கும். அதாவது—**வண்டு** என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவனைச் சொன்னபடியாய் அவன் ஏதோவிதிவசத்தால் மதுபானம் பண்ணிவிட்டானென்றும், அதைக் கண்டவொருவன் நாட்டிலே $ பழிதூற்றப் புறப்பட்டானென்றும், இவ்விரண்டையுங் கண்ட ஒரு ஸாத்விகன் 'ஏதோவிதிவசத்தால் ஒருவன் ஒருகால் மதுபானம் பண்ணிவிட்டால் அதைப்பற்றி இப்படியும் ஒருவன் பழிதூற்றவேணுமோ? இவ்விருள்தருமாஞாலத்தில் இது ஸஹஜந்தானேயென்று வாளாவிருக்கலாகாதோவென்று வாய்விட்டுச் சிரிக்கமாட்டாமல், 'இவ்வையென்னவுலகியற்கை!' என்று புன்சிரிப்புச் செய்கிறானென்றும் தோன்றும். எப்படிப்பட்ட அதிகாரிக்கும் ஒரு நிஷித்தகாரியம் செய்யநேர்ந்துவிடுவது ஸஹஜமென்றும் அதைப்பற்றி ஒருவன் பழிதூற்ற நேருவதும் ஸஹஜமென்றும், 'இது ஒரு ப்ரமாதமா? இதைப்பழிதூற்ற வேணுமா' என்று சிலமஹான்கள் நினைப்பதுமுண்டென்றும் லௌகிகஸந்நிவேச முணர்த்தியவாறு. .... (ச)

வில்லார்விழவில் வடமதுரை விரும்பிவிரும்பா மல்லடர்த்து *
கல்லார்திரடோள் கஞ்சனைக்காய்ந்தான் பாய்ந்தான் காளியன்மேல் *
சொல்லார் சுருதிமுறையோதிச் சோமுச்செய்யும் தொழிலினோர் *
நல்லார்மறையோர் பலர்வாழும் நறையூர் நின்றநம்பியே. (ரு)

- **வில் ஆர் விழவில்** { (கம்ஸன் நடத்தின) தநுர்யாகத்திலே
- **வட மதுரை விரும்பி** { வடமதுரைக் கெழுந்தருள ஆசைப்பட்டு (எழுந்தருளின வளவிலே)
- **விரும்பா** எதிரிகளான
- **மல்** மல்லர்களை
- **அடர்த்து** முடித்து

(அதன்பிறகு)

- **கல் ஆர் திரள் தோள் கஞ்சனை காய்ந்தான்** { மலைபோன்று திரண்ட தோள்களை யுடையனான கம்ஸனைச் சீறிக் கொன்றவனும்
- **காளியன் மேல்** } காளிய நாகத்தின் மீது

$ 'அலர்தூற்ற' என்றதில் சிலேடை: அலர்—புஷ்பமும் பழியும்.

பாய்ந்தான்	குதித்து அதனை வலியடக்கி னவனுமான பெருமான்,
சொல் ஆர் சுருதி	(குற்றமற்ற) சொற்கள் நிரம்பிய வேதங்களை
முறை ஓதி	முறைப்படியே அதிகரித்து
சோமு செய்யும் தொழிலி னோர்	ஸோமயாகம் முதலிய யாகங்கள் நடத்துவதைக் கருமமாகவுடையராய்
நல்லார்	விலக்ஷணரான
மறையோர் பலர் வாழும்	வைதிகர்கள் பலர் வாழுமிடமான

நறையூர், நின்ற நம்பி—.

* * *—தன்னைக்கொல்லப் பிறந்த தேவகீபுத்திரன் திருவாய்ப்பாடியில் ஒளித்து வளர்கிறுனென்பதை யறிந்தகம்ஸன் பல அசுரர்களை ஏவி அக்கண்ணபிரானை முடிக்கப்பார்த்தும் தன் கருத்து நிறைவேறக்காணுமையாலே எப்படியாகிலும் அவனை நேரில் வரவழைத்து முடித்திடவேணுமென்று தீர்மானித்து, தான் ஒரு வில்விழா நடத்துவதாக வியாஜம்வைத்து அதற்காகக் கிருஷ்ண பலராமர்களை மதுரைக்கு வரவழைத்துத் தனது அரண்மனையினுட்புகும்போதே எதிரிட்டுக் கொல்லுமாறு சில மல்லர்களை நிறுத்திவைக்க, அந்தமல்லர்களை நொடிப்பொழுதில் முடித்திட்டு, பிறகு சிங்காசனத்தின் மீதிருந்த அக்கஞ்சனையும் மயிரைப்பிடித்திழுத்துக் கீழேதள்ளி முடித்தவரலாறு உணர்க. காளியநாகத்தின் மேற்பாய்ந்தது வேறொரு ஸமயத்திலாகிலும் அதனையும் இங்குச் சேர்த்தருளிச் செய்தது—'பகவத்கதைகளை யநுஸந்திப்பதில் ஆழ்வார்கட்கு ஓர் அடைவு இல்லை, பக்திப்ரகர்ஷம் பேசுவிக்கிறபடி யெல்லாம் பேசுவர்கள்' என்பதை விளக்கும்.

இப்படி துஷ்டநிக்ரஹம் பண்ணுகிற எம்பெருமான் வேதாத்யயந நிஷ்டர்களாயும் யஜ்ஞசீலர்களாயுமுள்ள அந்தணரை வாழ்விக்கும் பொருட்டுத் திருநறையூரில் நிற்கிறுனென்கிறது பின்னடிகளில்.

ச்ருதி—வடசொல். சோமு—ஸோமம் என்ற வடசொல்விகாரம். ஸோமயாகத்தைச் சொன்னபடி. .... (௫)

வள்ளிகொழுநன் முதலாய மக்களோடு முக்கணன்
வெள்கியோட * விறல்வாணன் வியந்தோள்வனத்தைத் துணித்துகந்தான் *
பள்ளிகமலத் திடைப்பட்ட பகுவாயலவன் முகம்நோக்கி *
நள்ளியூடும் வயல்சூழ்ந்த நறையூர் நின்றநம்பியே. (௬)

வள்ளி கொழுநன் முதலாய	வள்ளியம்மைக்கு நாதனை ஸுப்ரஹ்மண்யன் முதலான
மக்களோடு	புத்திரர்களோடு கூட
முக்கணன்	முக்கண்ணனை ருத்ரன்
வெள்கி ஓட	வெட்கமடைந்து (எதிர்நிற்கமாட்டாமல் முதுகு காட்டி) ஓடிப்போக,
விறல் வாணன்	பலிஷ்டனை பாணஸுரனுடைய
வியன் தோள் வனத்தை	பரம்பின தோள்களாகிற காட்டை
துணித்து	அறுத்து
உகந்தான்	திருவுள்ளமுவந்த பெருமான்,—

http://acharya.org

கமலத்திடை	தாமரைப் பூவிலே	நள்ளி	பெண் நண்டானது
பள்ளி பட்ட	போய்ப் படுத்துக்கொண்டு திரும்பிவந்த	நோக்கி	பார்த்து
பகு வாய் அலவன்	பெரிய வாயையுடைய ஆண் நண்டின்	ஊடும்	பிரணய கலஹம் பண்ணப்பெற்ற
முகம்	முகத்தை	வயல்	வயல்களினாலே
		சூழ்ந்த	சூழப்பட்ட
			நறையூர், நின்ற நம்பி—

* * *—அத்திருக்காழ்வானைச் சிறைப்பிடித்துவைத்த பாணாஸுரனைத் தோள் அணிந்தும், அவனுக்குக் காவலாளனாக இருந்த கார்த்திகையான் கிருத்தான் முதலான பரிவாரங்களோடு கூடிய ருத்ரனை முதுகுகாட்டி யோடச்செய்தும் தன்னுடைய பரமபுருஷத்வத்தைப் பிரகாசிப்பித்தருளின பெருமான் திருநறையூரிலுள்ளான்.

"பள்ளிகமலத்திடைப்பட்ட பகுவாயலவன்முகம் நோக்கி நள்ளியூடும் வயல்சூழ்ந்த" என்ற பின்னடிகட்குப் பட்டர் அருளிச்செய்யும் அர்த்தவிசேஷம் குறிக்கொள்ளத்தக்கது. தாமரைப்பூவில் படுத்துக்கொண்டிருந்த ஆண்நண்டின் முகத்தைப் பெண்நண்டு பார்த்து ஊடல் செய்யப்பெற்ற வயல்சூழ்ந்த நறையூர் என்று மூலத்திலுள்ளது. இதன் ஆழ்பொருளைப் பட்டர் அழகாக வுரைத்தருள்வராம்: எங்ஙனேயென்னில்;—ஒரு ஆம்பல்மலரிலே நண்டுதம்பதிகள் இனிது வாழ்கையில் கர்ப்பிணியான பேடைக்கு இனியவஸ்துக்களைக் கொணர்ந்து தர வேணுமென்று அலவனு [ஆண்நண்டு]க்கு ஆசையுண்டாயிற்று; பிறகு தாமரைப்பூவிலிருந்து நல்ல மகரந்தத்தைத் திரட்டிக் கொணர்ந்து கொடுப்போமென்று விரும்பி மெல்லமெல்ல நகர்ந்து தாமரைப்பூவிலே சென்று சேர்ந்தது; அவ்வளவிலே ஸூர்யன் அஸ்தமிக்கவே அத்தாமரைமலர் மூடிக்கொள்ள அதனுள்ளே அகப்பட்டது அது; தாமரையை மலர்த்திக்கொண்டு எப்படியாவது வெளிக்கிளம்பிவிட வேணுமென்று எவ்வளவோ முயற்சிகள் செய்துபார்த்தவளவிலும் ஸூர்யோதயமானாலல்லது தாமரை மலராததாயிற்று; உடம்பைக் கொண்டு புரண்டு இரவெல்லாம் அதிலே தங்கியிருந்து பொழுதுவிடிந்தவாறே மலர்ந்த அத்தாமரையில்நின்றும் வெளிப்பட்டு, தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்றத் தன்மனைக்கு விரைந்துவந்து சேர்ந்தது; பகற்போதில் ஆம்பல்மலர் மூடிக்கொள்ளுமே; ஆண்நண்டு அங்குவந்து சேரும்ஸமயமும் பெண்நண்டுகிடக்கும் ஆம்பல்மலர் மூடிக்கொள்ளும் ஸமயமும் ஒன்றாயிருந்தது; இதனைப்பார்த்தால், ஆண் இரவில் வேறிடத்துத் தங்கிவந்தபடியாலும் உடம்பில் சுவடு இருந்தபடியாலும் பிரணயரோஷங்கொண்டு கதவையடைத்துக் கொண்டது என்னலாம்படி யிருந்ததாம்.—ஒருபுறத்தில் மலர்ந்த தாமரை மலர்களும் மற்றொருபுறத்தில் முகுளிதமான ஆம்பல்மலர்களும் விளங்கப்பெற்ற வயலால் சூழப்பட்டது திருநறையூர் என்று வயல நிலைமை சொன்னவாறு.

இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான பங்க்திகள் வருமாறு:—

http://acharya.org

"[பள்ளிகமலமித்யாதி.] பட்டரருளிச்செய்யக் குறிப்பாகக் கேட்டிருப்ப தொரு பாட்டு § என்றருளிச் செய்வர்;—பருவாயலவன் கமலத்திடைப் பள்ளி பட்டது; நள்ளியானது கர்ப்பதாரணத்தாலே வெளுத்திருக்க, அதுக்கு இனியது இடவேணும் என்று மறுவுக்காகப் போந்து அலவனானது தாமரைப் பூவிலே வந்திழியக்கொள்ள, போது அஸ்தமிக்கையாலே உடம்பைக்கொண்டு அங்கே யிங்கே புரண்டு ராத்ரி அதிலேதங்கி அதில் தாதும் சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத்தோற்ற, போதுவிடிந்தவாறே வந்தது. இது போனபோதே தொடங்கிக் ‡ கதவைத்திறந்து வரவுபார்த்துக்கொடுநின்ற நள்ளியானது இத்தைக்கண்டு, 'ராத்ரி தங்கினபடியாலும் உடம்பில் சுவடிருந்தபடியாலும் இது வெறுமனல்ல' என்று முகம்மாறிக் கதவையடைத்து உள்ளேபோய்ப் புக்கது.—இத்தை பட்டர் அருளிச்செய்தவநந்தரம் பிள்ளை திருநறையூரரையர் 'ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பின்னையன்றோ தண்டிப்பது' என்ன; 'என் செய்வோம்? கேள்வியில்லாதபடி. ¶ பெண்ணரசுநாடாய்த்தே!' என்றருளிச் செய்தார்." .... (கூ)

மிடையாவந்த வேல்மன்னர்வீய விசயன்தேர்கடவி *
குடையா வரையொன்றெடுத் தாயர்கோவாய் நின்றான்கூராழிப்
படையான் * வேதநான்கைந்துவேள்வி அங்கமாறிசையேழ் *
நடையாவல்ல வந்தணர்வாழ் நறையூர்நின்ற நம்பியே. (எ)

மிடையாவந்த	நெருங்கி [கூட்டங் கூட்டமாக] (போர்க்களத்தில்) வந்து நின்ற
வேல் மன்னர்	வேற்படையைக்கையிலுடைய அரசர்கள்
வீய	தொலையும்படி
விசயன் தேர் கடவி	அர்ஜுநனுடைய தேரை நடத்தினவனும்
ஒன்று வரை	கோவர்த்தனமென்கிற ஒரு மலையை
குடையா எடுத்து	குடையாகத் தூக்கிப் பிடித்து
ஆயர் கோ ஆய் நின்றான்	இடையர்களுக்கு ரக்ஷகனாய் நின்றவனும்
கூர் ஆழி படையான்	கூர்மை பொருந்திய திருவாழியை ஆயுதமாக வுடையனுமான எம்பெருமான்,—
வேதம் நான்கு	நான்கு வேதங்களையும்
ஐந்து வேள்வி	பஞ்ச மஹாயஜ்ஞங்களையும்
ஆறு அங்கம்	ஆறு வேதாங்கங்களையும்
ஏழ் இசை	ஸப்த ஸ்வரங்களையும்
நடை ஆ வல்ல	எப்போதும் போது போக்காகக்கொண்ட
அந்தணர்	பிராமணர்கள்
வாழ்	வாழுமிடமான
	நறையூர், நின்ற நம்பி—,

§ நம்பிள்ளையருளிச்செய்வரென்றபடி.

‡ இரவெல்லாம் ஆம்பல்மலர் விகஸித்திருந்ததனால், கதவைத்திறந்து வரவுபார்த்துக் கொண்டு நின்றதாக ரஸோக்தி.

¶ திருநறையூர்க்கு 'நாச்சியார்கோயில்' என்று ப்ரஸித்தி இன்றைக்குமுண்டு. அவ்வூரில் எம்பெருமானுக்கு அப்ராதாந்யமும் பிராட்டிக்கு ப்ராதாந்யமும் ஏற்பட்டுள்ளது. திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே யெழுந்தருள்வதும் எம்பெருமான் பின்னே யெழுந்தருள்வதுமா யிருக்கும். ஆணரசுநாடாகில் கேட்பாருண்டு; பெண்ணரசுநாடாதலால் கேட்பாரில்லை என்று இதுவும் ஒரு ரஸோக்தி.

http://acharya.org

* * *—தமக்கு வேறுதுணையில்லாமல் தாம் ஒரு தேரின்மேலிருந்து தமது தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவாராமற் காத்துக்கொண்டு பலவாயிரம் தேர் வீரர்களோடு போர்செய்து ஜயிக்கும் வல்லமையுள்ளவரான அதிரதர்களும், கீழ்ச் சொன்னபடியே தாமிருந்து பதினோராயிரந் தேர்வீரரோடு பொருபவரான மஹாரதர்களுமாகிய பல மன்னர்கள் நெருங்கியிருந்த பாரதப்போரில் பாண்டவர்கட்கு வெற்றியுண்டாம்படியும் மண்ணின்பாரங்கள் மடியும்படியும் பார்த்தன் தேரிற் பாகனாயிருந்து நடத்தினவனும், கோவர்த்தனமலையைக் குடையாகவெடுத்தேந்தி ஆநிரைகளைக் காத்தருளினவனும், திருவாழியாழ்வானைத் திவ்யாயுதமாகவுடையவனுமான எம்பெருமான் வைதிகப்ராஹ்மணர்கள் மலிந்த திருநறையூரினுள்ளான்.

"குடையாவரையொன்றெடுத்து ஆயர்கோவாய் நின்றான்" என்றவுடனே "கூராழிப்படையான்" என்றருளிச்செய்ததில் ஒரு அர்த்தவிசேஷம் தோன்றும்; ஏழுநாள் விடாமழை பெய்வித்து நலிந்த இந்திரனைத் திருவாழிகொண்டு தலையறுத்தொழிக்கலாம்; ஆயினும் அது செய்திலன் எம்பெருமான்; 'அவனுடைய உணவைக் கொண்ட நாம் உயிரையும் கவரலாகாது; பசிக்கோபத்தாலே நலிகிறான்; நலியட்டும்; கைசலித்தவாறே தானே ஓய்கிறான்' என்று பொறுத்திருந்து தன் ரக்ஷ்யவர்க்கங்களைத் தான் நோக்கிக்கொண்டான் என்பதாக. (எ)

பந்தார்விரலாள் பாஞ்சாலி கூந்தல்முடிக்கப் பாரதத்து *
கந்தார்களிற்றுக் கழல்மன்னர் கலங்கச்சங்கம் வாய்வைத்தான் *
செந்தாமரைமே லயனோடு சிவனுமனைய பெருமையோர் *
நந்தாவண்கை மறையோர்வாழ் நறையூர்நின்ற நம்பியே. (அ)

பந்து ஆர் விரலாள்	பந்து பிடித்து விளையாடும் விரலையுடையளான
பாஞ்சாலி	த்ரௌபதியானவள்
கூந்தல் முடிக்க	குழல் முடித்துக் கொள்வதற்காக,
பாரதத்து	பாரதப்போரில்
கந்து ஆர் களிறு	(மதஜலத்தின்) மணம் பொருந்திய யானைகளின் மேலேறியிருப்பவர்களும்
கழல்	வீரக்கழலை யணிந்தவருமான
மன்னர்	அரசர்கள் [துரியோதனாதியர்]
கலங்க	மதிகலங்குமாறு
சங்கம்	தனது ஸ்ரீபாஞ்சஜன்யத்தை

வாய் வைத்தான்	திருப்பவளத்தில் வைத்தூதின பெருமான்,—
செம் தாமரை மேல் அயனோடு சிவனும் அனைய	கமலாஸநனான பிரமனோடும் ருத்ரனோடும் ஒத்த
பெருமையோர்	பெருமைவாய்ந்தவர்களும்
நந்தா வண் கை	ஒருகாலும் குறைபடாத ஔதார்யத்தை யுடையவர்களுமான
மறையோர்	பிராமணர்கள்
வாழ்	வாழப்பெற்ற
	நறையூர், நின்ற நம்பி—.

* * *—த்ரௌபதி விரித்தகூந்தலை முடிப்பதற்காகப் பாரதப்போர் நடத்தின பெருமான் திருநறையூரினுள்ளானென்கிறார். "பந்தார்விரலாள்" என்னும்

http://acharya.org

அடைமொழி பொதுவாக மாதர்கட்குரியது. பந்தடித்துக்கொண்டு விளையாடி விநோதமாகப் போதுபோக்கப் பிறந்தவளேயன்றிப் பரிபவப்படுதற்குப் பிறந்தவளல்லள் பாஞ்சாலி; அப்படிப்பட்டவள் துச்சாஸநனாலே பெரியசபைநடுவே பரிபவப்பட நேர்ந்தபோது கூந்தலைவிரித்து 'இந்த சத்ருக்களைத் தொலைக்குச் செய்தன்றி இக்கூந்தலை முடிப்பதில்லை' என்று பிரதிஜ்ஞை பண்ண, அந்த ப்ரதிஜ்ஞையைத் தலைக்கட்டுதற்காகக் கண்ணபிரான் பாரதப்போரில் வியாபரித்தானாயிற்று.

ஸ்ரீவசநபூஷணத்தில்—"பாண்டவர்களையும் நிரஸிக்க ப்ராப்தமாயிருக்க, வைத்தது—த்ரௌபதியுடைய மங்கலஸூத்ரத்துக்காக. அர்ஜுநனுக்கு ஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபந்நபரித்ராணம் பண்ணிற்றும் இவளுக்காக." என்றருளிச்செய்துள்ள ஸூக்திகள் இங்கே அறியத்தக்கன. (த்ரௌபதியைத் துரியோதநாதிகள் மஹாஸபையில் துகிலுரிந்து அவமானப்படுத்தியதைப் பாண்டவர்கள் கண்டிருக்கச் செய்தேயும் கூதிலே தோற்றமையை நினைத்துப் பொறுத்திருந்தாலும் "சங்கசக்ரகதாபாணே! த்வாரகாநிலயாச்யுத!—கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷமாம் சரணாகதாம்" என்று அவள் கண்ணபிரானைச் சரணமடைந்தபின்பு பரிபவிக்கிறவளவில் 'எம்பெருமானடியார்களைப் பிறர் பரிபவப்படுத்தக்கண்டால் சக்தியுள்ளவனாகில் விலக்கவேணும்; சக்தியற்றவனாகில் வருத்தத்துடனே கண்மறையப் போகவேணும்' என்கிற விசேஷசாஸ்த்ரமர்யாதையை நோக்கியாவது, (அல்லது) தங்களிடத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுக்குள்ள ஸ்நேஹபக்ஷபாதங்களை நினைந்து 'அவனைச் சரணமடைந்தவள் பரிபவப்படுவதை நாம் பார்த்திருந்தால் நாளைக்கு அவன்முகத்தில் எப்படி விழிப்பது' என்று அஞ்சியாவது விரைந்தெழுந்து விலக்கவேண்டியிருக்க அது செய்யாமல் ஆடாது அசங்காது உட்கார்ந்திருந்தனர்: ஆகவே, பரிபவப்படுத்தின துர்யோதநாதிகளைப்போலே பரிபவங்கண்டிருந்த இப்பாண்டவர்களையும் தலையறுத்துப் போடவேண்டியிருக்க, அவர்களைமாத்திரம் உயிரோடே வாழும்படி வைத்தது த்ரௌபதிக்கு அபிமதமான திருமங்கலியம் போகாமைக்காக. அவளுடைய விரித்ததலையைக் காணமாட்டாத கண்ணன் வெறுங்கழுத்தை எப்படி காண்பன்? [இத்தால் அடியார்களைப் பரிபவிக்கின்றவர்களைப்போலவே அப்பரிபவத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களும் தண்டிக்கத்தக்கவர் என்பதும், அப்படி தண்டனைக்கு உரியவர் தாமே அடியார்களோடு விடவொண்ணாத ஒரு ஸம்பந்தமுடையவர்களாகில் அவர்களும் அவ்வடியவர்களுக்காக எம்பெருமானாலே ரக்ஷிக்கப்படுவர் என்பதும் விளங்கும்.] இப்படி தலையறுத்துப் போடவேண்டும்படியான குற்றவாளிகளுள் ஒருவனான அர்ஜுநனுக்குக் கண்ணபிரான் இழிதொழில் செய்ததும் பரமரஹஸ்யத்தை உபதேசித்ததுமெல்லாம் இந்த த்ரௌபதிக்காகவேயாம். தூதுபோனது யுத்தத்தை விளைப்பதற்காக. ஸாரதியாய் நின்றது 'ஆயுதமெடுக்கக்கூடாது' என்ற எதிரிகளின் வேண்டுகோளுக்கு உடன்பட்டபடியால் தேர்க்காலாலே அவ்வெதிரிகளை அழிப்பதற்காக. ப்ரபத்தியை உபதேசித்தது—'யுத்தம்பண்ணமாட்டேன்' என்றிருந்தவனை 'உன் சொற்படி செய்கிறேன்' என இசைவித்து யுத்தத்திலே முயல்விப்பதற்காக. ஆக இவை

http://acharya.org

யெல்லாம் செய்தது சரணாகதையான இவளுடைய ஸங்கல்பத்தின்படியே துர்யோதநாதிகளை யொழித்து இவள் கூந்தலை முடியச்செய்வதற்காகவே யென்றதாயிற்று.)

கந்தார்களிற்றுக் கழல்மன்னர் கலங்க—'ஸ்கந்த:' என்னும் வடசொல் 'கந்து' என்று கிடக்கிறது. மதஜலத்தின் நாற்றம் பொருந்திய மத்தகஜங்களின்மேல் ஏறிவீற்றிருப்பவரும் வீரக்கழல்களை யணிந்துள்ளவர்களுமான அரசர்கள் குடல் குழம்பும்படி பாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே வைத்து ஊதினனென்க. "𑌸 𑌘𑍋𑌷𑍋 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑌿 𑌵𑍍𑌯𑌦𑌾𑌰𑌯𑌤𑍍—ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்" என்ற பகவத்கீதை காண்க. **கந்து** என்று கட்டுத்தறிக்கும் பெயராதலால், கட்டுத்தறியையும் முறித்துக் கொண்டு திரிகிற மத்தகஜமென்னவுமாம்.

திருநறையூரிலுள்ள அந்தணர்கள் பிரமருத்ரர்களைப்போலே ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் செய்யவும் வல்லர் என்பது மூன்றாமடியின் கருத்து. "𑌤𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌗𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌾𑌦𑌯𑌃 । 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌲𑍀𑌲𑌾𑌃" என்ற ஆளவந்தார் ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியும், அதற்கு நம்முடைய விவரணங்களும் காண்க. .... (அ)

ஆறும்பிறையுமரவமும் அடம்பும் சடைமேலணிந்து * உடலம்
நீறும்பூசி யேறூருமிறையோன் சென்று குறையிரப்ப *
மாறொன்றில்லா வாசநீர் வரைமார்பகலத் தளித்துகந்தான் *
நாறும்பொழில்சூழ்ந் தழகாய நறையூர்நின்ற நம்பியே. (௯)

ஆறும்	(கங்கையாகிற) நதியையும்
பிறையும்	சந்திரகலையையும்
அரவமும்	ஸர்ப்பங்களையும்
அடம்பும்	அடப்பம் பூவையும்
சடை மேல் அணிந்து	ஜடையின்மீது தரித்துக்கொண்டு
உடலம்	உடம்பிலே
நீறும் பூசி	சாம்பல் பூசிக்கொண்டு
ஏறு ஊரும்	ரிஷபத்தின் மேலேறி நடத்துகின்ற
இறையோன்	சிவபிரான்
சென்று	வந்துகிட்டி
குறை இரப்ப	தனது பிரமஹத்யா சாபம் விடுபடுமாறு பிரார்த்திக்க,
வரை மார்பு அகலத்து	மலைபோன்ற திரு மார்பிடத்தில் நின்றும்
மாறு ஒன்று இல்லா வாசம் நீர்	ஒப்பற்ற பரிமளம் மிக்க (வியர்வை) நீரை
அளித்து	எடுத்துக் கொடுத்து
உகந்தான்	திருவுள்ளமுவந்தபெருமான்
நாறும் பொழில் சூழ்ந்து அழகு ஆய	நறுமணம்மிக்க சோலைகளால் சூழப்பட்ட அழகிய

நறையூர், நின்ற நம்பி—.

* * *—ஒருகாலத்திலே பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கிறதென்று

http://acharya.org

கருதி அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன்கையில் ஒட்டிக்கொள்ளுதலும் அவன் இதற்கு என்ன செய்வதென்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் ‘இப்பாவந்தொலையப் பிச்சையெடுக்க வேண்டும்: என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்’ என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பலதலங்களிலுஞ்சென்று பிச்சையேற்றுக்கொண்டே வருந்தித்திரிந்தும் அக்கபாலம் நிறையாமல் நீங்காதாக, பின்பொருநாள் பதரிகாச்ரமத்தையடைந்து அங்கெழுந்தருளியுள்ள நாராயண மூர்த்தியை வணங்கிப்பிரார்த்தித்தபோது, அப்பெருமான் தனது திருமார்வைக்கீறி நீரையெடுத்து ‘அக்ஷயம்’ என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டகன்றது என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது. 1. “என் எந்தாய்! சாபந்தீரென்ன இலங்கமுதநீர் திருமார்பில் தந்தான்” என்றும் 2. “ஊனமர்சாபம் நீக்காயென்ன வொண்புனலையீந்தான்” என்றும் இவ்வாழ்வார் அருளிச்செய்தலாலும், 3. “கீறுதிங்கள் வைத்தவன் கைவைத்த வன்கபால் மிசை, ஊறு செங்குருதியால் நிறைத்த” என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்தலாலும் திருமார்பில் நீரையெடுத்துப் பிச்சையிட்டுச் சாபந்தீர்த்தனனென்பதும் திருமார்பைக் கீறி ரத்தத்தையெடுத்துப் பிச்சையிட்டனனென்பதும் உண்டென்க. .... (கூ)

நன்மையுடைய மறையோர்வாழ் நறையூர்நின்ற நம்பியை *
கன்னிமதிள்சூழ் வயல்மங்கைக் கலியனொலிசெய் தமிழ்மாலை *
பன்னியுலகில் பாடுவோர் பாடுசாரா பழவினைகள் *
மன்னியுலகமாண்டுபோய் வானோர்வணங்க வாழ்வாரே. (க0)

நன்மை உடைய மறையோர் வாழ்	விலக்ஷணரான வைதிக ப்ராஹ்மணர்கள் வாழப்பெற்ற	உலகில்	இவ்விபூதியிலே
நறையூர்	திருநறையூரிலே	பன்னி	ஆராய்ந்து
நின்ற	நித்யவாஸஞ்செய்தருள் கின்ற	பாடுவார்பாடு	பாடுமவர்களிடத்தில்
நம்பியை	எம்பெருமான் விஷயமாக,	பழவினைகள்	முன்னைத் தீவினைகள்
கன்னி மதின்	அழிவில்லாத மதின்களாலும்	சாரா	அணுகமாட்டா;
வயல்	கழனிகளாலும்		(அன்றியும், அவர்கள்)
சூழ்	சூழப்பட்ட	மன்னி	நெடுநாள் வாழ்ந்திருந்து
மங்கை	திருமங்கைக்குத் தலைவரான	உலகம்	இவ்வுலகை
கலியன்	ஆழ்வார்	ஆண்டு	அரசாட்சிபுரிந்து
ஒலி செய்	அருளிச்செய்த	போய்	(பின்பு, பரமபதத்திலே) சென்று
தமிழ் மாலை	தமிழ்த்தொடையான இத்திருமொழியை	வானோர்	அங்குள்ள நித்யமுக்தர்கள்
		வணங்க	ஆதரிக்கும்படி
		வாழ்வார்	வாழப்பெறுவர்.

1. பெரிய திருமொழி 1—5—8. 2. ஷை 5—9—4.
3. திருச்சந்த விருத்தம் 42.

http://acharya.org

* * *—வேறொரு ப்ரயோஜனத்தையும் விரும்பாமல் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கையாகிற நன்மைபொருந்திய மறையவர்கள் வாழ்கிற திருநறையூரில் நித்யவாஸம் செய்தருளுமெம்பிரான் விஷயமாகக் கலியனருளிச்செய்த இத்திருமொழியை ஆராய்ந்து கற்பார் எவரோ, அவர்களருகிலும் பாவங்கள் அணுககமாட்டா; அவர்கள் இவ்விபூதியிலே நெடுநாள் வாழ்ந்து இஹலோக போகங்களையெல்லாம் புஜித்து, பின்னைப் பரமபதத்தேபோய் நித்யஸூரிகள் ஆதரிக்க நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள் என்று இத்திருமொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

அடிவரவு:—ஆளும் முனி தெள்ளார் ஒளியா வில்லவள்ளி மிடையா பந்து ஆறும் கன்னமை மான்.

ஏழாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறும்பத்து—எட்டாந் திருமொழி,

மான்கொண்டதோல்.

[இதுவும் திருநறையூர் மங்களாசாஸனத் திருப்பதிகம்.]

மான்கொண்டதோல்மார்வின் மாணியாய் * மாவலிமண்
தான்கொண்டு தாளாலளந்த பெருமானை *
தேன்கொண்ட சாரல் திருவேங்கடத்தானை *
நான்சென்று நாடி நறையூரில் கண்டேனே. (க)

மான் கொண்ட தோல்	கிருஷ்ணாஜினத்தை
மார்வில்	மார்பிலே தரித்த
மாணி ஆய்	பிரமசாரியாகி
மாவலி	மஹாபலி பக்கலில்
மண்	பூமியை
தான் கொண்டு	தான் யாசித்துப்பெற்று
தாளால் அளந்த	திருவடிகளாலே ஆக்ரமித்துக்கொண்ட
பெருமானை	பெருமை பொருந்தியவனும்
தேன் கொண்ட சாரல்	தேனையுடைத்தான தாழ்வரைகளையுடைய
திருவேங்கடத்தானை	திருமலையிலெழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானை
நான்	அடியேன்
நாடி சென்று	தேடிக்கொண்டு போய்
நறையூரில்	திருநறையூரில்
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்,

http://acharya.org

* * *—க்ருஷ்ணாஜிநமணிதல் முதலிய ப்ரஹ்மசாரி லக்ஷணங்களையுடையனாய்க்கொண்டு மஹாபலியின் யஜ்ஞவாடியிற்புகுந்து மூவடிமண் இரந்துபெற்று மூவுலகங்களையும் அளந்துகொண்ட பெருமான் அப்போது இழந்தவர்களும் அடிபணிந்து உய்யும் வண்ணம் திருவேங்கடமலையில் வந்துநின்று, அவ்வளவு தூரம்வந்து பணியமாட்டாதவர்களுக்கும் எளியனாய்க்கொண்டு திருநறையூரிலே வந்து ஸேவைஸாதிக்கக் காணப்பெற்றேனென்றாயிற்று.

எம்பெருமானுடைய எந்த அவதாரத்திலும் திருமார்பிலே நாச்சியார் திகழ்வனாதலால் அவளைப் ப்ரகாசப்படுத்திக்கொண்டு யாசிக்கச் சென்றால் ‘ஸாக்ஷாத் லக்ஷ்மீபதி வந்துவிட்டான்’ என்று தெரிந்துகொண்டு மாவலி தானங் கொடுக்கமாட்டானென்று க்ருஷ்ணாஜிநத்தாலே திருமார்பு நாச்சியாரை மறைத்து எழுந்தருளினனென்ப. ப்ரஹ்மசர்யாச்ரமத்திற்கு இது ஒரு அணிகலனாயிருப்பது முணர்க. “அன்று ஞாலமளந்தபிரான் பரன் சென்றுசேர் திருவேங்கட மாமலை” என்று நம்மாழ்வா ரருளிச்செய்ததை அடியொற்றித் “**தாளாலளந்த பெருமானைத் திருவேங்கடத்தானை**” என்றார். உலகளக்கிற வியாஜத்தாலே எல்லாரையும் அடிப்படுத்திக்கொண்ட காலத்தில் இழந்தவர்களும் பேறுபெற்று உய்யுமாறு திருமலையில் நித்யஸந்நிதி பண்ணியிருக்குமவனென்கை.

நான் சென்று நாடி—எம்பெருமான் என்னைப் பெறுதற்குப் பல அவதாரங்களெடுத்துத் தேடித்திரிந்தான்; அக்காலங்களிலே நான் விமுகனாயிருந்திட்டேன்; இன்று நான் அவனைத் தேடித்திரிய வேண்டிற்று; அறுகாதப் பயணம்போய்த் திருமலையுச்சியிலே காணவேண்டாமல், விடாய்த்த விடத்திலே தண்ணீர் குடிக்கப் பெறுமாபோலே திருநறையூரிலே காணப்பெற்றேன். .... (௧)

முந்நீரை முன்னாள் கடைந்தானை * மூழ்த்தநாள்
அந்நீரை மீனாய் அமைத்த பெருமானை *
தென்னாலி மேய திருமாலையெம்மானை *
நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே. (௨)

முன் நாள்	முன்பொருகாலத்தில்	பெருமானை	பெருமை பொருந்தியவனும்
முந்நீரை	ஸமுத்ரத்தை	தென் ஆலி	அழகிய திருவாலிமா நகரில்
கடைந்தானை	கடைந்தவனும்	மேய	நித்யவாஸம் பண்ணுநின்ற
மூழ்த்த நாள்	(உலகத்தைப்) பிரளயங் கொண்ட காலத்தில்	திருமாலை	திருமகள் நாதனுமான
மீன் ஆய்	மத்ஸ்யரூபியாகி	எம்மானை	எம்பெருமானை
அந்நீரை	அந்தப் பிரளயக் கடல் நீரை	நல் நீர் வயல் சூழ்	நல்ல நீர்பாயும் கழனிகளாற் சூழப்பட்ட
அமைத்த	அடக்கின		நறையூரில், கண்டேன்—.

* * *—முன்பு கடலைக்கடைந்து அமுதமெடுத்தளித்து அமரர்களை வாழ்வித்தவனும், பிரளயார்ணவம் பெருகிப் பரந்தபோது மத்ஸ்யாவதாரஞ் செய்தருளிக் காத்தவனுமான எம்பெருமான் திருவாலியிலே காட்சி தந்தருளினன்

http://acharya.org

பண்டு; அவன்றானே இன்று திருநறையூரில் ஸேவைஸாதிக்கருளுகிறானென்கிறார்.

முந்நீர்—ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் [மழைநீர்] என்னும் மூன்றுவகை நீரையுடையது எனப் பண்புத்தொகை யன்மொழியாகிய காரணப் பெயரென்பது பழைய கொள்கை. இதனை மறுத்துக் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்; ஆற்றுநீரென்பது மழைநீரேயாகையாலும், இவ்விரண்டுமில்லாதபோது ஊற்றுநீருமில்லையாகையாலும் இவற்றை முந்நீரென்பது பொருந்தாதென்று சொல்லி வேறுபொருள் கூறுகிறார்;—அதாவது—முச்செயலையுமுடைய நீர் முந்நீரென்பதாம். முச்செயலாவது—மண்ணைப் படைத்தலும் மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம். நீரினின்று நிலம்பிறத்தலின் வேதமோதுதலால் படைத்தலும், நீரின்றி உலகம் நிலையாதாதலால் காத்தலும், இறுதியில் நீரினால் மூடப்பட்டு உலகம் அழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களும் கடலுக்கு உரியனவாம். நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவே. நம் பூருவாசாரியர்கள் மூன்று வகை நீரையுடையதென்னும் பொருளையே ஆதரிப்பர். முன்னீர் என றன்னகரமாகப் பாடமோதி, பழையநீர் என்றுரைப்பாருமுண்டு; ஆதியிற்கடவுள் நீரையே படைத்தாரென்று நூல்கள் கூறும். .... (உ)

தூவாய புள்ளூர்ந்து வந்து துறைவேழம் *
மூவாமை நல்கி முதலை துணித்தானை *
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணனை *
நாவா யுளானை நறையூரில் கண்டேனே. (௩)

தூ வாய	பரிசுத்தமான வாயை யுடைய	முதலை துணித்தானை	முதலையை இரு துண்டமாக்கி யொழித்தவனும்
புள்	பெரிய திருவடியை	தேவாதி தேவனை	நித்ய ஸூரிகளுக்குத் தலைவனும்
ஊர்ந்து	வாஹனமாகக்கொண்டு	செம் கமலம் கண்ணனை	செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களை யுடையனும்
துறை	மடுவின் கரையிலே	நாவாய் உளானை	திருநாவாயென்னும் திருப்பதியிலிருப்பவனுமான எம்பெருமானை
வந்து	வந்து சேர்ந்து		நறையூரில், கண்டேன்—.
வேழம் மூவாமை	ஸ்ரீ கஜேந்திராழ்வான் துன்பமடையாதபடி		
நல்கி	அருள்புரிந்து		

* * *—திருவடிகளில் ஸமர்ப்பிக்கத் தாமரைப்பூத்தேடிப் பொய்கையிலிழிந்து முதலைவாயிலகப்பட்டு 'ஆதிமூலமே!' என்று கதறின கஜேந்திராழ்வானுடைய இடரைத்தீர்ப்பதற்காகப் பெரியதிருவடியின் மீதேறி அப்பொய்கைக் கரைக்கெழுந்தருளித் திருவாழியினால் முதலையைத் துணித்தொழித்து அதனால் தானே தேவாதிதேவனென்று விளங்கப் பெற்றவனும் செந்தாமரைக் கண்ணனுமான பெருமான் பரமபதத்தைவிட்டுத் திருநாவாயிலே வந்து குடிகொண்டிருந்தான்; அவ்விடந்தானும் பரமபதம்போலே தூரஸ்தமாயிருக்கையாலே அணித்

http://acharya.org

தாகத் திருநறையூரிலேவந்து ஸேவைஸாதித்தருளாநின்றான்; காணப்பெற்றே னென்கிறார்.

[தூவாய புள்] 'தூ வாய' என்றும், 'தூ ஆய' என்றும் பிரிக்கலாம். தூ ஆய—வேதஸ்வரூபியாகையாலே ஸ்வத:பரிசுத்தனான என்றபடி. .... (௩.)

ஓடா வரியாய் இரணியனை யூனிடந்த *
சேடார் பொழில்சூழ் திருநீர்மலையானை *
வாடா மலர்த்துழாய் மாலை முடியானை *
நாடோறும் நாடி நறையூரில் கண்டேனே. (௪)

ஓடா அரி ஆய்	காட்டில் நடையாடாத [விலக்ஷணமான] நாஸிம்ஹரூபியாகி	வாடா மலர்	செவ்விகுன்றாத மலர்களை யுடைய
இரணியன்	ஹிரண்யாஸுரனுடைய	துழாய் மாலை	திருத்துழாய் மாலையை
ஊனை	உடலை	முடியானை	திருமுடியிலணிந்துள்ளவனு மான எம்பெருமானை
இடந்த	கிழித்தொழித்தவனும்	நாள் தோறும் நாடி	நித்யமும் தேடித் திரிந்து
சேடு ஆர் பொழில் சூழ்	இளமைபொருந்திய சோலைகளாலே சூழப்பட்ட		நறையூரில், கண்டேன்—.
திருநீர்மலையானை	திருநீர்மலையிலே ஸந்நிதி பண்ணியிருப்பவனும்		

* * *—பரமபக்தனான ப்ரஹ்லாதனுக்கு நேர்ந்த நலிவுகளைப் பொறுத் திருக்கமாட்டாதே நரஸிம்ஹரூபியாய்த் தூணில்தோன்றி இரணியனுடலைப் பிளந்து அந்தவிடாய்தீரத் திருநீர்மலையிலே ஸந்நிதிபண்ணியிருப்பவனாய், ஜகத் ரக்ஷணத்துக்கு முடிகவித்து மாலையிட்டுக் கொண்டிருப்பவனான எம்பெருமானை நாடோறும் தேடித்திரிந்து இன்று திருநறையூரில் காணப்பெற்றேன்.

ஓடா அரி—போரில் பின்வாங்காத ஸிம்ஹம் என்றும், நாட்டில் நடையாடாதே அபூர்வமாகத் தோன்றின ஸிம்ஹம் என்றும் முரைப்ப. .... (௪)

கல்லார் மதிள்சூழ் கடியிலங்கைக் காரரக்கன் *
வல்லாகம் கீள வரிவெஞ் சரந்துரந்த
வில்லானை * செல்வ விபீடணற்கு வேறாக
நல்லானை * நாடி நறையூரில் கண்டேனே. (௫)

கல் ஆர் மதிள் சூழ்	கற்களால் கட்டப்பட்ட மதிள்களால் சூழப்பட்ட	வல் ஆகம் கீள	மிடுக்குடைய சரீரம் தொலையும்படி
கடி	அரணுடைத்தான	வரி	அழகிய
இலங்கை	லங்காபுரியிலுள்ள	வெம்	வெவ்விய
கார்	நீசனான	சரம்	அம்புகளை
அரக்கன்	ராக்ஷஸராஜனுடைய	துரந்த	பிரயோகித்த

வில்லாளை சார்ங்கத்தை யுடையவனும்
செல்வம் ஸ்ரீமானை
விபீடணற்கு விபீஷணாழ்வானுக்கு
வேறாக விலக்ஷணமாக
நல்லானை { அன்பனுமான எம்பெருமானை
நாடி, நறையூரில் கண்டேன்—.

• • •—அஸத்துக்களைத் தண்டித்து ஸத்துக்களைக் கைக்கொள்ளுமியல் வினன் என்பது பிரஸித்தமாகும்படி லங்காதிபதியான ராவணனைக் கொன்றொழித்து ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பரிக்ரஹித்தருளின பெருமானைத் திருநறையூரில் காணப்பெற்றேனென்கிறார்.

செல்வவிபீடணற்கு=இலங்கைச் செல்வம்முழுவதையும் உதறிவிட்டு வந்து சேர்ந்த விபீஷணனைச் செல்வவிபீடணனென்றது அழியாச் செல்வமாகிய பகவத்பக்தியுடைமைபற்றி யென்க. வால்மீகிமுனிவனும், 'இலங்கைச் செல்வ மனைத்தையும் விட்டிட்டுப் புகலற்று வானத்திலேவந்து நின்ற இவ்விபீஷணாழ்வானைப்பற்றிப் பேசும்போது "கஜாரிக்ஷமதஃ ஸ்ரீமாந் - அந்தரிக்ஷகதஃ ஸ்ரீமாந்" என்றார்; அப்போது விபீஷணரிடத்து இருந்த ஸ்ரீயாவது ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயேயாம். இளையபெருமாள் விஷயத்திலும் கஜேந்திராழ்வான் விஷயத்திலும் இங்ஙனமே சொல்லப்பட்டதுண்டு; அயோத்திச் செல்வமனைத்தையும் துறந்து இராமபிரான் பின்னே காட்டுக்குப்புறப்பட்ட இளையபெருமாள் "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ—லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ" எனப்பட்டார்; அப்போது லக்ஷ்மணனுக்கிருந்த லக்ஷ்மியாவது கைங்கரியருசியாகிற லக்ஷ்மியேயாம். முதலையின் வாயிலகப்பட்டுத் துடியாநின்ற கஜேந்திராழ்வான் "ஸ நாகவரஃ ஸ்ரீமாந்-ஸ து நாகவரஃ ஸ்ரீமாந்" என்னப்பட்டான்; அப்போது கஜேந்திராழ்வானுக்கிருந்த ஸ்ரீயாவது-'பறித்த பூ செவ்வி குலைவதற்கு முன்னே எம்பெருமான் திருவடியில் ஸமர்ப்பிக்கப் பெறவேணுமே' என்றிருந்த அபிநிவேசமாகிற செல்வமேயிறே.

[**விபீடணற்கு வேறாக நல்லானை.**] விபீஷணன் வந்துசேர்ந்தபோது அங்குள்ள வாநரமுதலிகள் 'சத்ருபக்ஷத்தில் நின்றும் வருகின்ற இவனைச்சேர்த்துக் கொள்ளலாகாது; சேர்த்துக்கொண்டால் மஹத்தான கெடுதிவிளையும்' என்று சொல்லித் தகைய, 'அவனைக் கைக்கொண்டே தீர்வேன்; ஒருகாலும் கைவிட மாட்டேன்' என்று பெருமாள் அருளிச்செய்ய, 'அப்படியாகில் அடியோங்கள் கிஷ்கிந்தைக்கு மீளுகிறோம்' என்று வாநரமுதலிகள் சொல்ல, 'நீங்கள் இஷ்டப்படி செய்யலாம்; விபீஷணனைக் கைக்கொள்வதை மாத்திரம் ஒருபடியாலும் தவிரமாட்டேன்' என்று சிக்கன அருளிச்செய்து விபீஷணாழ்வானிடத்தில் விசேஷகடாக்ஷம் பண்ணினமை அறியத்தக்கது .... (ரு)

உம்ப ருலகோடு உயிரெல்லாமுந்தியில் *
வம்பு மலர்மேல் படைத்தானை மாயோனை *
அம்பன்ன கண்ணாள் அசோதைதன் சிங்கத்தை *
நம்பனை நாடி நறையூரில் கண்டேனே. (சு)

http://acharya.org

உம்பர் உலகோடு — தேவலோகத்தோடு கூட
உயிர் எல்லாம் — (மற்றுமுள்ள மநுஷ்யாதி) ப்ராணிகளையும்
உந்தியில் — (தனது) திருநாபியிலுள்ள
வம்பு மலர் மேல் — பரிமளம்மிக்க தாமரைப் பூவிலே
படைத்தானை — ஸ்ருஷ்டித்தவனும்
மாயோனை — ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை யுடையவனும்
அம்பு அன்ன கண்ணாள் — அம்புபோன்ற கண்களை யுடையவளான
அசோதை தன் — யசோதைப்பிராட்டியின்
சிங்கத்தை — சிங்கக்குட்டி போன்ற பிள்ளையும்
நம்பியை — ஆச்ரிதர்களுக்கு ஸம்பத் தருந்தவனுமான எம்பெருமானை

நாடி, நறையூரில் கண்டேன்—.

* * *—ப்ராஹ்மாதிகளின் ஸமூஹமிருப்போடே கூட மற்றுமுள்ள மநுஷ்யாதிகளையுமெல்லாம் தன் திருநாபியிலே செவ்விப் பூவின்மேலே தனது ஸங்கல்பத்தாலே யுண்டாக்கியருள்பவனும், இப்படி ஸங்கல்பத்தாலே ஸர்வத்தையும் படைக்கவல்லவனை யிருக்கச்செய்தேயும் தான் மெய்யேவந்து பிறந்தவனை பெருமானைத் திருநறையூரில் காணப்பெற்றேன். .... (கூ)

கட்டேறு நீள்சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை * மெய்யமமர்ந்த பெருமானை *
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய் * வண்துவரை
நட்டானை நாடி நறையூரில் கண்டேனே. (எ)

கட்டு ஏறு — காவல்மிக்கிருப்பதும்
நீள் சோலை — நீண்ட சோலைகளை யுடையதுமான
காண்டவத்தை — காண்டவமென்னும் வனத்தை
தீ மூட்டி விட்டானை — அக்நிக்கு இரையாக்கினவனும்
மெய்யம் அமர்ந்த பெருமானை — திருமெய்யத்தில் நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமியும்
மட்டு ஏறு கற்பகத்தை — தேன் மிகுந்த கல்பவிருக்ஷத்தை
மாதர்க்கு ஆய் — (ஸத்யபாமைப்) பிராட்டிக்காக
வண் துவரை — அழகிய த்வாரகாபுரியில்
நட்டானை — (கொணர்ந்து) ஸ்தாபித்தவனுமான எம்பெருமானை

நாடி, நறையூரில் கண்டேன்—.

* * *—காண்டவமென்பது தேவேந்திரனுக்கு உரியதாய்ப் பூலோகத்திலிருந்ததொரு காடு. ஒருநாள் அக்நிபகவான் ஒரு அந்தண வேடம்பூண்டு அர்ஜுநனும் கண்ணபிரானும் கூடியிருக்குமிடத்திலே வந்துசேர, அவ்வந்தணனைக் கிருஷ்ணார்ஜுநர்கள் நன்கு உபசரிக்க, அவன் உணவுவேண்ட, 'வேண்டிய உணவையளிப்போம்' என்று அவ்விருவரும் உறுதிமொழிகூற, உடனே அவ்வந்தணன் தான் இன்னானென்று உண்மைதெரிவித்துக் காண்டவவனத்தைத் தனக்கு இரையாக அளிக்குமாறு வேண்ட, அவர்களும் 'பல கொடிய அசுரர்களும் அரக்கர்களும் துஷ்டமிருகங்களும் நிரம்பியிருக்கு மிந்தக்காடு அழிந்

தொழிவது நன்றே' என்று நிச்சயித்து அக்நிபகவானை நோக்கி 'அங்ஙனமே உண்பாயாக' என்று அநுமதி தந்ததின்பேரில் அக்நி அக்காடு முழுவதையும் ஆக்கிரமித்துப் பூர்ணத்ருப்தியாக உண்டனன் என்ற கதை மஹாபாரதத்தில் ஆதிபருவத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. * மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தவனை கண்ணபிரான் தனது அன்பனான இந்திரன் வருந்தும்படி அவனது காட்டையழிக்க அநுமதித்தது அவதார ப்ரயோஜனம் நிறைவேறுதற்காகவென்க; அக்காட்டிலுள்ள அளவற்ற துஷ்டஜந்து ஸமூஹங்களைத் தொலைத்தொழிக்கும் முகத்தால் பூமியின் பாரத்தைக் குறைத்தருளின னென்றுணர்க. இவ்வனத்தின் தன்மையைப்பற்றி வில்லிபுத்தூரார் பாரதத்தில் காண்டவதகனச்சருக்கத்தில்—"மிடைந்த நால்வகை மிருகங்களு நெடுவெற் பினங்களுந்துன்றி, அடைந்த தானவரரக்கர் பேருரகருக்காலயங்களுமாகிக், குடைந்துசோரி கொள்வாளுகிரி முதற்கொடு விலங்கினமிக்குக், கடைந்த கூரெயிற்றுல தக்கனும் வாழ் கானனமதுகண்டீர்" என்றுள்ள செய்யுள் இங்குக் கூறிக்கொள்ளத்தக்கது.

[மட்டேறு கற்பகத்தை இத்யாதி.] தேவர்களைக் குடியிருக்கவொட்டாமல் அலைக்கழித்த நரகாசுரனைத் தேவேந்திரனது வேண்டுகோளின்படி ஸ்ரீகிருஷ்ணன் ஸத்யபாமையோடு சென்று கொன்று, அவ்வசுரன் வலியக்கவர்ந்து சென்றிருந்த அத்தேவேந்திரனது தாயான அதிதிதேவியின் காதணியைக்கொண்டு வந்து கொடுப்பதற்காக அந்த ஸத்யபாமையுடனே ஸ்வர்க்கலோகத்துக்குப் போயினன்; அங்கு இவர்களை வரவேற்பதற்காகத் தேவேந்திரன் தனது மனைவியான இந்திராணியுடனே வந்தான்; அப்போது ஸத்யபாமையானவள் அவ்விந்திராணி தன் முடியில் இனிய மணமுள்ள பாரிஜாத புஷ்பம் சூடியிருந்ததைக்கண்டு அத்தகைய மலர் தனக்கு வேண்டுமென்று விரும்பினள்; தங்களுக்குக் குடியிருப்பை யுண்டாக்கின அந்த ஸ்ரீக்ருஷ்ண ஸத்யபாமைகளின் விஷயத்தில் குறிப்பறிந்து நடப்பதே தகுதியாயிருக்கவும் அவ்வாறு செய்யாமற்போனாலும் கேட்டபின்பாவது அம்மலரைக்கொடுக்கலாமே; அதுவுஞ் செய்யாமல், அப்போது ஸத்யபாமைக்கு உதவுதற்கு ஏற்ற பாக்யமற்றவளாதலாலும் அம்மலருக்கு உரிய விருக்ஷத்தையே இழக்கவேண்டிய காலம் நேர்ந்தமையாலும் ஸத்யபாமை கேட்டதற்கு இந்திராணி 'இம்மலர் தேவர்கட்குத் தகுமேயல்லாமல் மானிடப்பெண்ணாகிய உனக்குத் தகாது' என்றனள். அதுகேட்ட அப்பிராட்டி தனது விருப்பத்தை ஸ்ரீகிருஷ்ணன்பால் தெரிவிக்க, அப்பிரான் அப்போதே கருடனைக்கொண்டு அந்தப் பாரிஜாத விருக்ஷத்தை வேரோடு பிடுங்கி த்வாரகையில் சேர்ப்பித்து ஸத்யபாமையின் வீட்டில் நடுவித்தனன் என்ற வரலாறு அறிக.

இப்படி ஸர்வசக்தனான எம்பெருமானை முன்பு திருமெய்யத்தில் ஸேவித்தேன்; இன்று திருநறையூரில் ஸேவிக்கப்பெற்றேனென்றாராயிற்று. (௭)

http://acharya.org

மண்ணின் மீபாரம் கெடுப்பான் மறமன்னர் *
பண்ணின் மேல்வந்த படையெல்லாம் பாரதத்து *
விண்ணின் மீதேற விசயன்தேரூர்ந்தானை *
நண்ணி நான்நாடி நறையூரில் கண்டேனே. (௭)

மண்ணின் மீ பாரம்	பூமியின்மீது உண்டான சுமைகளை	விண்ணின் மீது ஏற	வீரஸ்வர்க்கம்போய்ச் சேரும்படியாகவும்
கெடுப்பான்	தொலைப்பதற்காகவும்	பாரதத்து	பாரதப்போரில்
மறம் மன்னர்	மாற்றரசர்களது	விசயன் தேர் ஊர்ந்தானை	அர்ஜுனனுடைய தேரை நடத்தினவனை
பண்ணின் மேல் வந்த படை எல்லாம்	ஒழுங்காக எதிர்த்து வந்த எல்லாச் சேனைகளும்	நான் நண்ணி நாடி	நான் ஆசைப்பட்டுத்தேடி
			நறையூரில், கண்டேன்—.

* * *—எல்லாவற்றையும் பொறுத்திருக்கக்கூடியவளாய் 'ஸர்வம் ஸஹா' என்று பெயருடையளான பூமிப்பிராட்டி 'அந்தோ! என்னால் பாரம் பொறுக்கப் போகிறதில்லையே!' என்ன, அப்படி பொறுக்கவொண்ணாத பாரமாயிருந்த துர்ஜனங்களைத் தொலைப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணனாய்த் திருவவதரித்து அர்ஜுநனுக்குத் தேர்ப்பாகனாயிருந்து பாரதப்போரை நடத்தி கர்ணன் துரியோதனன் முதலிய பல்லாயிர மரசர்கள் கைபுமணியும் வகுத்து மேலிட்டு வந்து படைகளெல்லாம் திரும்பி ஊர்போய்ச்சேராமல் வீரஸ்வர்க்கமடையும்படி செய்தருளின பெருமானைத் திருநறையூரில் ஸேவிக்கப்பெற்றேன். .... (௮)

பொங்கேறு நீள்சோதிப் பொன்னாழி தன்னோடும் *
சங்கேறு கோலத் தடக்கைப் பெருமானை *
கொங்கேறு சோலைக் குடந்தைக் கிடந்தானை *
நங்கோனை நாடி நறையூரில் கண்டேனே. (௯)

பொங்கு ஏறு	மேன்மேலும் அதிசயித்து வருகிற	கை	திருக்கைகளை யுடையவனும்
நீள் சோதி	அளவற்ற தேஜஸ்ஸை யுடைய	பெருமானை	பெருமை பொருந்தியவனும்
பொன் ஆழி தன்னோடும்	அழகிய திருவாழி யாழ்வானும்	கொங்கு ஏறு சோலை	தேன் மிகுந்திருக்கிற பொழில்களை யுடைய
சங்கு	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும்	குடந்தை	திருக்குடந்தையில்
ஏறு	குடிகொண்டிருக்கப் பெற்ற	கிடந்தானை	பள்ளிகொண்டிருப்பவனுமான
கோலம்	அழகிய	நம் கோனை	நம் பெருமானை
தட	பெரிய		நாடி, நறையூரில் கண்டேன்—.

* * *—ஆற்றுப் பெருக்குப்போலே மேன்மேலும் மிக்கு வளராநின்ற எல்லையில்லாத தேஜஸ்ஸையுடைய திருவாழியாழ்வானோடுகூட ஸ்ரீபாஞ்சஜந்

http://acharya.org

யாழ்வானுக்கும் குடியிருப்பான அழகிய திருக்கைகளையுடையனைத் திருக்குடந்தையிற் கண்வளர்ந்தருள்பவனை எம்பெருமானைத் திருநறையூரிலே காணப்பெற்றேன். .... (௯)

மன்னு மதுரை வசுதேவர் வாழ்முதலை *
நன்னறையூர் நின்ற நம்பியை * வம்பவிழ்தார்க்
கன்னவிலும் தோளான் கலியனொலி வல்லார் *
பொன்னுலகில் வானவர்க்குப் புத்தேளி ராகுவரே. (௧௦)

மன்னு	(பகவத்ஸம்பந்தம் ஒரு நாளும் மாறாமல்) நித்யமாயிருக்கிற
மதுரை	வடமதுரையில்
வசுதேவர் வாழ் முதலை	வசுதேவருடைய வாழ்வுக்கு மூலகந்தமாக வந்து பிறந்தவனை
நல் நறையூர் நின்ற நம்பியை—;	
வம்பு அவிழ் தார்	பரிமளம் விளங்குகின்ற மாலையையுடையராய்
கல் நவிலும் தோளான்	மலையென்று சொல்லத் தகுந்த புஜங்களையுடையரான
கலியன்	திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த இத்திருமொழியை
வல்லார்	ஓதவல்லவர்கள்
பொன் உலகில்	பரமபதத்திற் சென்று
வானவர்க்கு	அங்குள்ள நித்யஸூரிகளுக்கு
புத்தேளிர் ஆகுவர்	பூஜ்யராகப் பெறுவர்.

* * *—வடமதுரையில் வசுதேவருடைய வாழ்ச்சிக்கு மூலகாரணமாகத் திருவவதரித்தவனும் அவ்வவதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் விளங்கும்படி திருநறையூரில் ஸேவைஸாதிப்பவனுமான எம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய இத்திருமொழியை அதிகரிக்கவல்லவர்கள் பரமபதத்திற்சென்று அங்குள்ள நித்யஸூரிகளுக்குத் தெய்வங்களாகப் பெறுவர் என்று இத்திருமொழி கற்றார்க்குப் பலனருளிச் செய்தாராயிற்று.

மன்னு மதுரை—பகவத் ஸம்பந்தம் ஒருநாளும் மாறாமல் நித்யமாயிருக்கப் பெற்ற மதுரை என்றபடி; முதலில் ஸ்ரீவாமநமூர்த்தி நெடுநாளளவும் தவம் புரிந்த ஸித்தாச்ரமமாயிருந்தும், பிறகு ஸ்ரீசத்ருக்நாழ்வான் ப்ரதிபக்ஷ நிரஸநம் பண்ணி அரசாட்சிபுரிந்த இடமாயிருந்தும், பின்பு ஸ்ரீக்ருஷ்ணபகவான் திருவவதரித்த விடமாயும் ஆகவிப்படி பகவத்ஸம்பந்தம் இடையறாது அநுவர்த்திக்கப் பெற்ற வூர்.

புத்தேளிர்—தேவதைகள் என்றபடி. திருவாசிரியத்தில் "நான்முகப் புத்தேள்" என்ற நம்மாழ்வார் ப்ரயோகமுங் காண்க. நித்யஸூரிகளால் கொண்டாடப்படுவர்களென்றபடி. .... (௧௦)

அடிவரவு:- மான் முந்நீர் தூவாய ஓடா கல் உம்பர் கட்டேறு மண்ணின் பொங்கு மன்னு பெடை.

எட்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்து—ஒன்பதாந் திருமொழி,

பெடையடர்த்தமடவன்னம்.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதிகம்.]

பெடையடர்த்த மடவன்னம் பிரியாது * மலர்க்கமலம்
மடலெடுத்துமதுநுகரும் வயலுடுத்த திருநறையூர் *
முடையடர்த்தசிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன் *
இடர்கெடுத்த திருவாளன் இணையடியே யடைநெஞ்சே!. (க)

பெடை அடர்த்த	பேடையோடுகூடின
மட அன்னம்	அழகிய ஹம்ஸபக்ஷியானது
பிரியாது	அப்பேடையைச் சற்றும் விட்டுப் பிரியாமல் உடனிருந்து
கமலம் மலர்	தாமரைப்பூவில்
மடல் எடுத்து	இதழ்களைச் சுழற்றிவிட்டு
மது நுகரும்	தேனைப் பருகப்பெற்ற
வயல்	கழனிகளாலே
உடுத்த	சூழப்பட்ட
திரு நறையூர்	திருநறையூரி லெழுந்தருளி யிருப்பவனும்,—
முடை அடர்த்த	முடைநாற்றம் மிகுந்த
சிரம்	பிரமகபாலத்தை
ஏந்தி	கையிற்கொண்டு
மூ உலகும்	மூன்று லோகங்களிலும்
பலி திரிவோன்	பிச்சையெடுத்துத் திரிந்த சிவபிரானது
இடர்	சாபத்தை
கெடுத்த	நீக்கினவனுன
திரு ஆளன்	திருமாலினுடைய
இணை அடியே	உபயபாதங்களையே
நெஞ்சே அடை	மனமே! அடைந்திடு.

* * *—இத்திருமொழியில் பாட்டுக்தோறும் நெஞ்சை விளித்துத் திருநறையூர் நம்பியின் திருவடிகளைவணங்குமாறு உபதேசிக்கிறூர்.

பிரமனது சிரமொன்றைக் கிள்ளி அதனால் பிரமஹத்தி சாபமடைந்து கையுங் கபாலமுமாய்த் திரிந்து பிச்சையெடுத்த பரமசிவனுடைய அந்த ஆர்த்தியை அகற்றியருளின திருமால் திருநறையூரில் எழுந்தருளியுள்ளான்; அவ்வூர் எப்படிப்பட்ட தென்னில்; அன்னப்பறவைகள் பேடைகளைவிட்டுப் பிரியாமல் தாமரைப்பூக்களிலே கூடியிருந்து மதுபானம் பண்ணப்பெற்ற வயல்களாற் சூழப்பட்டது; அவ்வெம்பெருமானுடைய திருவடியிணையை நெஞ்சே! அடைந்திடு.

பெடை அடர்த்த மடவன்னம்=பேடைகள் பிரணயகலஹம் செய்யப்பெற்ற மடவன்னம் என்று முரைக்கலாம். அடர்த்தல்—நெருங்கியிருத்தலும், சண்டை செய்தலும்.

http://acharya.org

முடையடர்த்த = நூர்நாற்றமுடைய என்றபடி. சிரம்—'ஶிரஸ்' என்னும் வடசொல்லின்விகாரம். பலி—வலி ; பிச்சை. .... (௧)

கழியாருங் கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி *
வழியார முத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர் *
பழியாரும் விறலரக்கன் பருமுடிக ளவைசிதற *
அழலாரும் சரந்துரந்தான் அடியிணையே அடைநெஞ்சே !. (௨)

கழி ஆரும்	உப்புக்கழிகளிலே நிரம்பியிருக்கின்ற	திரு நறையூர்	திருநறையூரில்,—
கனம் சங்கம்	கனத்த சங்குகளானவை	பழி ஆரும்	மிகுந்த அபவாதத்தையுடையனாய்
எங்கும்	எல்லாவிடங்களிலும்	விறல்	பலிஷ்டனான
கலந்து	வந்துசேர்ந்து	அரக்கன்	இராவணனுடைய
நிறைந்து	வரிசை வரிசையாக இருந்து	பரு முடிகள் அவை சிதற	பருத்த (பத்துத்) தலைகளும் சிதறும்படியாக
ஏறி	பாய்ந்து	அழல் ஆரும்	நெருப்புப்போன்ற
வழி ஆர	வீதிகள் நிறையும்படியாக	சரம்	அம்புகளை
முத்து	முத்துக்களை	துரந்தான்	பிரயோகித்த பெருமானுடைய
ஈன்று	ஈன்று		அடி இணையே, நெஞ்சே ! அடை—.
வளம் கொடுக்கும்	(இப்படி) செல்வமளிக்கப்பெற்ற		

* * *—தீயசெயல்களினால் பழிமிகுந்த இராவணனுடைய பத்துத்தலைகளும் பாறிப்போம்படி அம்புசெலுத்தின பெருமான் இன்னமும் அப்படிப்பட்ட ஆஸுரப்ரக்ருதிகளை யழிப்பதற்காகத் திருக்கோயில் கொண்டிருக்குமிடம் திருநறையூர் ; இவ்வூர்த் திருவீதிகளில் பொன்னியாறு பெருகும்போது கொழிக்கப்படும் சங்குகள் வழியெங்கும் முத்துக்களைப் பிரஸவித்துச் செல்வம்நிறைந்திருக்கின்றது ; இப்படிப்பட்ட திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கு மெம்பெருமானுடைய அடியிணைகளை யடைவதே நெஞ்சுக்குக் காரியமாக வேணும்.

கனசங்கம்=வடமொழித் தொடர் ; ஘நஶங்க:. ... (௨)

குலைகொண்ட பலங்கனிகள் தேன்பாய * கதலிகளின்
திரைகொண்ட பழங்கெழுமு திகழ்சோலைத் திருநறையூர் *
மலைகொண்ட வண்ணத்தன் பின்தோன்றல் * மூவுலகோடு
அளைவெண்ணெ யுண்டான்தன் அடியிணையே அடைநெஞ்சே !. (௩)

குலை கொண்ட	பல குலைகளையுடைத்தான	திரை கொண்ட	பருத்திருக்கின்ற
பலம் கனிகள்	பலாப்பழங்களில் நின்றும்	பழம்	பழங்கள்
தேன் பாய	தேன் பெருகப்பெற்றும்,	கெழுமு	நெருங்கப்பெற்று மிருக்கிற
கதலிகளின்	வாழைமரங்களின்		

http://acharya.org

திகழ் சோலை	விளங்குகின்ற சோலைகளை யுடைய
திரு நறையூர்	திருநறையூரில்,—
வளை கொண்ட வண்ணத்தன்	சங்குபோல் வெளுத்த நிறமுடையனான பலராமனுடைய
பின் தோன்றல்	தம்பியாயும்
மூவுலகோடு	மூன்று லோகங்களையும்
அளை வெண்ணெய்	தயிர் வெண்ணெயையும்
உண்டான் தன்	அமுது செய்தவனுமாயிருக்கிற எம்பெருமானுடைய

அடி இணையே நெஞ்சே! அடை—.

* * *—பலபலசுளைகள் நிரம்பியிருக்கின்ற பலாப்பழங்களில் நின்றும் தேனொழுகவும், வாழைப்பழக்குலைகள் திரள்திரளாகத் தொங்கவும் பெற்ற சோலைகளையுடைய திருநறையூரில் எழுந்தருளியிருக்கு மெம்பிரானுடைய அடியிணையையே அடைந்திடு நெஞ்சே!.

வளைகொண்டவண்ணத்தன் பின்தோன்றல்=பலராமனுடைய திருமேனி நிறம் வெளுப்பாதலால் 'வளைகொண்ட வண்ணத்தன்' என்று பலராமனைச் சொன்னபடி. 1. "முன்னலோர் வெள்ளிப்பெருமலைக் குட்டன் மொடுமொடு விரைந்தோடப், பின்னைத் தொடர்ந்ததோர் கருமலைக்குட்டன்" என்ற அருளிச் செயலுங்காண்க. .... (௩.)

துன்றொளித் துகிற்படலம் துன்னியெங்கும் மாளிகைமேல் *
நின்றார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூர் *
மன்றாரக் குடமாடி வரையெடுத்து மழைதடுத்த *
குன்றாரும் திரள்தோளன் குரைகழலே அடைநெஞ்சே! (௪)

துன்று	நெருங்கியும்
ஒளி	ஒழுங்குபெற்று மிருக்கிற
துகில் படலம்	த்வஜபடங்களின் திரள்கள்
மாளிகை மேல்	மாளிகைகளின் மேலே
எங்கும்	எல்லாவிடங்களிலும்
துன்னி	நிபிடமாய்
ஆர நின்று	பரம்பியிருந்து
வான் மூடும்	ஆகாசத்தை மறையா நின்றதாய்
நீள் செல்வம்	நிறைந்த செல்வத்தை யுடையதான

திரு நறையூர்—;

மன்று ஆர	வெளியிலெங்கும்
குடம் ஆடி	குடக்கூத்தாடினவனும்
வரை எடுத்து	கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்தி
மழை தடுத்த	மழையைத் தடைசெய்தவனும்
குன்று ஆரும் திரள் தோளன்	மலைபோன்று திரண்ட திருத்தோள்களை யுடையனுமான பெருமானுடைய
குரை கழலே	ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடிகளையே

நெஞ்சே! அடை—.

* * *—நெருங்கி ஒழுங்காயிருந்துள்ள துகில்களாலே சமைந்த கொடிகளானவை மாளிகைகளின் மேலெங்கும் பரம்பி ஆகாசம் தோற்றாதபடி மறைக்கப்

1. பெரியாழ்வார் திருமொழி I—7—5.

http://acharya.org

பெற்றுச் செல்வமிகுந்த திருநறையூரில், முன்பு கிருஷ்ணாவதாரத்தில் குடக் கூத்தாடின சிரமமும் கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையை யேந்திநின்ற சிரமமுந்தீர எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய நூபுராலங்க்ருதமான திருவடிகளைத் தொழு நெஞ்சே!.

திருமாளிகைகளில் த்வஜபடங்கள் கட்டியிருப்பதாக வருணித்தல் செல்வ மிகுதியை விளக்குமென்க.

குரைகழல் = இரட்டுறமொழிதலாகக் கொண்டு குரைகழலையுடைய கழல் என்க. கழல்—காலிலணியும் ஆபரணத்துக்கும் காலுக்கும் பெயர். குரைகழல்—வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. .... (௪)

அகிற்குறடுஞ் சந்தனமும் அம்பொன்னு மணிமுத்தும் *
மிகக்கொணர்ந்து திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர் *
பகல்கரந்த சுடராழிப் படையானிவ்வுலகேழும் *
புகக்கரந்த திருவயிற்றன் பொன்னடியே அடைநெஞ்சே! (௫)

அகில் குறடும்	அகில் கட்டைகளையும்
சந்தனமும்	சந்தனக்கட்டைகளையும்
அம் பொன்னும்	அழகிய பொன்களையும்
அணி முத்தும்	அழகிய முத்துக்களையும்
திரை	அலைகளானவை
மிக கொணர்ந்து	மிகுதியாகத் திரட்டிக் கொண்டுவந்து
உந்தும்	தள்ளுகின்ற
வியன் பொன்னி	ஆச்சரியமான பொன்னியாற்றையுடைய
	திருநறையூர்—;

பகல் கரந்த	(பாரதப்போரில்) ஸூரியனை மறைத்த
சுடர் ஆழி	உஜ்வலமான சக்கரத்தை
படையான்	ஆயுதமாகவுடையனும்
இ உலகு ஏழும்	இவ்வுலகங்களெல்லாவற்றையும்
புக கரந்த	உள்புகச்செய்து மறைத்துவைத்த
திரு வயிற்றன்	திருவயிற்றையுடையனுமான பெருமானுடைய
பொன் அடியே	அழகிய திருவடிகளையே
	நெஞ்சே! அடை—.

* * *—அகிற்கட்டைகள் சந்தனக்கட்டைகள் பொன்கள் முத்துக்கள் முதலான சிறந்தபொருள்களை மிகுதியாகக் கொழித்துக்கொண்டு பெருகுகின்ற பொன்னியாறு பாயப்பெற்ற திருநறையூரில், பண்டு பாரதப்போரில் (அர்ஜுந புத்ரனான) அபிமந்யுவைக் கொன்ற ஜயத்ரதனை அர்ஜுநனால் முடிப்பதற்கு உபாயமாக ஆழியால் இரவியை மறைத்தவனும், மற்றொருகால் பிரளயப் பெருங் கடல் கொள்ளாதபடி உலகங்களைத் திருவயிற்றில்வைத்து நோக்கினவனுமான பெருமான் எழுந்தருளியுள்ளான்; அவனுடைய பொன்னடியே அடை நெஞ்சே!.

"பகற்கரந்த சுடராழிப்படையான்" என்றவிடத்து வியாக்கியான வாக்கியம் வருமாறு:—"நிரவதிக தேஜஸ்ஸாலே தேஜஃபதார்த்தத்தை மறைத் தானாய்த்து. ஆதித்யனுடைய தேஜஸ்ஸு கண்ணாலே முகக்கலாம்; திருவாழி

யாழ்வானுடைய தேஜஸ்ஸை கண்டுகொண்டு முகக்கவிழ்ந்து படிந்து பிருக்கை யாலே இருண்டுகொட்டிற்றாய்த்து.'' என்று. .... (௫)

பொன்முத்துமரியுகிரும் புழைக்கைம்மா கரிக்கோடும் *
மின்னத் தண்திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர் *
மின்னொத்த நுண்மருங்குல் மெல்லியலைத் திருமார்பில் *
மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியே அடைநெஞ்சே! (௬)

மின்ன	(மேற்கே) மின்னல் கண்டவாறே,
பொன்	பொன்களையும்
முத்தும்	முத்துக்களையும்
அரி உகிரும்	சிங்கங்களின் நகங்களையும்
புழை கை மா கரி கோடும்	த்வாரத்தையுடைய துதிக் கையையுடைத்தான பெரிய யானைகளின் கொம்புகளையும்
தண் திரை உந்தும்	குளிர்ந்த அலைகளின் முக மாகக் கொழிக்கின்ற

வியன் பொன்னி, திரு நறையூர்—;

மின் ஒத்த நுண்	மின்னல் போன்று அதிஸூக்ஷ்மமான
மருங்குல்	இடையையுடையளாய்
மெல் இயலை	ஸௌகுமார்யத்தை ஸ்வபாவமாகவுடையளான பிராட்டியை
திரு மார்பில்	திருமார்பிலே
மன்ன	பொருந்தும்படியாக
தான் வைத்து உகந்தான்	தரித்துக்கொண்டு திருவுள்ள முவந்திருக்கிற பெருமானுடைய
மலர் அடியே	திருவடித்தாமரைகளையே

நெஞ்சே! அடை—.

* * *—சிங்கங்கள் யானைகளோடே பொருது அவற்றின் கும்பஸ்தலங்களைக் கிழித்து உதிர்த்தமுத்துக்களையும் மலைகளிலுண்டான பொன்களையும் சிங்கநகங் களையும் யானைக்கொம்புகளையும் நீர்வாக்காலே கொணர்ந்து தள்ளிப் பெருகுகின்ற பொன்னியாறு பாயப்பெற்ற திருநறையூரில், * அகலகில்லேனிறையுமென் றலர் மேல் மங்கையுறைமார்பன் வாழ்கின்றான்; அன்னவனுடைய பொன்னடியே அடைநெஞ்சே!. .... (௬)

சீர்தழைத்த கதிர்ச்செந்நெல் செங்கமலத் திடையிடையின் *
பார்தழைத்துக் கரும்போங்கிப் பயன்விளைக்கும் திருநறையூர் *
கார்தழைத்த திருவுருவன் கண்ணபிரான் விண்ணவர்கோன்
தார்தழைத்ததுழாய் முடியன் தளிரடியே அடைநெஞ்சே! (௭)

சீர் தழைத்த கதிர்	அழகுமிக்க கதிர்களை யுடைய
செந்நெல்	செந்நெற்பயிர்களினுடை யவும்

(அவற்றையடுத்து முளைத்த)

செங் கமலம்	செந்தாமரைகளி னுடையவும்
இடை இடையில்	நடு நடுவே
கரும்பு	கரும்புகளானவை
ஓங்கி பார் தழைத்து	உயரவெழுந்து தரையிலே படியவளர்ந்து
பயன் விளைக்கும்	பலன்களைக் கொடுக்கப் பெற்ற

http://acharya.org

திரு நறையூர்—;

கார் தழைத்த திரு உருவன்	காளமேகம்போன்ற திருமேனியை யுடையவனும்
விண்ணவர் கோன்	தேவாதி தேவனும்
தார் தழைத்த துழாய் முடியன்	பூக்கள் நிறைந்த திருத்துழாய்மாலையைத் திருமுடியிலுடையவனுமான
கண்ணபிரான்	கண்ணபிரானுடைய
தளிர் அடியே	தளிர்போன்ற திருவடிகளையே

நெஞ்சே! அடை—.

* * *—கரும்புவிளையும் நிலத்திலே கரும்பங்கட்டைகளை வெட்டிவிட்டுச் செந்நெலை நடுவர்கள்; செந்நெலுக்குக் களையாக இடையிலே தாமரை விளையும்; முன்பு வெட்டிப்போட்ட கரும்பங்கட்டைகளும் பழைய வாஸனையாலே எழும்; செந்நெற்பயிர் ஓங்கவேணுமென்று க்ருஷிபண்ணினால் அதற்குமுன்னே கரும்புகள் ஓங்கிப் பயன்விளைக்கும்படியான நிலவளம் பொருந்திய திருநறையூரில் எழுந்தருளியுள்ள காளமேகத் திருவுருவனைப் நித்யஸூரிநாதனைத் துழாய்முடியனை எம்பெருமானுடைய பாதபல்லவங்களைப் பணி நெஞ்சே!. .... (எ)

குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும் *
தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் திருநறையூர் *
மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடம் மிகமன்னி *
நிலையார நின்றான்தன் நீள்கழலே யடைநெஞ்சே! (அ)

குலை ஆர்ந்த பழுக் காயும்	குலைகுலையாக நிறைந்து பழுத்த காய்களும்
பசுங் காயும்	பழுக்கப்போகிற காய்களும்
பாளை முத்தும்	பாளைகளிலுண்டான முத்துக்களும்
தலை ஆர்ந்த	தலைகளிலே நிறைந்திருக்கப் பெற்ற
இளை கமுகின்	இளைய பாக்குமரங்களை யுடைய

தட சோலை திரு நறையூர்—;

மலை ஆர்ந்த கோலம் சேர்	மலைபோன்று அழகு பொருந்திய
மணி மாடம்	மணிமாடக் கோயிலில்
மிக மன்னி	மிகவும் பொருந்தி
நிலை ஆர நின்றான் தன்	ஸ்திரமாக நிற்கும் பெருமானுடைய
நீள் கழலே	நீண்ட திருவடிகளையே

நெஞ்சே! அடை—.

* * *—திருநறையூர்ச் சோலைகளில் இளைய பாக்குமரங்கள் நிரம்பியுள்ளன; அவற்றின் தலைகளிலே நன்றாகப்பழுத்தகாய்களும் பழுக்கப்போகிற காய்களும் பாளைமுத்துக்களும் குலைகுலையாகக் குவிந்துகிடக்கின்றன. இப்படிப்பட்ட சோலைவளம் வாய்ந்த திருநறையூரில் ஒரு மலைபோன்று விளங்காநின்ற மணிமாடக்கோயிலில் ஸ்தாவர ப்ரதிஷ்டையாக நின்றருளு மெம்பெருமானுடைய நீள்கழலே யடைநெஞ்சே!.

கமுகு—'க்ரமுக:' என்னும் வடசொல் விகாரம்.

மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடம்—"இரும்பொழில்சூழ் மன்னு மறையோர் திருநறையூர் மாமலைமேல் பொன்னியலுமாடம்" என்றார் பெரிய திருமடலிலும். .... (அ)

http://acharya.org

மறையாரும் பெருவேள்விக் கொழும்புகைபோய் வளர்ந்தெங்கும் *
நிறையார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூர் *
பிறையாரும் சடையானும் பிரமனுமுன் தொழுதேத்த *
இறையாகி நின்றான்தன் இணையடியே யடைநெஞ்சே! (கூ)

மறை ஆரும்	வேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட
பெரு வேள்வி	பெரிய யஜ்ஞங்களிலுண்டான
கொழும் புகை	நல்ல புகையானது
வளர்ந்து போய்	மேலே கிளம்பிப்போய்
எங்கும்	எல்லாவிடங்களிலும்
நிறை ஆர	நிறைந்திருந்து
வான் மூடும்	ஆகாசத்தைமறைக்கப்பெற்ற

நீள் செல்வத் திருநறையூர்—;

பிறை ஆரும் சடையானும்	சந்திரகலையை யுடைய சடைமுடியை யுடையனான சிவனும்
பிரமனும்	நான்முகனும்
முன்	முன்னே நின்று
தொழுது ஏத்த	வணங்கித்துதிக்கும்படி
இறை ஆகி நின்றான் தன்	ஸ்வாமியாயெழுந்தருளியிருக்கும்பெருமானுடைய

இணை அடியே நெஞ்சே அடை—.

* * *—யஜ்ஞயாகங்களை யநுஷ்டிக்கும் வைதிக ப்ராஹ்மணர்கள் வாழ்கிறவிடம் திருநறையூர் என்பது முன்னடிகளின் கருத்து; "மல்லைச்செல்வ வடமொழி மறைவாணர் வேள்வியுள் நெய்யழல் வான்புகைபோய்த் திடவிசும்பிலமரர்நாட்டை மறைக்குந்தண் திருப்புலியூர்" (8—9—8.) என்ற திருவாய்மொழியை அடியொற்றி யருளிச்செய்கிறபடி. ஹோமாக்நிகளிற் கிளர்ந்த தூமம் ஆகாசமெங்கும் பரவி மறைந்திருக்கப்பெற்ற திருநறையூரில் பிரமன் சிவன் முதலான தெய்வங்கள் பணிந்து போற்ற ஸ்வாமியாக எழுந்தருளியிருக்குமெம்பிரானுடைய இணையடியே அடை நெஞ்சே!. .... (கூ)

திண்களக மதிள்புடைசூழ் திருநறையூர் நின்றானை *
வண்களக நிலவெறிக்கும் வயல்மங்கை நகராளன் *
பண்களகம் பயின்றசீர்ப் பாடலிவை பத்தும்வல்லார் *
விண்களகத் திமையவராய் வீற்றிருந்து வாழ்வாரே. (க0)

திண்	திடமாய்
களகம்	(சுண்ணாம்புச்) சாந்து இடப்பெற்றதான
மதின்	திருமதிளாலே
புடை சூழ்	நாற்புறமும் சூழப்பட்ட
திரு நறையூர்	திருநறையூரில்
நின்றானை	எழுந்தருளியிருக்கு மெம்பெருமான் விஷயமாக,
வண் களகம்	அழகிய அன்னப்பறவைகள்
நிலவு எறிக்கும்	நிலாப்போல் விளங்கப்பெற்ற
வயல்	கழனிகளை யுடைத்தான
மங்கை நகராளன்	திருமங்கை நாட்டுக்குத் தலைவரான ஆழ்வார்
பண்கள் அகம் பயின்ற	பண்களுக்குள்ளே ஸாரமான பண்ணிலே அருளிச்செய்த
சீர்	சீர்மை பொருந்திய

http://acharya.org

பாடல் இவை பத்தும்	இப்பாசுரங்கள் பத்தையும்	இமையவர் ஆய்	நித்யஸூரிகளோடு ஒரு கோஷ்டியாய்
வல்லார்	ஓதவல்லவர்கள்	வீற்றிருந்து	பெருமைபெறவிருந்து
விண்கள் அகத்து	மேலுலகங்களுள் முக்கியமான பரமபதத்தில்	வாழ்வார்	வாழப்பெறுவர்.

ஈ. **—இத்திருமொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். இப்பாட்டில் அடிதோறும் களகமென்னுஞ்சொல் திரிபாக அமைக்கப்பட்டுள்ளது.

திண்களகமதிள் = இங்குக் களகமாவது சுண்ணாம்புச்சாந்து; ஞானசம்பந்தர் பாடிய தேவாரம் முதல் திருமுறை, சீர்காழிப்பதிகத்தில்—"களகப்புரிசை கவினார்சாரும் கலிக்காழி" என்றவிடத்து இப்பொருளில் பிரயோகங்காண்க.

வண்களக நிலவெறிக்கும் = இங்குக்களகமாவது ஹம்ஸபக்ஷி; 'கலஹம்ஸ:' என்னும் வடசொல்லின் மரூஉ; "வியன் களகத் தேரேறி வேதாவும் வேண்டு வழிச்செல்ல" (பழம்பாட்டு) என்றவிடத்து இப்பொருளிற் பிரயோகங்காண்க. இதற்கு வேறுவகையாகவும் உரைக்கலாம்;—களகம்—நெற்கதிர்; கம்—நீரை, களம்—இடமாகக்கொண்டது; (மருதநிலம்.) அதன் முதன்மைப் பயிர் நெல் ஆகையால், களகம்—நெற்பயிர் என்னும் பொருள் பெறலாம். இப்பொருளும் வியாக்கியானத்திற் கொள்ளப்பட்டதே. 'கலம:' என்ற வடசொல் திரிபு என்னவுமாம்.

ஈற்றடியில், 'விண்கள் அகத்து' எனப்பிரித்துரைப்பதல்லாமல், 'விண் களகத்து' என்றுகொண்டுமுரைக்கலாம்: களம் + அத்து, களகத்து; (நன்னூல்—உருபுபுணரியல், கக.) சபையின் கண் என்றபடி. 'களம்' என்ற சொல் சபையெனப்பொருள்படுதலை, "உளரெனினு மில்லாரோடொப்பர் களனஞ்சிக், கற்ற செலச்சொல்லாதார்" (எகூ௦) என்ற குறட்பிரயோகத்தாலு முணர்க.

இத்திருமொழி கற்றவர்கள் பரமபதத்திலே போய் நித்யஸூரிகளோடே ஒரு கோவையாய் எம்பெருமானை நித்யாநுபவம் பண்ணப்பெறுவர்கள் என்றாராயிற்று. .... (க௦)

அடிவரவு:—பெடை கழி சுனை துன்று அகில் பொன் சீர் குலை மறை திண் கிடந்த.

ஒன்பதாந் திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆரம்பத்து—பத்தாந்திருமொழி,

கிடந்த நம்பி.

[இதுவும் திருநறையூர்த் திருப்பதிகம்]

உரையவதாரிகை:—இத்திருமொழியின் திருநாமப்பாட்டொழிய ஒன்பது பாசுரங்களும் 'நமோ நாராயணமே' என்ற மகுடத்தால் முடிவன. இவ்வாழ்வார் திருநறையூர் நம்பிபக்கலிலே திருவிலச்சினை [சங்கசக்ராங்கநம்] பெற்றாரென்று ப்ரஸித்தமாயிருக்கும்; (இவ்வாழ்வார்து சரித்திரத்தில் அதன் விவரணம் காண்க.) இம்முகத்தாலே, திருநறையூர்நம்பி இவ்வாழ்வார்க்கு ஆசார்யராகிறார். ஆசார்யருடைய திருநாமமே அநுஸந்தேயமாதலால் பெரிய திருமந்த்ரமாகிற அத்திருநாமத்தைத் தாமும் அநுஸந்தித்துப் பிறர்க்கும் கற்பிக்கிறாராய்செல்லுகிறார் இத்திருமொழியில். இங்குப் பெரிய திருமந்திரத்தில் ஆதியந்தங்களை விட்டிருந்தாலும் அவையும் சேர்ந்த திருவஷ்டாக்ஷரமே இங்கு விவக்ஷிதமாகும். கீழ் "பேசுமின் திருநாம மெட்டெழுத்தும்" (1—8—9) என்ற பாசுரத்தின் விரிவுரையில் இவ்விஷயத்தின் விவரணங்கள் கண்டுகொள்க.

கிடந்தநம்பி குடந்தைமேவிக் கேழலா யுலகை
யிடந்தநம்பி * எங்கள்நம்பி எறிஞரரணழிய *
கடந்தநம்பி கடியாரிலங்கை உலகை யீரடியால் *
நடந்தநம்பி நாமம் சொல்லில் நமோநாராயணமே. (க)

குடந்தை	திருக்குடந்தையிலே
மேவி	பொருந்தி
கிடந்த	பள்ளிகொண்டிருக்கின்ற
நம்பி	ஸ்வாமியாயும்
கேழல் ஆய்	வராஹரூபியாகி
உலகை	பூமியை
இடந்த	(அண்டபித்தியில் நின்றும்) ஒட்டு விடுவித் தெடுத்த
நம்பி	ஸ்வாமியாயும்
எங்கள் நம்பி	எங்களுடைய குறைகளைத் தீர்க்க வல்லனாயும்
எறிஞர்	சத்ருக்களினுடைய
அரண்	கோட்டை
அழிய	அழியும்படியாக

கடியார் இலங்கை	கடோரமான தன்மையுடைய அரக்கர் வாழுமிலங்கையை
கடந்த	நாசஞ்செய்த
நம்பி	ஸ்வாமியாயும்
உலகை	லோகங்களை
ஈர் அடியால்	இரண்டடியாலே
நடந்த	அளந்துகொண்ட
நம்பி	ஸ்வாமியாயுமிருக்கிற ஸர்வேச்வரனுடைய
நாமம்	திருநாமத்தை
சொல்லில்	சொல்லப்பார்க்கில்
நமோ நாராயணமே	(அது) பெரிய திரு மந்திரமாகும்.

http://acharya.org

* * *—வராஹரூபியாய்த் திருவவதரித்துப் பூமியை உத்தரித்த விடாய்த்திரவும், இராமாவதாரம் செய்தருளி அரக்கரையழித்து இலங்கையைப் பாழ்படுத்தின சிரமந்தீரவும், மாவலியின் செருக்கை யடக்கவேண்டி உலகமெல்லாந்தாவின ஆயாஸந்தீரவும் திருக்குடந்தையிலே திருக்கண் வளர்ந்தருளாநின்ற பெருமான் திருநறையூரில் திகழாநின்றான்; அவனுடைய திருநாமத்தை அநுஸந்தித்து வாழ்வோமென்றாராயிற்று.

ஒன்பது பாசுரங்களிலும் திருநறையூர்ப் பிரஸ்தாவமே இல்லையாயினும், மேல் திருநாமப்பாட்டில் "நறையூர் நெடுமாலை நாவிற்பரவி நெஞ்சிற்கொண்டு நம்பி நாமத்தை" என்று தலைக்கட்டுதலால் இப்பாசுரங்கள் எல்லாவற்றுக்கும் திருநறையூர்நம்பியே இலக்கு என்பது விளங்கும். .... (க)

விடந்தானுடைய வரவம் வெருவச் செருவில்முனநாள் * முன்
தடந்தாமரை நீர்ப்பொய்கை புக்கு மிக்கதாளாளன் *
இடந்தான் வையங் கேழலாகி உலகை யீரடியால் *
நடந்தானுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே. (உ)

முனநாள்	முன்பொருகால்,
விடம் உடைய அரவம் தான்	விஷத்தையுடைத்தான காளியநாகமானது
வெருவ	அஞ்சும்படியாக
முன்	இடைப்பிள்ளைகளின் முன்னே
தட தாமரை பொய்கை நீர் புக்கு	பெரியதாமரைகளையுடைய (யமுனையின் ஒரு மடுவின்) நீரில்புகுந்து
செருவில்	(அந்த நாகத்தோடு) போர்செய்ததில்
மிக்க	மேன்மைபெற்ற
தாளாளன்	திருவடிகளையுடையவனும்
கேழல் ஆகி	வராஹமூர்த்தியாகி
வையம்	பூமியை
இடந்தான்	குத்தியெடுத்துக் கொணர்ந்தவனும்
ஈர் அடியால்	இரண்டடியாலே
உலகை	உலகங்களை
நடந்தானுடைய	அளந்துகொண்டவனுமான எம்பெருமானுடைய

நாமம் சொல்லில் நமோநாராயணமே—.

* * *—யமுனையின் ஓர் மடுவிலிருந்துகொண்டு விஷாக்நியினால் அனைவரையும் தபித்துவந்த காளியநாகத்தின் கொழுப்பையடக்கினவனும், வராஹாவதாரமும் த்ரிவிக்ரமாவதாரமும் செய்தருளிப் பூமியை ஸ்வாதீநப் படுத்திக்கொண்டவனுமான பெருமானுடைய திருநாமம் திருவஷ்டாக்ஷரம்.

விஷமென்னும் வடசொல் விடமெனத்திரிந்தது. மிக்க தாளாளன்= காளியன் தலைமேல் திருவடிகளையிட்டு நர்த்தனமாடினவனென்றவாறு.

"பொய்கையிலே போய்ப்புக்கு அவனைத் துரத்தின ஏற்றத்தையுடையவன்" என்னும் வியாக்கியானமிருப்பதால் இப்பொருளுக்குச்சேர "தாடாளன்" என்ற பாடமும் கொள்ளத்தக்கதே. .... (உ)

பூணாதனலும் தறுகண்வேழம் மறுக * வளைமருப்பைப்
பேணான்வாங்கி அமுதங்கொண்ட பெருமான் திருமார்வன் *
பாணுவண்டு முரலுங் கூந்தல் ஆய்ச்சிதயிர் வெண்ணெய் *
நாணாதுண்டான் நாமம் சொல்லில் நமோநாராயணமே. (௯)

பூணாது — கட்டுத்தறிக்குப் பிடிபடாமல்
அனலும் — சீறிக்கொண்டிருப்பதும்
தறு கண் — வட்டமான கண்களையுடையதுமான
வேழம் — (குவலயாபீடமென்னும்) யானையானது
மறுக — குடல்குழம்பும்படி
பேணான் — அதை மதியாதவனாய்
வளை மருப்பை — (அதன்) வளைந்த கொம்புகளை
வாங்கி — பறித்தெறிந்தவனும்
அமுதம் கொண்ட பெருமான் — (கடலினின்றும்) அமுதத்தைக் கடைந்தெடுத்த பெருமை பொருந்தியவனும்
திரு மார்வன் — பிராட்டியை மார்பிலுடையவனும்
வண்டு — வண்டுகளானவை
பாண் ஆ — இசையிலே பொருந்தும்படி
முரலும் — ஒலிசெய்யப்பெற்ற
கூந்தல் — மயிர்முடியையுடையளான
ஆய்ச்சி — இடைச்சியாகிய யசோதையினுடைய
தயிர் வெண்ணெய் — தயிர்வெண்ணெய் முதலியவற்றை
நாணாது — வெட்கமில்லாமல்
உண்டான் — (களவுசெய்து) உட்கொண்டவனுமாகிய எம்பெருமானது
நாமம் சொல்லில் நமோநாராயணமே—.

* * *—வில்விழவென்று வியாஜம் வைத்துக் கம்ஸனாலழைக்கப்பட்டு அவனது அரண்மனையை நோக்கிச்செல்லுமளவில், வாசலில் மதமூட்டி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீடமென்னும் மதயானை சீறிவர, அதனை யெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து அவ்யானையை உயிர் தொலைத்தவனும், கடலைக்கடைந்து அம்ருதத்தையெடுத்து அமரர்கட்குத் தந்தருளினவனும், * அமுதில் வரும் பெண்ணமுதைத் தனக்காக்கிக்கொண்டவனும், யசோதைப்பிராட்டி ஏராரிடைநோவ எத்தனையோர் போதுமாய்க் கடைந்து சேமித்துவைத்த தயிர் வெண்ணெய் நெய் பால் முதலியவற்றைக் களவுவழியிலே வாரியுண்டவனுமான பெருமானுடைய திருநாமம் திருவஷ்டாக்ஷரம்.

தறுகண்வேழம்=“ஜாதிப்ரயுக்தமான வட்டணிந்த கண்ணையுடைத்தாயிருக்கிற குவலயாபீடம்” என்பது வியாக்கியான வாக்கியம். ‘தறுகண்மை’ என்று அஞ்சாமைக்குப் பேராதலால் இங்குத் தறுகண் என்று முழுச்சொல்லாய் ‘ஒருவர்க்கும் அஞ்சாதிருந்த யானை’ என்று பொருளாகவுமாம்.

இரண்டாமடியில் “அமுதங்கொண்ட பெருமான்” என்றவிடத்திற்கு வியாக்கியான மருளாநின்ற பெரியவாச்சான்பிள்ளை, “கடலைக்கடைந்து அம்ருதத்தை வாங்கி அது புஜித்தார்க்கு வரக்கடவ ப்ரீதி தனக்குண்டாம்படி”

http://acharya.org

யிருந்தான் " என்று அருளிச்செய்திருப்பதுகொண்டு சிலர் " அமுதங் கொண்டுகந்த பெருமான் " என்று பாடமோதுவர்; அது மறுக்கத்தக்கதே; யாப்பிலக்கணத்திற்கு ஒவ்வாது. மேல் பதினோராம் பத்தில் (11—7—1.) "நீணாகஞ்சுற்றி நெடுவரைநட்டு ஆழ்கடலைப், பேணான் கடைந்து அமுதங்கொண்டுகந்த பெம்மானை " என்றுள்ள பாடம் இவ்விடத்திற்கு வேண்டா. ஆகில், பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியான வாக்கியம் பொருந்துமாறென்? எனில்; பொருந்தாமை யொன்றுமில்லை. 'உகந்த' என்பதற்குப்பொருளாக அருளிச்செய்தாரல்லர்; 'அமுதம் தந்த' என்னவேண்டியிருக்க, அங்ஙனருளிச்செய்யாமல் " அமுதங்கொண்ட " என்று தன்பேறாக ஆழ்வார் அருளிச்செய்திருப்பதற்குக் கருத்துரைத்தாரத்தனை. அவ்விடத்து அரும்பதவுரையாலும் இது விளங்கும்.

" பாணுவண்டு முரலுங்கூந்தலாய்ச்சி " என்றது—பூமாலைசூடிய கூந்தலாள் என்றபடி. நாணாது உண்டான் = 'வெண்ணெய் களவு செய்தோமென்பதற்காக யசோதை நம்மை எவ்வளவு பரிபவப்படுத்தினாலும் அது நமக்கு உவப்பே' என்று பரிபவங்களை போக்யமாகக்கொண்டு உண்டானென்கை. .... (௩)

கல்லார் மதிள்சூழ் கச்சிநகருள் நச்சிப், பாடகத்துள் *
எல்லாவுலகும் வணங்க இருந்த வம்மான் * இலங்கைக்கோன்
வல்லாளாகம் வில்லால்முனிந்த வெந்தை * விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் நமோநாராயணமே. (௪)

கல் ஆர் மதிள் சூழ் கச்சி நகருள்	கருங்கல்லால் கட்டப்பட்ட திருமதிள்களால் சூழப்பட்ட காஞ்சிபுரத்தில்
நச்சி	வஸிக்கவிரும்பி
எல்லா உலகும் வணங்க	லோகமெல்லாம் வணங்குமாறு
பாடகத்துள்	திருப்பாடகமென்னும் திருப்பதியில்
இருந்த	வீற்றிருக்கின்ற
அம்மான்	ஸ்வாமியும்,
இலங்கை கோன்	லங்காதிபதியான ராவணனுடைய
வல் ஆள் ஆகம்	மிகவும்பலிஷ்டமான சரீரத்தை
வில்லால் முனிந்த	வில்லாலே சிதியழித்த
எந்தை	ஸ்வாமியும்
விபீடணற்கு நல்லானுடைய	விபீஷணாழ்வான் விஷயத்தில் நன்மை புரிந்தவனுமான எம்பிரானது

நாமம் சொல்லில் நமோநாராயணமே—.

* * *—கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சியில் திருப்பாடகமென்னும் திருப்பதியில் எல்லாவுலகும் வணங்க வீற்றிருப்பவனும் இராவணனை நிக்ரஹித்து விபீஷணாழ்வானை அநுக்ரஹித்தவனுமான பெருமானுடைய திருநாமம் திருவஷ்டாக்ஷரம்.

பாடகம்—பெரியகாஞ்சிபுரத்திலுள்ள பாண்டவதூதர்ஸந்நிதி. 'பாடு அகம்' என்று பிரிக்க. பெருமை [illegible] [illegible] [illegible] [illegible]. [illegible] [illegible] பாண்டவதூதனாய்த் [illegible] [illegible] [illegible] [illegible]

http://acharya.org

ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறையொன்றைத் தோண்டுவித்து அதில் அனேகமல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளேயிருக்க வைத்து அப்படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற்பிளப்புக்களால் மேலேமூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸநமொன்றை அமைத்து அவ்வாஸநத்தில் கண்ணனைவீற்றிருக்கச் சொல்ல, அங்ஙனமே ஸ்ரீக்ருஷ்ணன் அதன்மேல் ஏறின மாத்திரத்திலே மூங்கிற்பிளப்புக்கள் முறிபட்டு ஆஸநம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில், அப்பெருமான் மிகப்பெரிதாக விச்வரூபமெடுத்துப் பல கைகளையும் கால்களையுங்கொண்டு எதிர்க்கவே அப்பிலவறையிலிருந்த மல்லர்கள் அழிந்தனர். அப்போது கொண்ட விச்வரூபத் திருக்கோலத்திற்கு ஸ்மாரகமாகப் பெரிய திருமேனியோடே ஸேவைஸாதிக்குமிடம் பாடகம்: பாடு—பெருமை. அகம்—ஸந்நிதி. ("அரவுநீள் கொடியோனவையுளாசனத்தை அஞ்சிடாதே யிட, அதற்குப் பெரியமாமேனி அண்டமூடுருவப் பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்" என்ற (பெரியதிருமொழிப்) பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்ட திருமேனி வளர்த்தியோடே ஸேவைஸாதிக்குமாறு காண்க. .... (௪)

குடையா வரையால் நிரைமுன்காத்த பெருமான் * மருவாத
* விடைதானேழும்வென்றான் கோவல்நின்றான் * தென்னிலங்கை
அடையாவரக்கர் வீயப்பொருது மேவி வெங்கூற்றம் *
நடையாவுண்ணக் கண்டான்நாமம் நமோநாராயணமே. (ரு)

முன்	முன்பொருகாலத்தில்
குடை ஆம் வரையால்	குடையாகக்கொண்ட கோவர்த்தநகிரியினால்
நிரை	பசுக்கூட்டங்களை
காத்த பெருமான்	(பெருமழையில் நின்றும்) காத்தருளின பெருமானும்,
மருவாத விடை ஏழும் வென்றான்	எதிரிட்ட ஏழு எருதுகளையும் வலியடக்கினவனும்
கோவல் நின்றான்	திருக்கோவலூரில் நின்றதிருக்கோலமாயிருப்பவனும்
தென் இலங்கை	தென்னிலங்கையிலிருந்தவர்களாய்
அடையா	தன்னைப்பணியாதவர்களான
அரக்கர்	ராக்ஷஸர்கள்
வீய	அழியும்படி
பொருது	போர்புரிந்து
வெம் கூற்றம்	கொடியம்ருத்யுவானவன்
மேவி	(அஞ்சாமல்) பொருந்தியிருந்து
நடை ஆ	இதுவே காரியமாக
உண்ணக் கண்டான்	(இலங்கையைப்) புஜிக்கும்படி செய்தவனுமான பெருமானுடைய

நாமம் சொல்லில் நமோநாராயணமே—.

* * *—இந்திரன், இடையர்கள் வழக்கப்படி தனக்கிட்ட பூஜையைக் கண்ணபிரான் விலக்கித் தானே அமுது செய்தானென்ற சீற்றத்தினால் ஏழுநாள் விடாமழை பெய்வித்தபோது ஒரு குடையெடுப்பாரைப் போலே மலையையெடுத்துப் பிடித்துக் கோவலரையும் கோநிரையையும் காத்தருளினவனும், நப்பின்னைப் பிராட்டியின் போகத்திற்கு இடையூறாயிருந்த ஏழுரிஷபங்களையும் வலியடக்கி

http://acharya.org

அவளை மணந்துகொண்டவனும், இலங்கையிற் புகுவதற்கு அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த யமன் அஞ்சாதே உட்புகுந்து ராக்ஷஸவர்க்கங்களைப் பக்ஷிக்குமாறு செய்வித்தவனும், இப்பெருமைகளெல்லாம் பொலியத் திருக்கோவலூரில் உலகளந்த திருக்கோலமாக ஸேவைஸாதிப்பவனுமான பெருமானுடைய திருநாமம் திருவெட்டெழுத்து. .... (௫)

காணவெண்கும்குரங்கும் முசுவும்படையா * அடலரக்கர்
மானமழிந்துநின்ற வென்றியம்மான் * எனக்கென்றும்
தேனும்பாலுமமுதுமாய திருமால் திருநாமம் *
நானுஞ்சொன்னேன்நமருமுரைமின் நமோநாராயணமே. (௬)

கானம் எண்கும்	காட்டுக்கரடிகளையும்	திரு மால்	திருமாலினுடைய,—
குரங்கும்	குரங்குகளையும்	எனக்கு	எனக்கு
முசுவும்	‘முசு’ என்னுஞ்சாதிக் குரங்குகளையும்	என்றும்	எப்போதும்
படை ஆ	சேனையாகக் கொண்டு	தேனும் பாலும் அமுதும் ஆய	பரமபோக்யமாயிருக்கின்ற
அடல் அரக்கர்	கொடிய ராக்ஷஸருடைய	திரு நாமம் நமோ நாராயணம்	திருநாமமாகிய பெரிய திருமந்திரத்தை
மானம்	செருக்கை		
அழித்து நின்ற	அழியச்செய்த	நானும் சொன்னேன்	நானும் உச்சரித்தேன்;
வென்றி அம்மான்	ஜயசீலனான ஸ்வாமியுமான	நமரும் உரைமின்	நம்மைச்சேர்ந்தவர்களும் சொல்லுங்கோள்.

* * *—அவாந்தரபேதங்களோடு கூடின வாநரஸமூஹங்களை ஸேனையாகக் கொண்டிருந்து ராவணாதி ராக்ஷஸருடைய செருக்கையடக்கி வெற்றிபெற்ற பெருமானுடைய திருநாமம் தேனும் பாலும் அமுதும்போலே பரமபோக்கியமானது; அதனை நான் அநுஸந்தித்து ஆநந்திப்பது போல என்னோடுஸம்பந்தமுடைய நீங்களும் அநுஸந்தித்து ஆநந்தியுங்கள் என்று ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியை நோக்கி யருளிச்செய்தாராயிற்று.

“[நானும் சொன்னேன்.] இதர விஷயங்களினுடைய பேரையே சொல்லிப்போந்த நானுமன்றோ சொன்னேன்; இனியதுகண்டால் எல்லார்க்குங் கொள்ளத் தட்டில்லையிறே. என்னோடுஸம்பந்தமுடையா ரெல்லாரும் இத்தையே சொல்லிப் போருங்கோள்.........ஆழ்வார்கள் கோஷ்டியில் இதொழியவேறொரு திருநாமமுண்டாக நினைத்திருப்பாரில்லை.” என்ற வியாக்யியான ஸ்ரீஸூக்திகள் காண்க.

நின்றவரையுங் கிடந்தகடலும் திசையுமிருநிலனும் *
ஒன்றுமொழியாவண்ணம் எண்ணிநின்றவம்மானார் *
குன்றுகுடையாவெடுத்த அடிகளுடையதிருநாமம் *
நன்றுகாண்மின்தொண்டீர் சொன்னேன் நமோநாராயணமே. (௭)

நின்ற வரையும் — ஸ்திரமாக நிற்கின்ற மலைகளும்
கிடந்த கடலும் — வற்றாதேயிருக்கின்ற ஸமுத்ரமும்
திசையும் — திக்குக்களும்
இரு நிலனும் — பரந்த பூமியும்
(ஆகிய இவையெல்லாம்)
ஒன்றும் ஒழியா வண்ணம் — சிறிதும் பாழாகாதபடி
எண்ணி நின்ற — ஸங்கல்பத்தாலே ப்ரவாஹரூபமாக நித்யமாக்கிக்கொண்டே வருகிற
அம்மானார் — ஸ்வாமியும்
குன்று — கோவர்த்தனமலையை
குடை ஆ எடுத்த அடிகளுடைய — குடையாகவேந்தின ஸ்வாமியுமானவனுடைய
திருநாமம் நமோநாராயணம்—;
தொண்டீர் — ஓ பக்தர்களே !,
நன்று சொன்னேன் காண்மின்.

* * *—பூமிக்கு ஆணியடித்தாற்போலே போகாதே நிற்கிற குலபர்வதங்கள், கரையை அதிக்ரமியாமல் கிடந்தவிடத்திலே கிடக்கிற கடல்கள், திசைகள், பரப்புடைத்தான பூமி ஆக இப்படிப்பட்ட பதார்த்தங்கள் ஒன்றும் ஒருகாலும் குறையவொண்ணாதென்று தன்ஸங்கல்பத்தாலே இவற்றை மேன்மேலும் உண்டாக்கிக் கொண்டிருக்கும் பெருமைவாய்ந்தவனும், கோவர்த்தனமென்னுங் கொற்றக்குடையேந்தினவனுமான ஸர்வேச்வரனுடைய திருநாமமாகிய திருவஷ்டாக்ஷரமே நமக்கு நன்று; தொண்டர்களே! அத்திருநாமத்தையே நான் அநுஸந்தியாநின்றேன். (நீங்களும் அதனையே சொல்லுங்கோளென்பது கீழ்ப் பாட்டிலிருந்து வருவித்துக் கொள்ளவுரியது.) .... (எ)

கடுங்கால்மாரி கல்லேபொழிய அல்லேயெமக்கென்று
படுங்கால் * நீயேசரணென்று ஆயரஞ்ச அஞ்சாமுன் *
நெடுங்காற்குன்றம்குடையொன்றேந்தி நிரையைச் சிரமத்தால் *
நடுங்காவண்ணம் காத்தான்நாமம் நமோநாராயணமே (அ)

கடு — கடுமையான
கால் — காற்றோடேகூடின
மாரி — மேகமானது
கல்லே பொழிய — கற்களையே வர்ஷிக்கையில்,
எமக்கு அல்லே என்று — '(இது) எங்களுக்குக் காளராத்ரியாகவேயிருக்கின்றது' என்று
படுங்கால் — நெஞ்சிலேபட்டு
ஆயர் — இடையர்கள்
நீயே சரண் என்று அஞ்ச — (எமக்கு) நீயே புகலாக வேணுமென்று சொல்லி அஞ்சியிருக்க,
அஞ்சாமுன் — அந்த அச்சத்தினுடைய காரியம் பலிப்பதற்கு முன்னே
நெடு கால் குன்றம் ஒன்று — சுற்று மலைகளையுடைத்தானவொரு கோவர்த்தன மலையை
குடை ஏந்தி — குடையாகவெடுத்துப் பிடித்து
நிரையை — பசுக்கூட்டங்களை
சிரமத்தால் — ஆயாஸத்தினால்
நடுங்கா வண்ணம் — கோவுபடாதபடி
காத்தான் — ரக்ஷித்த பெருமானுடைய
நாமம் நமோநாராயணம்—.

http://acharya.org

* * *—இந்திரன் பசிக்கோபத்தினால் கடுங்காற்றோடு கூடின கல்மழையைப் பெய்விக்க, எங்கும் இருள்மூடிப் போனதனால் 'அந்தோ! நமக்கு இது பிரளயத்தில் செல்லுகிற காளராத்திரியாயன்றோ இருக்கிறது; இவ்வாபத்திற்கு நாம் எங்ஙனே தப்பிப்பிழைக்கப் போகிறோம்!' என்று இடையர்களுடைய நெஞ்சிலே பட்டு 'நாங்கள் எங்கள் காரியத்துக்குக் கடவோமல்லோம்; நீ எங்களுக்கு ரக்ஷகனாகவேணும்' என்று பிரார்த்திக்க, அவர்களுடைய பயத்திற்கு அவகாசமின்றியே உடனே மலையைக் குடையாகத் தரித்துக் காத்தருளின பெருமானது திருநாமம் திருவெட்டெழுத்து.

“தான் அறிந்த ஆபத்தாம் விலக்காமையன்றிறே வேண்டுவது ரக்ஷிக்கைக்கு; ஸ்வாபாவிக ஸம்பந்தத்தில் கண்ணழிவில்லையே” என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தி இங்கு உணரத்தக்கது.

அல்—இரவு. சிரமம்—'ஶ்ரமஃ' என்னும் வடசொல்விகாரம். .... (௮)

பொங்குபுணரிக் கடல்சூழாடை நிலமாமகள் மலர்மா
மங்கை * பிரமன்சிவனிந்திரன் வானவர்நாயகராய *
எங்களடிகள் இமையோர்தலைவருடைய திருநாமம் *
நங்கள்வினைகள் தவிரவுரைமின் நமோநாராயணமே. (௯)

பொங்கு புணரி	மேன்மேலும் கிளர்கின்ற அலைகளையுடைய
கடல்	ஸமுத்ரத்தை
சூழ் ஆடை	தனக்குச் சுற்றிக்கொள்ளும் வஸ்த்ரமாகவுடையளான
நிலம் மா மகள்	பூமிப்பிராட்டிக்கும்
மலர் மா மங்கை	பெரிய பிராட்டியார்க்கும்
பிரமன்	நான்முகனுக்கும்
சிவன்	ருத்ரனுக்கும்
இந்திரன்	இந்திரனுக்கும்
வானவர்	(மற்றுமுள்ள) தேவர்களுக்கும்
நாயகர் ஆய	நிர்வாஹகனும்
எங்கள் அடிகள்	எங்களுக்கு ஸ்வாமியும்
இமையோர் தலைவருடைய	நித்யஸூரிகளுக்குத் தலைவனுமான பெருமானுடைய
திருநாமம் நமோநாராயணம்—; (அதனை)	
நங்கள் வினைகள் தவிர உரைமின்	நம்முடைய பாவங்கள் தொலையுமாறு சொல்லுங்கள்.

* * *—கிளர்ந்த திரையை உடைத்தாயிருக்கிற கடலை ஆடையாகவுடையளான பூமிப்பிராட்டி, பெரியபிராட்டியார், பிரமன், சிவன், இந்திரன், மற்றுமுள்ள தேவர்கள் இவர்கட்கெல்லாம் நாதன் என்பதே நாராயணநாமத்தின் அர்த்தமென்பது இப்பாட்டால் வெளியிடப்பட்டது. “துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்” என்று முதல் திருமொழியி லருளிச்செய்ததை ஸ்மரிப்பியா நின்றுகொண்டு 'நங்கள்வினைகள் தவிரவுரைமின் நமோநாராயணமே' என்றார். .... (௯)

வாவித்தடஞ்சூழ் மணிமுத்தாற்று நறையூர்நெடுமாலை *
நாவின்பரவி நெஞ்சில்கொண்டு நம்பி நாமத்தை *
காவித்தடங்கண் மடவார்கேள்வன் கலியனொலிமாலை *
மேவிச்சொல்ல வல்லார்பாவம் நில்லா வீயுமே. (௧௦)

http://acharya.org

வாவி	நடைவாவிகளாலும்
தடம்	தடாகங்களாலும்
சூழ்	சூழப்பட்டதும்
மணிமுத்தாறு	மணிமுத்தாற்றை யுடையதுமான
நறையூர்	திருநறையூரி லெழுந்தருளி யிருக்கிற
நெடுமாலை	ஸர்வேச்வரனை
நாவில்	நாவினால்
பரவி	துதித்தும்
நெஞ்சில் கொண்டு	நெஞ்சில் சிந்தித்தும்
நம்பி நாமத்தை	அந்தத் திருநறையூர் நம்பியின் திருநாமம் விஷயமாக,
காவி தடங்கண் மடவார் கேள்வன்	கருநெய்தற் பூப்போன்று பரந்த கண்களையுடைய மடவார்கட்கு விரும்பத் தருந்தவராயிருந்த
கலியன்	திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	இச்சொல்மாலையை
மேவி	விரும்பி
சொல்ல வல்லார் பாவம்	சொல்ல வல்லவர்களுடைய பாபங்கள்
நில்லா	நிற்கமாட்டாமல்
வீயும்	அழிந்துபோம்.

* * *—திருநறையூர் நம்பியின் திருநாமமாகிய திருவெட்டெழுத்தைக் குறித்துத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய இத்திருமொழியை ஓத வல்லவர்கள் ஸர்வபாபவிநிர்முக்தராய் நித்யாநுபவம் பண்ணப் பெறுவர்களென்று பயனுரைத்த பாசுரம் இது.

திருநறையூர் ஸந்நிதியருகிலுள்ள திவ்யபுஷ்கரிணிக்கு மணிமுத்தாறென்று திருநாமமென்ப. திருக்கோட்டியூரருகிற் பெருகும் மணிமுத்தாறு வேறு.

"காவித்தடங்கண் மடவார் கேள்வன்" என்றது முன்புற்ற நிலைமையைக் கணிசித்தாம்; இவ்விடத்திலே வியாக்கியானவாக்கியம் காண்மின்; [காவியித்யாதி.] முன்பு எனக்கு ஏற்றமாக நினைத்திருப்பது இது; இப்போது எனக்குப் பிறந்த செவ்வியும் கண்டிகோளே; இப்போது மநோவாக்காயங்கள் மூன்றுக்கும் இதுவே விஷயமானபடி கண்டிகோளே." .... (௧௦)

அடிவரவு:—கிடந்த விடம் பூணு நல் குடை காணம் நின்ற கடுங்கால் பொங்கு காவி கறவா.

பத்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரியதிருமொழி ஆறும்பத்து உரை
முற்றுப்பெற்றது.

http://acharya.org